www.padippakam.com

# மார்க்சிச முன்னோக்கு

சர்வதேச தொழிலாளவர்க்கத்தினைப்
பிரதிநிதித்துவப்படுத்தும் ரொக்சிய சஞ்சிகை

இஸ்ரேல் பலஸ்தீன விடுதலைஇயக்க
உடன்படிக்கை
தேசியவாதத்தின் முட்டுச்சந்தி

முதலாளித்துவ ஐரோப்பிய ஐக்கியமும்
நாணயமாற்று விகிதத்தின் உடைவும்

"சமர்" பத்திரிகையின் வேலைத்திட்டம்
ஒரு தேசியவாத தூக்குக்கயிறு

தொழிலாளவர்க்கமும்
பால்கன் பற்றிய பிரச்சினைகளும்

"சிந்தனைப்" பத்திரிகையின் பப்லோவாத
முகமூடி கிழிகின்றது பகுதி 2
சோவியத்யூனியனின் வரலாற்றுப்பாடங்கள்

...ான்காவது அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைப்பிரிவா...
...ரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் துவெளிநாட்டுக்கிளையின் வெளியீ...

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மார்க்சிச முன்னோக்கு

இதழ் 2 இல 1 ஐப்பசி 1993.

## உள்ளடக்கம்

இஸ்ரேல், பலஸ்தீன விடுதலைஇயக்க உடன்படிக்கை.
தேசியவாதத்தின் முட்டுச்சந்தி ........ 1

எமது நோக்கு
கிளாலியில் இராணுவ ஆக்கிரம்ப்பின் தொடர்ச்சி என்ன ........ 6

சிந்தனைப் பத்திரிகையின் பப்லோவாத
முகமூடி கிழிகின்றது. பகுதி 2
சோவியத்யூனியனின் வரலாற்றுப் பாடங்கள் ........ 8

"சமர்" பத்திரிகையின் வேலைத்திட்டம் ஒரு தேசியவாதத்
தூக்குக்கயிறு ........ 20

ஜேர்மனியில் இனவாத வளர்ச்சியும்
தொழிலாளவர்க்கத்தின் படிப்பினைகளும் ........ 29

தமிழ்மக்கள் மீதான 1983ன் படுகொலைகளுக்கு
பத்து வருடங்களுக்குப் பின்னால் ........ 34

முதலாளித்துவ ஐரோப்பிய ஐக்கியமும்
நாணயமாற்றுவிகிதமுறையின் முடிவும் ........ 40

பிரான்சில் முதலாளித்துவ நெருக்கடி ........ 47

ஏன் பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டார் ........ 51

தொழிலாளவர்க்கமும் பால்கன்
பற்றிய பிரச்சினைகளும் ........ 55

படிப்பகம்

www.padippakam.com

„Marxissa Munokku"
(*Marxist Perspective*, tamil trotskyist magazine)
© 1993 Arbeiterpresse Verlags- und Vertriebsges. mbH
Postfach 10 01 05, D-45001 Essen
Veröffentlicht im November 1993
Printed in Germany
ISSN 0942-525X / DM 6,-

படிப்பகம்

www.padippakam.com

# இஸ்ரேல், PLO உடன்படிக்கை தேசியவாதத்தின் ஓர் முட்டுச்சந்தி

பீற்றர்சுவாற்ஸ் (Peter Schwarz)
நான்காவதுஅகிலத்தின் அனைத்துலகக்குழுவின் காரியதரிசி

இஸ்ரேல் அரசாங்கமும், பி.எல்.ஓ தலைமையும் காசா, ஜெரிக்கோ (Gaza, Jericho) பிராந்தியங்களில் "வரையறுக்கப்பட்ட சுயஆட்சிக்காக" இணைந்து செய்துகொண்ட உடன்படிக்கை இருபகுதிகளாலும் "மத்தியகிழக்கில் அமைதிக்கான வரலாற்று நிகழ்வு" என வர்ணிக்கப்பட்டது. ஆனால் உண்மை இதுவல்ல.

கடந்த நாற்பது வருடங்களிற்கு மேலாக கசப்பான எதிரிகளாய் இருந்த இஸ்ரேல் பிரதமர் றபினையும் பி.எல்.ஓ தலைவர் அரபாத்தையும் ஐக்கியப்படுத்தியது, சியோனிசமும், பாலஸ்தீன தேசியவாதமும் அடைந்துள்ள முட்டுச்சந்தியாகும். இஸ்ரேலிலும், பாலஸ்தீனத்திலும், மத்தியகிழக்கு பூராவும் வளர்ச்சியடையும் சமூகசச்சரவுகளையும், பதட்டநிலையையும் முகம்கொடுக்கும்போது பாலஸ்தீன, இஸ்ரேல் முதலாளிகளின் பிரதிநிதிகள் தமது வர்க்கநலன்களின் பாதுகாப்பு கூட்டுழைப்பை கோருகின்றதென்ற முடிவிற்கு வந்தார்கள். இவ்வுடன்படிக்கை பாலஸ்தீன மக்களினதும், இஸ்ரேல் தொழிலாளவர்க்கத்தினதும் செலவில் செய்யப்பட்டுள்ளது. அவர்களது எரியும் சமூகப்பிரச்சனைகள் பாலஸ்தீனத்தின் சுயாட்சிக்கூடாகவோ அல்லது அப்பிராந்தியத்தில் ஓர் சிறிய அரசை உருவாக்குவதனூடாகவோ தீர்வு காணப்படமுடியாது.

உண்மையானதும், நிரந்தரமானதுமான அமைதி அனைத்து தேசியஇனங்களையும், மதங்களையும் சார்ந்த தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தி மத்தியகிழக்கில் ஐக்கியசோசலிச குடியரசுகள் நிறுவும் அடித்தளத்தில் மட்டுமே உருவாக்கப்படமுடியும்.

## பி.எல்.ஓ வின் அடிபணிவு.

பிரித்தானியபத்திரிகையான Financial Timesன் கருத்துப்படி "இவ்வுடன்படிக்கை இஸ்ரேலின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்கையில் ஓர் இனிய கனவாகும். அது அப்பிராந்தியத்திலுள்ள யூத குடியேற்றங்களை அப்படியே பேணிக்கொள்ளும் எல்லைகள், பாதுகாப்பு போன்றவற்றை முழுமையாக இஸ்ரேலின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதுடன் யெருசலேம்நகர் (இஸ்ரேல் இதை தனது பிரிக்கப்படமுடியாத தலைநகரமாய் கருதிக்கொள்கின்றது.) பற்றிய கதையை வெட்டிவிடுவதுடன் ஒரு பாலஸ்தீன அரசையும் நிராகரிக்கும்."

இவ்வுடன்படிக்கையை கைச்சாத்திடும்போது பி.எல்.ஓ தனது முன்னைய இலக்காகவிருந்த இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிலிருந்து பாலஸ்தீனர்களை விடுதலை செய்தல், அப்பிராந்தியங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் நாடு திரும்புதல், பாலஸ்தீனமக்களின் சுயநிர்ணயஉரிமை அனைத்தையும் நிராகரித்ததுடன் தென்னாபிரிக்காவின் பண்டுஸ்டான் அமைப்புடன் ஒத்த "சுயாட்சி" முறையை

படிப்பகம்

ஏற்றுக்கொண்டுள்ளது. ஒர் வரையறுக்கப்பட்ட "சுயஆட்சி" பிராந்தியங்களில் நிர்வாகம், உள்பாதுகாப்பிற்கான பொறுப்பை பி.எல்.ஒ எடுத்துள்ள வேளையில் மறுபக்கம் இஸ்ரேல் அரசாங்கத்தின் மேலாதிக்கம் சவால் செய்யப்படாததொன்றாக உள்ள நிலையின்கீழ் பி.எல்.ஒ, இஸ்ரேல் அரசின் பொலிஸ்படையாக மாறியுள்ளது.

பாலஸ்தீன பொலிஸ்காரர்கள் இஸ்ரேல் இராணுவத்தின் பொறுப்பை எடுத்துள்ளதுடன் ,எதிர்காலத்தில் கல்லெறியும் பாலஸ்தீன இளைஞர்களை அவர்கள் சுட்டுத்தள்ளும் ஆபத்தும் உள்ளது. இன்ரிபாடாவின் மையம் என்றும், இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் பலமான இடமென்றும் குறிப்பிடப்படும் காசா பிராந்தியத்தில் இவ் ஆபத்து மிகத்தெளிவாய் வெளிப்பட்டுள்ளது. 4லிலிருந்து 6 மைல் அகலமும், 25 மைல் நீளமும் கொண்ட காசா பிராந்தியத்தில் 800.000 பாலஸ்தீனியர்கள் மிக மோசமான நிலைமையின்கீழ் உள்ள அகதிமுகாம்களில் ஒன்றாக குவிக்கப்பட்டுள்ளனர். இதில் அரைவாசிக்கு மேலானோர் வேலையில்லாதுள்ளனர். வேலைசெய்வோரின் ஒரு வருட தலைவருமானம் 850 டொலராகும். இது இஸ்ரேலின் பத்திலொரு பகுதிகூட இல்லை. றபின் காசா பிராந்தியத்தை மூடியதனூடாக இஸ்ரேலினுள் 200.000 பாலஸ்தீனியர்களும், அவர்களது குடும்பங்களும் தமது உயிர்வாழ்விற்காக செய்த குறைந்த கூலியுழைப்பும் கொள்ளையடிக்கப்பட்டபின் இந்நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. இப்பிராந்தியத்தின் மூன்றிலொரு பகுதி 5.000 இஸ்ரேலிய குடியேற்றங்களின் கீழ் உள்ளது. இந்நிலைமை இந்த உடன்படிக்கையின்படி தொடர்ந்தும் இருக்கும்.

இம்மோசமான நிலைமையின்கீழ் பி.எல்.ஒ "அமைதியை உருவாக்கவும்" ,இன்ரிபாடாவை நிறுத்தவும் தற்போது கடமைப்பட்டுள்ளபோது என்ன நிகழும் என்பதை பார்ப்பது கடினமான ஒன்றல்ல.

ஜேர்மன் செய்திப்பத்திரிகையான Der Spiegel இவ்வுடன்படிக்கையை சாதகமாக வர்ணிப்பதனூடாக கீழ்கண்ட முடிவுகளிற்கு வருகின்றது. "ஒருவர் உறுதியாக கூறலாம், இஸ்ரேலின் கணக்கெடுப்பு மிகச்சரியாக் இருந்ததென்று. அரபாத் தற்போது தனது பாலஸ்தீன எதிரிகளுடன் முகம்கொடுப்பிற்குச் செல்லவேண்டும். இஸ்ரேலின் முன்னைய பிரதான எதிரியான அவர் இராணுவ ரீதியாக எதுவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது. ஏனெனில் அவரது தலைமையகம் இஸ்ரேலின் ஏவுகணைகள் சென்றடையக் கூடிய வலையத்தினுள் உள்ளது".

அரபாத்தின் பாதுகாப்பிற்கு காசாவும் ஆக்கிரமிக்கப்பட்ட பிராந்தியங்களின் ஏனைய நகரங்களான கீப்றோன் (Herbron), நபுளுஸ்,(Nablus), ராமல்லா;(Ramallah) ஒத்துவராதலால் பி.எல்.ஒ வின் உத்தியோகபூர்வமான தலைமையகமாக ஜெரிக்கோ தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நாடுகடந்து வாழும் மில்லியன் கணக்கான பாலஸ்தீனியர்களிற்கு இவ்வுடன்படிக்கை எதுவித தீர்வையும் முன்வைக்கவில்லை. எல்லைப் பாதுகாப்பை இஸ்ரேல் தீர்மானிப்பதால் "சுயஆட்சி பிராந்தியங்களில்" யார் நுழைய வேண்டும் என்பதை தீர்மானிக்க கூடிய நிலையில் அது இருக்கும். இக்காரணத்தினால் இவ்வுடன்படிக்கை லெபனான், ஜோர்டான் அகதிமுகாம்களில் பாரிய எதிர்ப்பைச் சந்தித்தது.

## தேசியவாதம் முட்டுச்சந்தியில்.

அரபாத்தின் அடிபணிவை பாலஸ்தீன முகாமிலுள்ள அவரது எதிர்ப்பாளர்கள் கூறுவதுபோல் அவரதும், அவரது நெருங்கிய சகாக்களின் காட்டிக்கொடுப்பாகப் பார்ப்பது மிகத் தவறானதொன்றாகும். இதற்கான காரணத்தை பி.எல்.ஒ வின் தேசியவாத வேலைத்திட்டத்தில் கண்டறிய வேண்டும். இன்று எந்தவொரு விதிவிலக்குமில்லாமல் எல்லா தேசியவிடுதலை இயக்கங்களும், எல்லாவற்றிற்கும் மேலாக தென்னாபிரிக்காவின் ஏ.என்.சி (A.N.C) எடுத்துள்ள பாதையையே அரபாத் பின்தொடர்கின்றார்.

1960-70 களில் தொழிலாளவர்க்க இயக்கங்கள் சர்வதேசரீதியாக ஸ்டாலினிச சீர்திருத்தவாத இயக்கங்களால் ஆளுமை செய்யப்பட்ட நிலையில் பெரும்பான்மையான இவ்விடுதலை இயக்கங்கள் தோன்றியதுடன் விரைவில் பிரபல்யம் அடைந்தன.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



**இஸ்ரேலின் எல்லை இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட பலஸ்தீனிய இளைஞன்.**

இந்தக்காலகட்டத்தில் ஸ்டாலினிச சீர்திருத்தவாத அதிகாரங்களினால் பலமிழந்திருந்த தொழிலாளவர்க்கத்தை அணிதிரட்டுவதற்கான அரசியல் போராட்டத்தை நடாத்துவதிலும் பார்க்க தேசியவிடுதலைக்கான ஆயுதப்போராட்டம் ஒப்பீட்டுரீதியில் வெற்றிகரமாகத் தோற்றமளித்தது.

1968 பங்குனி மாதத்தில் ஆறுநாள் யுத்தத்தில் அரபுஅரசுகள் அடைந்த மோசமான தோல்வியை தொடர்ந்து ஜோர்தான் நாட்டின் எல்லை நகரமான கரமே (Karameh)இல் இருந்த இஸ்ரேல் இராணுவத்தின் மேலான வெற்றிகரமான தாக்குதல் அரபாத்தின் அல்பாத்இயக்கம் பிரபல்யம் அடைவதற்கான அடித்தளத்தை உருவாக்கிக்கொடுத்தது.

இந்த தேசியஇயக்கங்கள் பெற்ற வெற்றிகள் குறிப்பிட்ட புறநிலை நிபந்தனைகளுடன் இணைந்துள்ளது. சோவியத்யூனியனும், வேறு பல்தேசிய முதலாளித்துவ ஆட்சிகளும் ஏகாதிபத்தியங்களுடனான தமது சொந்த கொடுக்கல், வாங்கல்களிற்கான அழுத்தம் தெரிவிக்கும் ஓர் கருவியாக தேசியவிடுதலை இயக்கங்களை பாவித்ததுடன் வரையறுக்கப்பட்ட நிதி, ஆயுதஉதவிகளையும் வழங்கினார். இதில் பலதரப்பட்ட அராபிய அரசாங்கங்களிற்கிடையே ஊசலாடுவதில் தேர்ச்சிபெற்ற சிறந்த கலைஞராக அரபாத் திகழ்ந்தார்.

இந்த முன்நிபந்தனைகள் இன்று தொடர்ந்தும் இருக்கவில்லை. சோவியத்யூனியனின் உடைவு இந்த தந்திரோபாயங்களின் அடித்தளத்தினை வேரோடு அறுத்துவிட்டது. இத்துடன் மிக முக்கியமானது மக்கள்திரளினரின் சமூகப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தேசியசுதந்திரம்தான்

படிப்பகம்

www.padippakam.com

விழுத்திய விதியைத் தீர்மானித்தது. அரபு அரசாங்கங்கள் எல்லாவற்றின் முன் குவைத், சவுதிஅரேபியா- சதாம்குசைனுடன் உறவுகொண்டிருந்தபடியினால் அரபாத்தைத் தண்டித்ததுடன் பி.எல்.ஓ விற்கு வழங்கிய அனைத்து நிதி ஆதரவுகளையும் வாபஸ் வாங்கிக்கொண்டதுடன் குவைத்திலிருந்து பாலஸ்தீனியர்களை வெளியேற்றியதனூடாக பி.எல்.ஓவை நிதி நெருக்கடியின் விளிம்பில் தள்ளி விட்டனர். கடந்த காலத்தின் அனைத்து கொள்கைகளையும் நிராகரிக்கும் கோர்பாச்சேவின் "புதியசிந்தனை" யுடன் இனங்காணக்கூடிய முன்னணி நபரை அரபாத் தனது ஆலோசனைகளிற்கு அடித்தளமாகக் கொண்டுள்ளார். பி.எல்.ஓவின் உயர்மட்டத்தைச்சேர்ந்த மாமுட் அபாஸ் அல்லது அபுமாசான் (Mahmud Abbas, Abumazan)நோர்வேயில் நடந்த இரகசிய ஒப்பந்தங்களில் தலைமைப்பங்கு வகித்ததுடன் மொஸ்கோவில் தனது டாக்டர் பட்டப்படிப்பிற்கான ஆய்வினை பின்வரும் தலைப்பில் எழுதியிருந்தார். "சியோனிசம் பாலஸ்தீனத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு முற்போக்கான சக்தி".

## இஸ்ரேல் நெருக்கடியில்

பி.எல்.ஓவின் மிகவும் தாராளமான அடிபணிவின் மத்தியிலும் இஸ்ரேல் தனது பலவீனமான நிலைப்பாட்டில் நின்றே இவ்வுடன்படிக்கையைச் செய்துமுடித்தது. கடந்த ஆறுவருடங்களாக பாலஸ்தீன இளைஞர்களது இன்ரிபாடா (Intifada) எழுச்சியின் மேலான கொடூர ஒடுக்குமுறையும், இன்றுமட்டும் அதை வெற்றிகொள்ள முடியாததும் சியோனிச அரசை ஆழமான அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இதனுடன் இணைந்ததாக உலக பொருளாதார நெருக்கடியின் பெறுபேறாக கூர்மையடையும் பொருளாதார நெருக்கடியும் ரஷ்யாவிலிருந்து வெளியேறிய யூதமக்களின் பாரிய அலை வேலையில்லாதோரின் எண்ணிக்கையை 11%மாக உயர்த்தியுள்ளதுடன் இஸ்ரேலினுள் மோசமடையும் சமூகநெருக்கடிக்கும் வழிதிறந்துள்ளது.

இனி இஸ்ரேல் ஒருபோதும் அமெரிக்காவின் பண விநியோகத்தை பெற்றுக்கொள்வதனூடாக இப்பிரச்சனையில் இருந்து வெளியேற முடியாது. அமெரிக்கா சுயமாகவே ஆழமான சுயமான நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. அது சில அரபு ஆட்சிகளுடன் நேரடியான கூட்டிற்குப்போயிருப்பதால் மத்தியகிழக்கில் தரகர் வேலைக்கான இஸ்ரேல் அரசு மேலும் தேவையில்லை என்ற முடிவிற்கு வந்துள்ளது.

இப்பொருளாதார, அரசியல் பிரச்சனைகளை தீர்வு காண்பதென்பது இஸ்ரேல் அரசிற்கு ஓர் உயிர் வாழ்வு பிரச்சனையாக மாறியுள்ளது. பி.எல்.ஓ வுடனான உடன்படிக்கை சிரியா, ஜோர்தான், லெபனானுடன் செய்யப்படவிருக்கும் ஒத்த உடன்படிக்கைக்கான முதலாவது அத்தியாயமாக உள்ளது. அரபாத்தின் முக்கிய எதிரியாய் இஸ்ரேல் முகாமினுள் இருந்த றபின் (Rabin) அரபாத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கையை எடுத்துக்கொள்வதனூடாக இஸ்ரேல் முகம்கொடுக்கும் அழுத்தங்களை அளவிட முடியும்.

71 வயது நிரம்பிய அரசாங்கத் தலைவர் றபின் 1948ல் அராபியர்களிற்கெதிரான யுத்தத்தில் ஓர் கொரிலாப்பிரிவின் தளபதியாக இருந்தார். 1967ல் தற்போதைய ஆக்கிரமிக்கப்பட்டபிராந்தியங்களைக் கைப்பற்றுவதற்கு நேரடியாக தனிப்பட்டமுறையில் பங்குபற்றியவர். 1980ல் பாதுகாப்பு மந்திரியாக பதவி வகித்தபோது துனீஸ் (Tunis) இல் இருந்த பி.எல்.ஓ வின் தலைமையகத்தில் குண்டுவீச்சையும், அரபாத்தின் நெருங்கிய சகாவான அபுஜிகாத்தின் (Abujihad) படுகொலையையும் ஒழுங்கு செய்தார். அந்நேரத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட இஸ்ரேல் ஆயுதப்படைகளின் கடுமையான நடவடிக்கைகளை உருவாக்குவதற்கு பொறுப்பானவர். கடந்த வருடங்களில் றபின் இன்று மட்டும் நாடுதிரும்ப எதிர்பார்த்த வண்ணம் இருக்கும் 400 இஸ்லாமிய அடிப்படைவாதிகளை நாடுகடத்தியதுடன் ஆக்கிரமிக்கப்பட்ட பிராந்தியங்களை மூடியதனுடன் கிழக்கு லெபனானுக்கெதிரான இஸ்ரேலின் மின்னல் யுத்தத்தில் (Blitz Krieg) நூறாயிரக்கணக்கான பொதுமக்களை அகதிகளாக்கினார்.

பொருளாதார இலக்குகள் பி.எல்.ஓ வுடனான உடன்படிக்கைக்கு முக்கிய பங்கு வகித்தன. அரபாத் காசா பிராந்தியத்திற்கு ஐந்து பில்லியன் டொலர் கொண்ட ஓர் பொருளாதாரத்திட்டத்தை (Marshallplan) எதிர்பார்க்கும் வேளையில் உலகவங்கியினதும், வளைகுடா அரசுகளினதும், அமெரிக்க, ஐரோப்பாவினது ஆதரவுகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டுள்ளார். இஸ்ரேல் இத்திட்டத்திற்கு ஆதரவு கொடுத்ததுடன் ,அரபு நாடுகளுடன் தனது வர்த்தகத்தை ஊக்குவிப்பதனூடாக தனது சொந்த பொருளாதாரத்தை உயிர்ப்பிக்க முனைந்துள்ளது.

சோவியத்யூனியனிலும், கிழக்குஐரோப்பாவிலும் நம்பிக்கையோடு பிரேரிக்கப்பட்ட இதுபோன்ற திட்டங்களின் அனுபவங்கள் இவை புதைமணல் என்பதை

படிப்பகம்

www.padippakam.com

எடுத்துக்காட்டுகின்றது. மத்தியகிழக்கை ஆளுமை செய்யும் சமூக முரண்பாடுகளையும், தேசிய சச்சரவுகளையும் கடந்து முதலாளித்துவத்தின் கீழ் அப்பிராந்தியத்தை பொருளாதார ரீதியாக ஐக்கியப்படுத்துவது முழுமையாக நினைத்துப்பார்க்க முடியாததொன்றாகும்.

## மத்தியகிழக்கின் ஐக்கியசோசலிசக் குடியரசுகள்.

பாலஸ்தீன முகாமிலுள்ள அரபாத்தின் எதிர்ப்பாளர்கள் அவரது போக்கிற்கெதிராக எதுவித அரசியல் பிரதியீட்டையும் முன்வைக்கவில்லை. தற்போதைய முட்டுச்சந்திக்கு இட்டுச்சென்ற தேசியப்பாதையை தொடரச்சொல்லி அவர்கள் கோருகின்றனர். "Der Spiegel" சஞ்சிகையில் டமாஸ்கசை (Damascus) அடித்தளமாகக் கொண்டுள்ள P.F.L.P இன் தலைவர் ஜோர்ஜ் கபாஷ், அரபாத்தின் அடிபணிவைத் தாக்கினார். அவர் நூற்றுக்கணக்கான வயது குறைந்த இளைஞர்களின் வாழ்க்கையை பலிகொண்ட இன்றிபாடா போராட்டத்தை தொடர்ந்து நடாத்த கோருகின்றார். இம்முன்னோக்கு அரபாத்தினுடையதிலிருந்து வேறுபட்டதல்ல. அவர் கூறுகின்றார், "இஸ்ரேலுக்கு குருட்டுத்தனமான ஆதரவு தெரிவிப்பது அப்பிராந்தியத்தில் தமது நலன்களுக்கு அச்சுறுத்தலாக அமையுமென்பதை அமெரிக்கர்கள் அங்கீகரிக்கும்போதே அவர்கள் தமது நிலைப்பாட்டை மாற்றுவார்கள்".

காசா பிராந்தியத்தில் வர்க்க தீவிரமயமாக்கலினால் தனது ஆதரவைப்பெற்றுள்ள போர்க்குணம் கொண்ட காமாசின் (Hamas) இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கம் பி.எல்.ஓ விற்கெதிரான பயங்கரப் போட்டியாளனாக மாறியுள்ள போதிலும், அதுவும் முன்னையதைப்போல் முட்டுச்சந்திக்குப் போயுள்ளது. அப்பிராந்தியம் முகம்கொடுக்கும் பொருளாதார, சமூகப்பிரச்சனைகள் தீர்வுகாணப்படாவிட்டால் இவ் அபிவிருத்தி முன்னைய யூகோசிலாவியாவைப்போன்றதொரு கொடூரமான இரத்தக்களரிக்கு மட்டுமே இட்டுச்செல்லும்.

இப்பிற்போக்கு சித்தாந்தத்தின் உள்ளடக்கத்தை ஈரானில் கசப்பான முறையில் காணலாம். தெகிரானின் ஆட்சி போர்க்கோசங்களினூடாக குழம்பிய இளைஞர் தட்டுக்களை வென்றெடுப்பதில் தேர்ச்சி பெற்றுள்ளதுடன் அவர்களை தொழிலாளவர்க்க இயக்கங்களை ஒடுக்கப்பாவிப்பதற்கும், ஈரானிய முதலாளித்துவ ஆட்சியை உறுதிப்படுத்த நூற்றுக்கணக்கான இளைஞர்களை ஈராக்கிற்கெதிரான யுத்தத்தில் பீரங்கி தீனியாக்கியது.

மத்தியகிழக்கின் நெருக்கடி இஸ்ரேல், பாலஸ்தீன அரபுத் தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட தாக்குதலினூடாக மட்டுமே தீர்வு காணப்படமுடியும். தேசியவாதத்தினதும், சியோனிசத்தினதும் நெருக்கடியை இப்படியானதொரு தாக்குதலை நடாத்த பயன்படுத்தப்பட வேண்டும். அதன் இலக்கு உலக சோசலிசக்குடியரசுகளின் ஓர் பகுதியாக மத்தியகிழக்கு ஐக்கியசோசலிசக்குடியரசுகளை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டிருக்க வேண்டும்.

மத்தியகிழக்கு பூராவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் பிரிவுகளை கட்டி எழுப்புவதே இம்முன்னோக்கை யதார்த்தமாக்குவதற்கான ஒரு முன்நிபந்தனையாகும்.

www.padippakam.com

# எமது நோக்கு

## கிளாலியில் இராணுவ ஆக்கிரமிப்பின் தொடர்ச்சி என்ன?

செப்டம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் சார்பில் மந்திரி தொண்டமான் தமிழீழவிடுதலைப்புலிகளுடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொண்டுவிட்டு வந்ததும், வாராததுமாய் ஜனாதிபதி விஜயதுங்க, "இலங்கையில் பயங்கரவாதப்பிரச்சினையே தவிர தமிழர் பிரச்சினை கிடையாது". என்று இனவாதப் போர்க்கொடியை தூக்கிப்பிடித்தார்.

இதனது பின்னணி என்ன என்பதை தொண்டமான், "பதவியிலிருப்போர் வெளிவிடும் அறிக்கைகளை தனிமைப்படுத்தி வியாக்கியானம் செய்யக்கூடாது என்பது வரலாற்று அனுபவம். ஒருவர் இயற்கையாக இந்தமாதிரியான அறிக்கைகளை பொதுத் தேசியக்கொள்கையின் வரையறைக்குள்ளிருந்து பார்க்கவேண்டும். உலகின் எந்தப்பகுதியிலும் பதவியிலிருப்போர் பல காரணங்களுக்காக அறிக்கைகள் விட நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். உதாரணமாக மக்களின் மனோதிடத்தினை அதிகரிப்பதற்காக...... எனவே ஒருவரும் தங்களுடைய சொந்தக் கோணங்களிலிருந்து இந்தமாதிரியான அறிக்கைகளை அர்த்தப்படுத்தக் கூடாது". (The Island, 19.10.93, பக்கம் 1) என்று விளங்கப்படுத்துவதன் மூலம் அரசின் தேவையை வெளிப்படுத்தியுள்ளார்.

"மக்களின் மனோதிடத்தை அதிகரிப்பது" என்பது சர்வதேச நாணயநிதியத்தினதும் ,உலகவங்கியினதும் ஏகாதிபத்தியக் கட்டளைகளின் தாக்குதல்களை நிறைவேற்றுவதற்காக இனவாதத்தை சத்தியெடுப்பதாகும். இதன்மூலம் இந்தத் தாக்குதல்களுக்கெதிராக அணிதிரளும் தொழிலாளவர்க்கத்தினரையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் இன, மத, மொழி ரீதியாகப் பிரிப்பதாகும். இந்த ஏகாதிபத்தியத் தேவைதான் கிளாலியைக் கைப்பற்றுவதற்கென்று செப்டம்பர் மாதம் 25ம் திகதியிலிருந்து ஆறு நாட்களுக்குத் தொடர்ந்து தமிழ்மக்கள் மேல் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை "ஒப்பரேசன் யாழ்தேவி" (Operation Yarldevi) மூலம் நடாத்துவதற்கு காரணமாகவிருந்தது.

இந்தப் போரின் முடிவினை "எதிர்பாராத பேரிழப்புக்களுடன் சிறீலங்கா இராணுவம் பின்வாங்கியது". என அறிவித்த தமிழீழவிடுதலைப்புலிகள் உடனடியாகவே தங்கள் கோரிக்கைகளையும் முன்வைத்தனர். அது தமிழீழவிடுதலைப் புலிகளால் "அரசு நோக்கிய அரசு" நிறுவப்பட்டதையும் "தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசு நோக்கிய அரசை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளவேண்டிய இயல்பான தேவை சர்வதேசசமூகத்திற்கு ஏற்பட்டுள்ளது". (களத்தில் 8.10.1993) என்பதாகவும் இருக்கின்றது.

இது நேரடியாக ஏகாதிபத்திய சக்திகளை ஐக்கியநாடுகள் சபையின் மூலமாகவோ அல்லது வேறு எந்த நிறுவனங்கள் மூலமாகவோ இலங்கைப்பிரச்சினையில் தலையிடுவதற்கான பகிரங்க அழைப்பாகும். இப்படி ஒரு தலையீடு எந்த விதத்திலும் தமிழ்மக்களின் உண்மையான தேவைகளை தீர்க்கமாட்டாது என்பதுடன் இந்திய உபகண்டம் முழுமையும் காலனித்துவக் கொள்ளையை நடாத்துவதற்கு ஏகாதிபத்தியப் படைகளை வரவழைப்பதாகவே இருக்கும்.

சர்வதேசரீதியாக தமிழ் முதலாளித்துவ சக்திகளின் நோக்கமும் இதுவே. வைகாசி மாதத்தின் முடிவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளுடன் மசாசுசெட் மாநிலத்தில் (

படிப்பகம்

www.padippakam.com

Massachusetts) தமிழீழக்கொடியையும், அமெரிக்கக் கொடியையும் ஒரே கம்பத்தில் ஏற்றியதும் ஆவணிமாதத்தில் சர்வதேச தமிழர் சம்மேளனம் (International Federation Of Tamils) பிரித்தானியப் பிரதமர் "மேன்மைதங்கிய" ஜோன் மேயருக்கு (John Major) முறையிட்டதும் அதற்குப் பதிலாக அவர் "பிரித்தானிய அரசாங்கத்தின் கொள்கை மிகவும் தெளிவானது. நாங்களும் எங்களுடைய ஐரோப்பிய பங்காளிகளும் சிறீலங்காவில் நிரந்தரமான சமாதானத்தை அடைவதற்கான ஒரே வழி முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட அனைத்து கட்சிகளும் பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வொன்றை அடைவதுதான் என நம்புகின்றோம்". ( Network, Agust 1993) என பதிலளித்ததும் தமிழ் முதலாளித்துவ சக்திகள் ஒரு ஏகாதிபத்தியத் தீர்வுக்கு முயற்சி செய்வதை தெளிவாக்குகின்றது.

"ஒப்பரேசன் யாழ்தேவியி"ன் இறுதிநாட்களில் கொழும்பிற்கு பயணம்செய்த ஐரோப்பிய பாராளுமன்றத்தின் அங்கத்தவர் குழு வியஜதுங்காவுடன் நடாத்திய பேச்சுவார்த்தையில் விஜயதுங்கா "அரசியல்தீர்வு" ஒன்றின் மூலம் இலங்கைப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கான தயார் நிலையை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இது இலங்கைப் பிரச்சனையில் ஏகாதிபத்தியங்கள் இலங்கைஅரசு, தமிழீழவிடுதலைப்புலிகள், தமிழ் முதலாளித்துவ சக்திகள் அனைத்தும் ஒரு ஏகாதிபத்தியத் தீர்வுக்கான முயற்சிகளை தீவிரமாக்கியுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

இந்த நிலைமைகளில் தமிழ் தொழிலாளருக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் முன்னால் உள்ள கேள்வி இதுதான். தமிழீழவிடுதலைப்புலிகள் குறிப்பிடும் "அரசுக்குள் ஒரு அரசின்" வர்க்கத் தன்மை என்ன? தமிழ்மக்களுக்கு தனியரசு அமைப்பதற்கு இருக்கும் உரிமை என்பதிலும் தீர்மானமான பிரச்சினை, இந்த அரசு தமிழ்மக்களின் அடிப்படைப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமா, என்பதுதான். இல்லை தமிழீழவிடுதலைப்புலிகளின் சிறைகளில் ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகள் சிறைவைக்கப்பட்டிருப்பதும், முதலாளித்துவ ஆட்சியொன்றிற்கு அத்தியாவசியமான பொலீஸ், நீதிமன்றம், சிறைச்சாலை என்பவற்றை திறமையான முறையில் நிர்மாணிப்பதுவும் தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளுடன் சம்பந்தப்படவில்லை. பதிலாக இவை வர்க்கப்போராட்டத்தில் தொழிலாளர்களையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் அடக்கியொடுக்குவதற்கான முதலாளித்துவ அரசின் இயந்திரங்கள். அத்துடன் பல தேசியநிறுவனங்களின் சுரண்டலுக்கான திறமையான நிபந்தனைகளை உருவாக்குவதற்கு அத்தியாவசியமானவை.

தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் வர்க்கப்போராட்டத்துடன் பின்னிப் பிணைந்தது. தொழிலாளவர்க்கத்தின் நேரடித்தலையீடின்றி இந்தக் கோரிக்கைகள் வெல்லப்பட முடியாதவை.

தமிழ், சிங்கள தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்தினால் முதலாளித்துவத்திற்கு முடிவு கட்டுவதனால் மட்டுமே சாத்தியமாகக் கூடியது. உணர்மையுள்ள தொழிலாளர்களினதும், இளைஞர்களினதும், ஒடுக்கப்பட்ட மக்களினதும் இன்றைய உடனடிப்பணி இந்த தேசியவாத வேலைத்திட்டத்தின் அனைத்து வடிவங்களிலிருந்தும் ஸ்தாபனரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் கணக்குத்தீர்ப்பதன் மூலம் ஒரு சர்வதேசவேலைத்திட்டத்திற்கு போராடுவது மட்டுமே.

படிப்பகம்

www.padippakam.com

## "சிந்தனை" பத்திரிகையின் பப்லோவாத முகமூடி கிழிகின்றது. பகுதி 2

# சோவியத்யூனியனின் வரலாற்றுப்பாடங்கள்.

**இக்கட்டுரைத்தொடரின் முதலாவது பகுதி மார்க்சிசமுன்னோக்கின் முதலாவது இதழில் பிரசுரமாகியிருந்தது."சிந்தனை"பப்லோவாத வேலைத்திட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பத்திரிகையென்பதனையும், இலங்கைத்தீவின் அனைத்து வகையறாக்களையும் சேர்ந்த திரிபுவாதச் சந்தர்ப்பவாதிகளது அப்புக்காத்தாக அது செயற்படுகின்றது என்பதையும் முதலாவது பகுதி நிறுவிக்காட்டியது. கோர்பாச்சோவின் அரசியலுக்கு புகழ்மாலை சூடும் சிந்தனையின் இலக்கு ஸ்டாலினிசத்தைப் பாதுகாப்பதுவும், "மார்க்சிசத்தின் முடிவினை" அறிவிப்பதுமாகும். இந்த இரண்டாவது பாகம் ஸ்டாலினிசத்தின் தோற்றத்தையும், அதற்கெதிரான ரொக்சியின் போராட்டத்தையும் உள்ளடக்கிய வரலாற்றுப் படிப்பினைகளை முன்னுக்கு கொண்டுவருகின்றது. ஸ்டாலினிசத்திற்கெதிராக ரொக்சி இடது எதிர்ப்பாளர்களை தோற்றுவித்து 70 ஆண்டுகள் நிறைவுபெறும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த வரலாற்றுப் படிப்பினைகளிற்கு வெளியே தொழிலாளவர்க்கத்திற்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் ஒரு அரசியல் முன்னோக்கு இல்லை.**

இரண்டுவருடங்களுக்கு முன்னர் கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத்யூனியனிலும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் வீழ்ச்சியையும், சோவியத்யூனியனின் உடைவினையும் "சோசலிசத்தின் தோல்வியென்றும்", மார்க்சிசத்தின் மரணமென்றும்" முதலாளித்துவச் சிந்தனையாளர்கள் பிரகடனப்படுத்தினார்கள். இன்று இவர்கள் அனைவரும் முதலாளித்துவம் மீண்டும் ஒருமுறை பூத்துக்குலுங்குவதையல்ல, இந்த உடைவுகளினால் உக்கிரமாக்கப்பட்ட உலகமுதலாளித்துவ அமைப்புமுறையின் முழுமையான நெருக்கடியைப்பற்றி ஒப்பாரி வைக்கின்றனர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவர்களுடன் இணைந்து பின்னணிபாடிய அனைத்து வகையறாக்களையும் சேர்ந்த "சோசலிஸ்டுக்களும்" இடதுசாரிகளும் இந்த நெருக்கடிகளின் நேரடி விளைவாக தீவிர வலதுசாரித்திருப்பத்தினை எடுத்திருக்கின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் வெளிவிடப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் ஏதோ . ஒருவிதத்தில் "மார்க்சிசத்தின் முடிவினை" எழுதுகின்றன.

"சிந்தனை" பத்திரிகை "கோர்பாச்சோவின் பெயரினை என்றும் நிலைக்கவைக்கும் சாதனைகளை" ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் இடிபாடுகளுக்கிடையில் தூக்கி நிறுத்த முயல்வதோடு சோவியத் தொழிலாள வர்க்கத்தின் எதிர்காலம் இந்த இடிபாடுகளுக்குள் தலையைத் தூக்கும் "புரட்சிகர சோசலிச மற்றும் ஜனநாயக சக்திகளில்" (சிந்தனை 1/92) தங்கியிருக்கின்றது என்று அறிவிக்கின்றது. லண்டனிலிருந்துவரும் "பனிமலர்" 1956ல் குருசேவ் பதவிக்கு வந்ததற்கு பின்னர்தான் சோவியத்யூனியனின் சீரழிவு ஆரம்பமாகியது என ஸ்டாலினிசப் பொய்களின் சவக்கிடங்குகளிலிருந்து உளுத்துப்போன எலும்புத்துண்டுகளைக் கிளறுகின்றது. சுவிற்ஸ்லாந்திலிருந்து வெளியாகும் "மனிதம்" பத்திரிகை மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், லீப்னெக்ட், லக்சம்பேர்க் போன்ற மார்க்சிசவாதிகளின் எழுத்துக்களை மட்டுமல்ல இவர்களுக்கு நேரெதிரான மார்க்சிச விரோதிகளான ஸ்டாலின், மாவோ இன்னும் பலரது பெயர்களை அடக்கிய பட்டியலைக் கொண்டோரது எழுத்துக்களையும் உள்ளடக்கி "மார்க்சிசத்தை மறுபரிசீலனை" செய்ய வெளிக்கிட்டிருக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



**ஒக்டோபர் புரட்சியின் மூன்றாவது ஆண்டின் நிறைவின் போது லெனினும், ரொக்சியும்.**

இந்தப்பட்டியலில் லியோ ரொக்சியின் பெயர் சேர்க்கப்படாதது தற்செயலானது மட்டுமல்ல இந்த மறுபரிசீலனையின் உள்ளடக்கம் என்ன என்பதனையும் வெளிப்படுத்துகின்றது.

"சிந்தனை" தனது "அதிகாரத்துவத்தின் புதியமுகங்கள்" என்ற கட்டுரையில் கோர்பாச்சோவை பாதுகாக்க முன்வருவது ஒரு விபத்தல்ல. இது சிந்தனை பிரதிநிதிப்படுத்தும் பப்லோவாத அரசியல் வேலைத்திட்டத்தின் வெளிப்பாடாகும். இந்த திரிபுவாத வேலைத்திட்டத்தின் ஒரு பிரதான பாகமாக இருந்தது ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் "சுயசீர்திருத்தம்" என்ற கொள்கையாகும். இது ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் அனைத்தும் மொஸ்கோவிலிருந்து ஏனைய நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட்கட்சிகள் வரை ஏகாதிபத்தியத்தின் அழுத்தத்தினால் ஒரு "புரட்சிகரப்பாத்திரத்தை" வகிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படும் என வலியுறுத்தியது. சிந்தனை கோர்பாச்சோவின் "சாதனைகளை" பற்றிப் பேசுவது ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வரலாற்றுக் குற்றங்களுக்கு மூடுதிரை போடுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினினது எழுத்துக்களிலிருந்து தங்களது தேசியவாதவேலைத்திட்டத்திற்கு இடதுசாரிச்சாயம் பூசுவதற்காக மேற்கோள்கள் காட்டிய தேசியவிடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் இன்று ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் வீழ்ச்சியின் நேரடி விளைவாக மார்க்சிச மறுபரிசீலனைக்கு புறப்பட்டிருக்கின்றார்கள். இது சோவியத், சீன அதிகாரத்துவங்களது ஸ்டாலினிச சித்தாந்தத்தை மார்க்சிசத்துடன் அடையாளம் காட்டிய அனைத்து தேசியவிடுதலை ஸ்தாபனங்களினதும் வேலைத்திட்டத்தினது முழுமையான வங்குரோத்தினது பரிதாபகரமான வெளிப்பாடாகும்.

மார்க்சிசத் தத்துவத்தினை உருவாக்கிய மார்க்ஸ், எங்கெல்ஸ் மட்டுமல்ல இவர்களிற்கு பின்னர் இத்தத்துவத்திற்கான போராட்டத்தை நடாத்திய லெனின், ட்ரொக்சி, லக்சம்பேர்க், லீப்க்னெட் போன்றவர்கள் தங்களை வெறும் தனிமனிதர்களாக அடையாளம் கண்டுகொள்ளவில்லை. இவர்களது போராட்டம் வெறும் பாண்டித்தியம் பெறுவதற்கான கலந்துரையாடல்களையும், ஆய்வுகளையும் மையமாகக்கொண்டதல்ல. மார்க்சிசம் சர்வதேசத்தொழிலாளவர்க்கத்திற்கான ஒரு வரலாற்று முன்னோக்கு. இந்த முன்னோக்கின் வேலைத்திட்டம் உலகசோசலிசப்புரட்சியை இலக்காகக்கொண்டு சர்வதேசத்தொழிலாளவர்க்கத்தை அணிதிரட்டுவதை மையமாகக்கொண்டது என்ற அடித்தளத்திலிருந்துதான் இவர்கள் எப்போதும் ஆரம்பித்தார்கள்.

www.padippakam.com

என்ற அடித்தளத்திலிருந்துதான் இவர்கள் எப்போதும் ஆரம்பித்தார்கள். இதனை நிறைவேற்றுவதற்கான முன்நிபந்தனையாக ஒரு உலகக்கட்சியை கட்டியெழுப்புவது என்பதுதான் இவர்களது போராட்டத்தின் அச்சாகவிருந்தது. இதனால்தான் மார்க்சும், எங்கெல்சும் முதலாவது அகிலத்தை ஸ்தாபித்தார்கள். லெனின், ட்ரொக்சி, லக்சம்பேர்க், லீப்க்னெட் இரண்டாம் அகிலத்தின் அங்கத்தவர்களாய் இருந்தனர். லெனினும், ட்ரொக்சியும் மூன்றாவது அகிலத்தின் ஸ்தாபகர்கள். ட்ரொக்சி நான்காவதுஅகிலத்தை நிர்மாணித்தார். இன்று இந்தப்பாரம்பரயத்தின் தொடர்ச்சியை நான்காவதுஅகிலத்தின் அனைத்துலகக்குழு பிரதிநிதிப்படுத்துகின்றது.

ஸ்டாலினிச அதிகாரத்துவம் உலகின் முதலாவது தொழிலாளவர்க்க அரசை அழித்தொழித்தது மட்டுமல்ல சர்வதேசதொழிலாளவர்க்கத்தின் பாரிய தோல்விகளுக்கும் தலைமை தாங்கியது. இந்த வரலாற்றைப்படித்து அதிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொள்வதன்மூலம் மட்டும்தான் தொழிலாளவர்க்கம் ஓரடிகூட முன்னேறிச் செல்லமுடியும்.

## அதிகாரத்துவத்தின் தோற்றம்

1917ன் போல்சவிக்புரட்சி உலகப்புரட்சியின் ஆரம்பம். ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவப்புரட்சி நடைபெறாத பின்தங்கிய நாடுகளில் ஜனநாயகப்புரட்சியின் தலைவனாக தொழிலாளவர்க்கம் மட்டும்தான் இருக்கமுடியும். அதுவும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிர்மாணிப்பதன்மூலம்தான் இந்த ஜனநாயகப்புரட்சியை நிறைவேற்றமுடியும். இந்த ஜனநாயகப்புரட்சியின் வெற்றியானது முதலாளித்துவ சொத்துடமை முறையை அழித்தொழிப்பதுடன் பின்னிப்பிணைந்திருப்பதனால் அது உடனடியாகசோசலிசப்புரட்சிக்கான திசையில் முன்னேறும். ட்ரொக்சியின் நிரந்தரப்புரட்சி தத்துவத்தின் இந்த மத்தியபுள்ளியின் அடித்தளத்தில்தான் ரஷ்யப்பாட்டாளிவர்க்கம் லெனினதும், ட்ரொக்சியினதும் தலைமை தனது பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தினை நிர்மாணித்தது.

சோவியத்யூனியனில் தொழிலாளவர்க்கப்புரட்சியினை உலகசோசலிசப்புரட்சியின் ஆரம்பம் என கணக்கிலெடுத்த லெனினும், ட்ரொக்சியும் ருஷ்யப்புரட்சியின் முழுமையான வெற்றி இந்தப்புரட்சியை முன்னேறிய முதலாளித்துவநாடுகளுக்கு நீடிப்பதிலேயே தங்கியிருக்கின்றது என்பதை வலியுறுத்தினர். முதலாவது உலகமகாயுத்தத்தைத் தொடர்ந்து வெடித்துக்கிழம்பிய புரட்சிகரப் போராட்டங்கள் ஒக்டோபர்புரட்சியை முன்னேறிய முதலாளித்துவ நாடுகளுக்கு விசேடமாக ஐரோப்பாவுக்கு நீடிக்கவிடாமல் 1918ல் ஜேர்மனியில சமூகஜனநாயகக்கட்சியின் முதலாளித்துவ அடிபணிவு தடைபோட்டது.

இந்த நிலைமைகளுக்கு முகம்கொடுக்கும் நோக்கில் தற்காலிகமாக "போர்க்கால கம்யூனிசம்" என்ற தானியங்களை நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யும்முறை உருவாக்கப்பட்டது. பின்னர் இதைத் தொடர்ந்து "புதியபொருளாதாரக்கொள்கை" அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த புதியபொருளாதாரக்கொள்கை சந்தைப்பொருளாதாரத்தை தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீண்டும் சோவியத்யூனியனில் அனுமதித்தது. விவசாயப்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு ஒரு வரையறைக்குட்பட்ட அனுமதி வழங்குவதன்மூலம் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. அதேநேரத்தில் வெளிநாட்டுவர்த்தகத்தின் ஏகபோகம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஏனைய தொழிற்துறைகள், நிலம் அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே தொடர்ந்தும் இருந்தது. போல்சவிக்புரட்சியின் தலைவர்களால் எதிர்பார்க்கப்பட்ட உலகப்புரட்சியின் தொடர்ச்சி தடைப்பட்டதின் தவிர்க்கப்படமுடியாத விளைவுகள் சோவியத்யூனியனில் பிரதிபலித்தது. பொருளாதாரப் பின்னடைவிலிருந்து தலைதூக்கமுடியாமல் தனிமைப்படுத்தப்பட்டதுடன் ஏகாதிபத்தியங்களின் அழுத்தங்களுக்கும் முகம்கொடுக்கவேண்டியிருந்தது. இதேநேரத்தில் வருடக்கணக்கில் நீண்ட உள்நாட்டுயுத்தத்தின் கொடூரங்கள் தொழிலாளவர்க்கத்தின் மனோநிலையில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. கலாச்சார ரீதியில் பின்தங்கிய விவசாயிகளை பெரும்பான்மையாகக் கொண்டிருந்த சோவியத் சமுதாயத்தினதும், "போர்க்கால கம்யூனிசம்", "புதியபொருளாதாரக்கொள்கை"

படிப்பகம்

www.padippakam.com

ஆகியவற்றினால் உருவாகிய புதிய சமூகத்தட்டுகளினது அழுத்தங்களினாலும் அதிகாரத்துவச் சீரழிவு சோவியத் அரசில் முளைவிடத்தொடங்கியதுடன் போல்சவிக்கட்சியிலும் பிரதிபலித்தது.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் தோற்றம் ட்ரொக்சிக்கெதிரான போராட்டத்தினால் உருவாகவில்லை மாறாக லெனினிற்கும், போல்சவிக்கட்சிக்கும் எதிரான சதியினால் உருவாக்கியது. லெனின் இந்த அதிகாரத்துவத்தின் தோற்றத்தை உணர்ந்துகொண்டதுடன் அதற்கெதிரான போராட்டத்தையும் ஆரம்பித்தார். லெனின் தனதுநோய்வாய்ப்படுதலுக்கு முன்னர் இறுதியாகப்பங்குகொண்ட பங்குனி, சித்திரை 1922ல் பதினோராவது கட்சிக்காங்கிரசில் அதிகாரத்துவத்தினது தோற்றத்தினையும், அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைப்பற்றியும் அவரது பேச்சின் மத்தியபுள்ளியாக தெரிவுசெய்திருந்தார். போல்சவிக்கட்சி ஆட்சிஅதிகாரத்தில் இருந்தாலும் அரசஇயந்திரமானது வேறுதிசையில் செல்வதையும், அது போல்சேவிக்கட்சியையும் அதேதிசையில் இழுத்துச்செல்வதையும் லெனின் தனது பேச்சில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

**"நாங்கள் மொஸ்கோவை எடுத்துக்கொள்வோமானால் 4700 கம்யூனிஸ்டுக்கள் உத்தியோகபூர்வமாக பொறுப்பான பதவியிலிருக்கின்றார்கள். அதேநேரத்தில் ஒரு பெரும் தொகையானோரைக் கொண்ட பாரிய அதிகாரத்துவ இயந்திரமும் இங்கிருக்கின்றது. அப்படியானால் நாங்கள் கேட்கவேண்டும்., யார் யாரை வழிநடத்துகின்றார்கள்? நான் சந்தேகப்படுகின்றேன் இந்தப்பெரும் தொகையானோரை கம்யூனிஸ்டுக்கள் வழிநடத்துகின்றார்கள்., என்பது முழுமையான உண்மையல்ல என்று. உண்மையைச் சொல்வதானால் அவர்கள் (கம்யூனிஸ்டுக்கள்) வழிநடத்தவில்லை வழிநடத்தப்படுகின்றார்கள்."**
(பதினோராவது கட்சிகாங்கிரசிற்கான அரசியல்அறிக்கை. லெனின் தொகுதிநால் 33 பக்கம் 278-80, ஆங்கிலப்பதிப்பு)

இந்த காங்கிரசில் பங்கு கொண்டதற்கு பின்னர் லெனினது மரணம்வரை சோவியத்அரசிலும், போல்சவிக்கட்சியிலும் அதிகாரத்துவ சீரழிவு ஆரம்பமாகிவிட்டது தொடர்பான ஆய்வுகளில் ட்ரொக்சியுடன் முழுமையாக உடன்பட்ட லெனின் கட்சிக்குள் அதிகாரத்துவத்திற்கெதிரான போராட்டத்தை நடத்துவதற்காக ட்ரொக்சியுடன் ஒரு கூட்டும் **(Block)** அமைத்துக்கொண்டார்.

லெனினது மரணத்திற்குப் பின்னர் அதிகாரத்துவத்திற்கெதிரான போராட்டத்திற்கு தலைமை தாங்கிய ட்ரொக்சி இதனது தோற்றத்திற்கான அடிப்படைக்காரணம் சோவியத் சமூகத்தின் முரண்பாடுகளிலிருந்து உருவாகியதே தவிர பதவியிலிருப்பவர்களது தனிமனித குணாம்சங்களிலிருந்து அல்ல என்பதை வலியுறுத்தினார். அதிகாரத்துவம் ஒரு சமூக நிகழ்வுப்போக்கு. இது மனிதர்களையும், பொருள்களையும் நிர்வகிக்கும் ஒரு திட்டவட்டமான அமைப்புமுறை என வரையறுத்தார். சோவியத் சமுதாயத்தின் பலதரப்பட்ட சமூகத்தட்டுக்களினதும் அவர்களது நாளாந்த நிரந்தர நலன்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகள் இதனது தோற்றத்திற்கு பாரிய பங்கு வழங்கியது. இந்த நிலைமைகளை சோவியத் சமுதாயத்தின் பெரும்பான்மையான மக்கள் திரளினது கலாச்சாரப்பின்னடைவான தன்மையானது இன்னும் சிக்கலாக்கியது.

சோவியத் அரசஇயந்திரம் அதிகாரத்துவத்தின் தோற்றத்திற்கான பிரதானமான அங்கமாகத் தொழிற்பட்டது. போல்சவிக்கட்சியினது திறமைவாய்ந்த அனுபவம்மிக்க அங்கத்தவர்களை உள்வாங்கிக்கொண்ட இந்த இயந்திரமானது அவர்களது அரசியல் பொறுப்புக்களை முழுமையாக நிராகரித்து வெறும் நிர்வாகிகளாக பயிற்றுவித்தது. இக்கட்சியின் அங்கத்தவர்கள் தங்களை அரசஇயந்திரத்தின் பிரதிநிதிகளாக அடையாளம் காட்டிக்கொண்டதுடன் இவர்களது தினசரி அதிகாரத்துவ நடைமுறைகளை கட்சியினுள் அறிமுகப்படுத்துவதன்மூலம் கட்சியினுள் அதிகாரத்துவத்தினை தோற்றுவித்தனர். அதேநேரத்தில் கட்சியிலிருந்து பெரும்பான்மையான தொழிலாளர்கள் அரசஇயந்திரத்தின் நிர்வாகத்திற்கு உள்வாங்கப்பட்டது தொழிற்சாலைகளிலிருக்கும்

படிப்பகம்

www.padippakam.com

கட்சிக்கிளைகளை பலவீனமாக்கியதுடன் கட்சியில் நிர்வாகிகளினதும், உத்தியோகத்தர்களினதும் எண்ணிக்கையை பாரியளவில் அதிகரித்தது. இது போல்சவிக்கட்சியை தொழிலாளர்களிடமிருந்தும், விவசாயமக்கள்தொகையினரிடமிருந்தும் பிரித்துத் தனிமைப்படுத்துவதற்கான ஆபத்தான நிலைமைகளையும் அதனைத் தொடர்ந்த அதிகாரமயப்படுத்தலுக்கான ஆபத்தினையும் அதிகரித்தது.

போல்சேவிக்கட்சியையும், ஒக்டோபர்புரட்சியையும் இந்த நிலைமைகளுக்குள் பாதுகாப்பது உடனடிப்பணியாக கருதிய ட்ரொக்சி இந்தப்பணியானது சோசலிசத்தை நிர்மாணிப்பதற்கான பணியுடன் பின்னிப்பிணைந்ததையும், கட்சிக்குள் உடனடியாக அதிகாரத்துவத்திற்கெதிரான போராட்டத்தின் அவசியம் இதிலிருந்துதான் எழுகின்றது என்பதை முன்வைத்தார். இந்தச்சிக்கலிலிருந்து மீள்வதற்கான வழிகளாக சோவியத்சமுதாயத்தின் பொருளாதாரவளர்ச்சி தொழிற்துறையில் புதியஉத்வேகத்துடன் செயற்படல், அத்துடன் கட்சிக்குள் தொடர்ச்சியாக தொழிலாளர்களை அணிதிரட்டல் என்பனவே ட்ரொக்சியின் போராட்டத்தின் முக்கிய அம்சமாகத் திகழ்ந்தன. அதேநேரத்தில் சோவியத்யூனியன் இந்த முரண்பாடுகளிலிருந்து முழுமையாக விடுபடுவதற்கான நிபந்தனைகளை ஐரோப்பாவிலும், சர்வதேசரீதியாகவும் உருவாகவிருக்கின்ற தொழிலாளவர்க்கத்தின் புரட்சிகளினால் மட்டுமே தீர்மானிக்கமுடியும் என்பதனையும் வலியுறுத்தினார்.

ட்ரொக்சியைப் பொறுத்தளவில சோவியத்யூனியனின் தலைவிதி உலகப்புரட்சியுடன் பின்னிப்பிணைந்திருந்தது. சோவியத்யூனியனின் உடனடிப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு விசேடமாக போல்சவிக்கட்சிக்குள் தோன்றிய அதிகாரத்துவத்திற்கெதிராக போராடுவதற்கு தொழிலாளவர்க்கத்தின் தலையீட்டை தனது மூலோபாயமாகக் கொண்டிருந்தார். கட்சிக்குள் அதிகாரிகளின் எண்ணிக்கையும், பலமும் அதிகரிக்கையில் இதற்கு முகம்கொடுக்க தொழிலாளர்களை கட்சிக்குள் அணிதிரட்டவேண்டியதின் அவசியத்தை உணர்ந்த ட்ரொக்சி போல்சவிக்கட்சியின் பழைய அனுபவம்மிக்க அங்கத்தவர்கள் அதிகாரத்துவச் சீரழிவிற்குட்படாமல் இருப்பதற்கான தடுப்புமருந்துகள் இல்லையென எழுதினார். 1923ல் அதிகாரத்துவச்சீரழிவிற்குட்பட்ட போல்சவிக்கட்சியின் "பழையவழி" (Oldcourse) யை நிராகரித்து "புதியவழி" (Newcourse) என ட்ரொக்சி நடாத்திய போராட்டத்தில் பின்வருமாறு எழுதுகின்றார்.:- **"இந்த அடித்தளமான தரவுகளினாலும், போக்குகளாலும் பழைய காரியாளர்களின் அதிகாரத்துவச் சீரழிவிற்கான ஆபத்துக்களை நாங்கள் முழுமையாக உணரவேண்டும். சித்தாந்த ரீதியாக குறுகிய நோக்கமடையாமலும், சந்தர்ப்பவாத சீரழிவிற்குட்படாமலும் இந்த ஆபத்துக்களுக்கெதிராக அவர்கள் தங்களுக்குள்ளே ஒரு உத்தரவாதத்தை உலகின் மிகத்திறமையான புரட்சிகரப் பள்ளிக்கூடத்தில் படித்ததினால் மட்டும் கொண்டிருக்கின்றார்கள் என்று கருதுவது அப்பத்தனமான வழிபாடாகும். இல்லை! வரலாறு மனிதனால் உருவாக்கப்படுகின்றது. ஆனால் மனிதர்கள் வரலாற்றை எப்பொழுதும் தங்களது உணர்மையினால் உருவாக்குவதில்லை, தங்களது சொந்த வரலாற்றைக் கூட. இறுதி ஆய்வுகளில் இந்த கேள்வி இரண்டு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளினாலேயே தீர்த்து வைக்கப்படும். அது ஐரோப்பாவில் புரட்சிகளின் வளர்ச்சி எங்களது சொந்த தொழிற்துறைவளர்ச்சியின் வேகம்."** (பக்கம்14, The New Course , 1923, By Leon Trotsky, NewPark, London)

இந்த அடித்தளத்தில் ட்ரொக்சி போல்சவிக்கட்சியின் பன்னிரண்டாவது காங்கிரசில் கட்சியினுள் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதற்கான பிரேரணையை

படிப்பகம்

www.padippakam.com



**1927ல் போல்சவிக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட இடது எதிர்ப்பாளர்கள்.**
**நிற்பவர்கள்: ராக்கொவ்ஸ்கி (Rakowski), டுரோபினிஸ், (Drobnis) பெலோபோர்டோ, (Beloborodow).**

**இருப்பவர்கள்: செரேபிரிக்காவ் (Serebriakow) ,ராடேக்,- (Radek) ரொக்சி, (Trotzki) பொகுலாவிஸ்கி, (Bogulawski).**

முன்வைத்தார். அதனை கட்சி பெரும்பான்மையான வாக்குகளினால் நிறைவேற்றியது. எனினும் கட்சியின் தலைமையில் ஆதிக்கம் செலுத்திய "மூவர் துரைத்தனம்" என ட்ரொக்சியால் வர்ணிக்கப்பட்ட ஸ்டாலின், சினோவியேவ், காமனேவ் ஆகியோர் இத்தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு முழுமையான விரோதத்தையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்தியதுடன் கட்சியையும் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். இத்தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான பலமாதங்கள் தொடர்ந்த போராட்டங்களின் இறுதியில் ட்ரொக்சி ஐப்பசி 1923ல் கட்சியின் சாதாரண அங்கத்தவர்களின் மத்தியிலும், தொழிலாளவர்க்கத்தினுள்ளும் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தனது முடிவினை மத்தியகுழுவிற்கு கடிதம்மூலம் தெரிவித்ததுடன் மனிதசமுதாயத்தின் வரலாற்றில் பிரதானமானதொரு கன்னைப்போராட்டத்தை பிரகடனம் செய்தார். இந்தக்கடிதம் எழுதிய ஒரு கிழமையின் பின்னர் கட்சியின் முக்கியமான 46 தலைவர்கள் இணைந்து ஒரு விஞ்ஞாபனத்தை மத்தியகுழுவிற்கு சமர்ப்பித்தனர். "46 பேரைக்கொண்ட மேடை" (The Platform Of the Fourty-Six) என அழைக்கப்பட்ட இந்த விஞ்ஞாபனம் கட்சியின் அதிகாரத்துவத்தலைமைக்கும், சாதாரண அங்கத்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் பிரமாண்டமான இடைவெளியையும் தொழிலாளவர்க்கத்திடமிருந்து கட்சி தனிமைப்பட்டும் போயிருக்கும் நிலைமையையும் தெளிவுபடுத்தியது.இந்த இரண்டு அரசியல் ஆவணங்களும் "இடது எதிர்ப்பாளர்களின்" தோற்றத்தினையும் அதில் ட்ரொக்சியினது தலைமையையும் அறிவித்தது.

"இடது எதிர்ப்பாளர்களின்" இந்தக்கட்சியை சீர்திருத்தம் செய்யும் போராட்டத்தின் சரியான தன்மையும், முக்கியத்துவமும் நிரூபிக்கப்பட்ட பொழுதும் எப்படி ஸ்டாலின், காமனேவ்,

படிப்பகம்

www.padippakam.com

காமனேவ், சினோவியேவ் குழுவினரின் ஆதிக்கம் கட்சியில் வலுப்பெற்றது என்பது சர்வதேச நிலைமைகளினாலேயே தீர்மானமாகியது. 1923 ஐப்பசி-கார்த்திகை மாதங்களில் இவர்களது செல்வாக்கிற்குட்பட்ட ஜேர்மன் கம்யூனிஸ்ட்கட்சியினது செயலற்ற தன்மையின் நேரடி விளைவாக ஜேர்மனியில் தொழிலாளவர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவது தோற்கடிக்கப்பட்டது. இது நேரடியாக சோவியத்யூனியனில் அரசினுள்ளும், கட்சியினுள்ளும் அதிகாரத்துவத்தைப் பலப்படுத்துவதன்மூலம் அதனது பேச்சாளனாகிய ஸ்டாலினது கரங்களையும் உறுதியாக்கியது. இதனைத் தொடர்ந்து 1924ம் ஆண்டின் மாரியில் ஸ்டாலின் தனது "தனிநாட்டு சோசலிசம்" என்ற வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இது போல்சவிக்கட்சியின் நிரந்தரப்புரட்சி வேலைத்திட்டத்திற்கு நேரெதிரானதுடன் மார்க்சிசத்தின் அடிப்படைக்கோட்பாடுகளுக்கு மேலான மோசமான தாக்குதலாகவும் முன்வைக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தின் அறிமுகத்துடன் இடது எதிர்ப்பாளர்களுக்கெதிரான மனிதவேட்டையும் ஆரம்பமாகியது. இடது எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்த ஆயிரக்கணக்கான கட்சி அங்கத்தவர்களும், தொழிலாளர்களும் வேட்டையாடப்பட்டு சைபீரியாவின் சிறைக்கூடங்களில் சித்திரைவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். ட்ரொக்சி 1927ல் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு 1928ல் மத்தியஆசியாவின் அல்மாஆட்டா (AlmaAta)விற்கு அனுப்பப்பட்டார். அங்கிருந்து 1929ல் துருக்கிக்கு நாடுகடத்தப்பட்டார். ட்ரொக்சிக்கு மீதான இந்த தாக்குதல்களினால் அவரது அரசியல் போராட்டத்தை அழித்தொழித்துவிட முடியவில்லை. 1929ல் துருக்கியில் ட்ரொக்சி சர்வதேசரீதியாக அதிகாரத்துவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த கம்யூனிஸ்டுக்களை அணிதிரட்டும் நோக்கில் "சர்வதேசஇடதுஎதிர்ப்பாளர்களை" நிறுவினார். (International Left Opposition)

## நான்காவதுஅகிலத்தின் ஸ்தாபனம்.

"தனிநாட்டுசோசலிசவேலைத்திட்டம்" இந்த நூற்றாண்டு முழுமையும் தொழிலாளவர்க்கம் பெற்றுக்கொண்ட மோசமான தோல்விகளுக்கு நேரடிக்காரணமாய் அமைகின்றது. இறுதியில் இந்த வேலைத்திட்டத்தின் தவிர்க்கமுடியாத விளைவுதான் சோவியத்யூனியனை அழித்தொழித்ததும், முதலாளித்துவஅறிமுகத்தை மேற்கொள்ள ஏகாதிபத்தியத்திற்கு வழிஅமைத்ததும் ஆகும். சோவியத்யூனியனின் தலைவிதி உலகப்புரட்சியுடன் பின்னிப்பிணைக்கப்பட்டிருக்கின்றது என்ற மார்க்சிச அடித்தளத்தை நிராகரித்த இந்த வேலைத்திட்டம் உலகப்பொருளாதாரத்தின் புறநிலையான வளர்ச்சிப்போக்குகளிலிருந்து விடுபட்டு சோவியத்யூனியனின் சிக்கல்களைத் தீர்க்கமுடியும் என்ற தேசியவாத அரசியலை அடித்தளமாகக்கொண்டிருந்தது. ஸ்டாலினைத் தலைமையாகக்கொண்ட அதிகாரத்துவப்போக்குகளால், சோவியத்யூனியனில் புதியபொருளாதாரக்கொள்கையின் விளைவுகளால் உருவாகிய சமூகத்தட்டுக்களின் குட்டிமுதலாளித்துவ நலன்களை பிரதிநிதிப்படுத்தும் இந்த வேலைத்திட்டம் முன்னணிக்கு கொண்டுவரப்பட்டது.

"சோவியத்யூனியனைப் பாதுகாப்பதற்காக" ஏகாதிபத்தியங்களுடன் சமரசத்திற்குப்போவது என்ற மூலோபாயம் சோவியத்தொழிலாளர்களை மட்டுமல்ல சர்வதேசத்தொழிலாளர்களையும் நிராயுதபாணியாக்கியது. அத்துடன் தொழிலாளவர்க்கம் தவிர்ந்த ஏனைய வர்க்க சக்திகளுடன் அரசியல் கூட்டுக்களுக்கும் வழிஅமைத்தது. இது சோவியத்யூனியனில் வெற்றிகரமான தொழிலாளவர்க்கப்புரட்சியை காட்டிக்கொடுப்பதற்கு மட்டுமல்ல சர்வதேசரீதியான புரட்சிகரவளர்ச்சிப்போக்குகளை தோல்விக்கு கொண்டு செல்லவும் துணைநின்றது. பெரியபிரித்தானியாவில் 1926ன் பொதுவேலை நிறுத்தத்தினை காட்டிக்கொடுத்த தொழிற்சங்க சம்மேளனத்துடன் அரசியல் தொடர்புகளை

படிப்பகம்

ஆங்கிலோ- ரஷ்யன் குழுவினூடாக தொடர்ந்தும் வைத்துக்கொண்டதில் மூலம் ஸ்டாலின் பெரியபிரித்தானியாவில் தொழிலாளவர்க்கம் இந்த பொதுவேலைநிறுத்தக் காட்டிக்கொடுப்புகளிலிருந்து படிப்பினைகளைப் பெறவோ அல்லது சுயாதீனமான நடவடிக்கைகளை மேற்கொள்வதையோ தடைசெய்தார்.

1927ன் சீனப்புரட்சியின் தோல்விக்கும், சீனக்கம்யூனிஸ்ட்கட்சியின் பெரும்பான்மையான அங்கத்தவர்களின் படுகொலைகளுக்கும் ஸ்டாலினிச அதிகாரத்துவம் நேரடிபொறுப்பாளனாகும். சீனமுதலாளித்துவக்கட்சியான சியாங்கேசேக்கின் தலைமையிலான குமிங்டாங் (Kumintang)கிற்கு சீனக்கம்யூனிஸ்ட்கட்சியை அடிபணியப்பண்ணியதின் நேரடி விளைவே இந்தத் தோல்வியாகும்.

ஜேர்மனியில் 1933ல் கிட்லர் ஆட்சிக்கு வருவதற்கு வழிவகுத்த "சமூகபாசிசக்கொள்கை" சர்வதேசத்தொழிலாளவர்க்கத்தின் வரலாற்றுத் தோல்விக்கு காரணமாயிருந்தது. கம்யூனிசஅகிலத்தாலும் (மூன்றாம்அகிலம்) ஜேர்மன் கம்யூனிசக்கட்சியாலும் முன்வைக்கப்பட்ட இந்தக் கொள்கை, சமூகஜனநாயகக்கட்சியினையும், நாசிகளையும் இரட்டைச்சகோதரர்கள் என வர்ணித்து சமூகஜனநாயகக்கட்சியின் தொழிலாளர்களுடன் ஒரு ஐக்கியமுன்னணிக்கு போவதனை நிராகரித்தது. இது ஜேர்மனியில் தொழிலாளவர்க்கத்தை பிளவுபடுத்தியதுடன் ஜேர்மன் பாராளுமன்றத்தினூடாக பாசிசம் அதிகாரத்திற்கு வருவதற்கான வழியைத்திறந்துவிட்டது. இதன்மூலம் கிட்லர் ஆட்சிக்கு வருவதற்கான அரசியல் பொறுப்பை ஸ்டாலினிஸ்டுக்கள் தோளில் சுமந்தனர்.

இதனை முழுமையாக நிராகரித்த ட்ரொக்சி கம்யூனிஸ்ட்கட்சியின் தொழிலாளர்களையும், சமூகஜனநாயகக்கட்சியின் தொழிலாளர்களையும் கொண்ட ஐக்கியமுன்னணி பாசிசத்தைத் தோற்கடிப்பதற்கான முன்நிபந்தனை என வாதிட்டார். கம்யூனிசஅகிலம் இந்த துரோகத்திற்கு துணைநின்றதன்மூலம் எதிர்ப்புரட்சியின் கூடாரத்திற்குள் முழுமையாக குடியேறிவிட்டதை சுட்டிக்காட்டிய ட்ரொக்சி சித்திரை 1933ல் நான்காவதுஅகிலத்தை உருவாக்குவதற்கான அழைப்பினை விடுத்தார். தொடர்ந்துவந்த நான்கு வருடங்களும் சர்வதேசரீதியில் பல பிரதானமான காரியாளர்களை ஸ்டாலினிச கொலைகாரர்கள் கொன்றுகுவித்த போதிலும் மார்க்சிசப்பாரம்பரயத்தை பாதுகாப்பதற்காக 1938 புரட்டாதி மாதத்தில் நான்காவதுஅகிலம் நிறுவப்பட்டது. 1940ல் மெக்சிக்கோவில் பனிக்கோடரியால் ஸ்டாலினிசக் கொலைகாரன் ட்ரொக்சியின் மூளையை சிதறடிக்கையில் தொழிலாளவர்க்கத்தினதும், மனிதசமுதாயத்தினதும் எதிர்கால விடிவிற்காக நான்காவதுஅகிலம் நிறுவப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டிருந்தன.

## இரண்டாவதுமகாயுத்தமும் அதிகாரத்துவமும்

1933ல் ஜேர்மன் தொழிலாளவர்க்கத்தின் தோல்விக்குப் பின்னர் சோவியத்அதிகாரத்துவத்தினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட துரோக அரசியலின் நேரடிப்பெறுபேறாக அவுஸ்திரிய, பிரான்சு இறுதியாக ஸ்பெயினின் தொழிலாளவர்க்க புரட்சி, எழுச்சிகள் தோல்வியடைந்தன. இது இரண்டாவது ஏகாதிபத்தியப்போரை புரட்டாசி மாதம் 1939ம் ஆண்டு ஜேர்மன் பாசிசம் தொடக்குவதற்கான பச்சைக்கொடியைக் காட்டியது. அதிகாரத்துவத்தின் போருக்கும், பாசிசத்திற்கும் எதிரான மக்கள்முன்னணி அரசியலின் நேரடி விளைவாக இந்தப்போரில் இதே அரசியலின் அடித்தளத்தில் நாசிஜேர்மனியுடன் செய்துகொண்ட ஸ்டாலின்- கிட்லர் ஒப்பந்தம் சோவியத்யூனியனை 1941ல் பாசிசப்படைகள் ஆக்கிரமிப்பதற்கான நிபந்தனைகளை உருவாக்கிக்கொடுத்தது. இருபது மில்லியன் தொழிலாளர், விவசாயிகளின் படுகொலைகளை பரிசாகக்கொடுத்து சோவியத்தொழிலாளர்கள் ஜேர்மன் இராணுவத்தினை தோற்கடித்தனர். இந்த வெற்றிக்கான மூலகாரணம் போல்சவிக்புரட்சியில் தொழிலாளவர்க்கம் வென்றெடுத்த தேசியமயமாக்கப்பட்ட உற்பத்தி உறவுகளிலும், தொழிலாளவர்க்கத்தினது தியாகத்திலுமே தங்கியிருந்தது.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின்

www.padippakam.com
படிப்பகம்

நேரடிப்பங்கில்லாமல் உலகமகாயுத்தத்தின் முடிவில் சிதறுண்டிருந்த உலக ஏகாதிபத்திய முறையில் சமநிலையையும், மீண்டும் நிர்மாணிக்கும் நடவடிக்கையையும் ஏகாதிபத்தியத்தினால் நிறைவேற்றியிருக்க முடியாது. போரின் முடிவினைத்தொடர்ந்து ரெகிரான், யால்டா,போஸ்டாம், (Tehran, Yalta, Postdam)ல் சோவியத்அதிகாரத்துவத்தினாலும், ஏகாதிபத்தியங்களினாலும் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் போருக்குப்பின்னைய ஐரோப்பாவின் வரைபடம் எப்படி இருக்கவேண்டுமெனத் தீர்மானித்தன. இதுதான் போருக்குப்பிந்திய ஏகாதிபத்தியச் சமநிலையின் அத்திவாரமாகஅமைந்தது.

இந்த ஒப்பந்தங்களின் பேரில் போருக்குப்பின்னர் வெடித்துக்கிளம்பிய சர்வதேசரீதியான தொழிலாளவர்க்க எழுச்சிகளை மொஸ்கோ ஸ்டாலினிச அதிகாரத்துவமும், அதனது நேரடிக்கட்டுப்பாட்டிலிருந்த கம்யூனிஸ்ட்கட்சிகளும் நேரடியாக குழிபறித்தன. கிழக்குஐரோப்பாவில் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட்கட்சிகள் ஆட்சிக்கு வருவதற்கு பதிலீடாக மேற்குஐரோப்பாவில் ஏகாதிபத்தியமுதலாளித்துவம் மீண்டும் உயிர்பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஜேர்மனியை இரண்டாகப்பிரித்ததும், கிழக்குஜரோப்பாவில் ஸ்டாலினிச ஆட்சிகளை நிறுவியதும் சோவியத்யூனியனை ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பதற்காக என்ற ஸ்டாலினிஸ்டுக்களின் வாதத்திற்கு பின்னணியில் மொஸ்கோ அதிகாரத்துவத்தின் சடத்துவ நலன்களை பாதுகாக்கவும், கிழக்கு, மேற்கு என தொழிலாளவர்க்கத்தை பிரிக்கவும் நிபந்தனைகள் உருவாக்கப்பட்டது.

இந்த எதிர்ப்புரட்சி அரசியல் தொழிலாளவர்க்கத்திற்கும், அதிகாரத்துவத்திற்குமிடையிலுள்ள முரண்பாடுகளை கூர்மையாக்கியது. இதனது முதலாவது வெளிப்பாடு கிழக்குஜேர்மனியில் 1953ல் உருவாகிய தொழிலாளவர்க்க எழுச்சியில் தெரிந்தது. இதே வருடத்தில் ஸ்டாலினது மரணத்தை தொடர்ந்து பதவிக்குவந்த குருச்சேவ் 20வது கட்சிக்காங்கிரசில் நடாத்திய ஸ்டாலினது குற்றங்களைப்பற்றிய "இரகசியப்பேச்சு" அதிகாரத்துவத்தின் நெருக்கடியை எடுத்துக்காட்டியது.

www.padippakam.com

1956ல் கங்கேரிப்புரட்சி, 1968ல் செக்கோசிலவாக்கியாவிற்குள் சோவியற்படைகளின் ஆக்கிரமிப்பு, 1956, 1970, 1976களில் போலந்தில் தொழிலாளர் எழுச்சிகள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் தொடர்ந்த நெருக்கடியையும், தொழிலாளவர்க்கத்தின் தலையீட்டினையும் சுட்டிக்காட்டின.

## கோர்பாச்சேவும், சிந்தனையும்.

மொஸ்கோ ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் இந்த கூர்மையடைந்த நெருக்கடிகளுக்கும், அதனது துரோக வரலாற்றுக்கும் வெளியிலிருந்து வானத்தால் வந்து கோர்பாச்சேவ் கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் குதிக்கவில்லை. தனது அரசியல் வாழ்க்கையை விருத்தெரிந்த காலத்திலிருந்தே சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியுடன் பிணைத்துக்கொண்ட கோர்பாச்சேவின் அரசியல் மார்க்சிசத்தின் மீதான ஸ்டாலினிசத்தின் அடித்தளமான தாக்குதலான தனிநாட்டு சோசலிச வேலைத்திட்டத்தினாலேயே வழிநடாத்தப்பட்டது.

மொஸ்கோ அதிகாரத்துவம் கோர்பாச்சேவை ஏன் பதவியில் இருத்தியது என்பது சர்வதேசமுதலாளித்துவப்பொருளாதார நெருக்கடியினாலும், இதனுடன் நேரடியாகப் பின்னிப்பிணைந்திருந்த அனைத்து உலகரீதியான ஸ்டாலினிசஅதிகாரத்துவங்களின் நெருக்கடியுமாலேயே தீர்மானிக்கப்பட்டது.

1980களின் ஆரம்பத்தில் போலந்தில் உருவான தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான தொழிற்சங்கமும், அதன் நேரடி விளைவாக போலந்தின் ஸ்டாலினிசக்கட்சியான ஐக்கிய போலந்து தொழிலாளர்கட்சியின் முழுமையான வீழ்ச்சியும், இதன் விளைவாக மார்கழி 1981இல் போலந்தின் இராணுவத்தளபதி ஜெருசெல்ஸ்கி(Jeruzelski) இராணுவச்சட்டத்தை பிரகடனப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டதும் சோவியத் அதிகாரத்துவத்திற்கு ஒரு எச்சரிக்கையை வழங்கியது.

www.padippakam.com

தொழிற்சாலைகளைக் கையகப்படுத்தல் போன்ற தொழிலாளவர்க்கத்தின் சுயாதீன நடவடிக்கைகள் போலந்தின் ஸ்டாலினிச ஆட்சியாளர்களுக்கு வழங்கிய நெருக்கடிகளைப் போன்ற வளர்ச்சிப்போக்குகளை சோவியத்யூனியனில் எப்படித்தடைசெய்வது என்ற மொஸ்கோ அதிகாரத்துவத்தின் அங்கலாய்ப்பின் வெளிப்பாடுதான் கோர்பாச்சேவை அவரது கிளாஸ்நோஸ்டுடனும், பெரிஸ்ரோரிக்காவுடனும் 1985 மார்ச் மாதத்தில் பதவிக்கு கொண்டுவந்தது.

1970களின் ஆரம்பத்திலிருந்தே மோசமடைந்திருந்த சோவியத்யூனியனின் பொருளாதாரமானது அதிகாரத்துவத்தின்மீது தொழிலாளவர்க்கத்தின் நேரடித்தலையீட்டுக்கான நிலைமைகளை வெகுவேகமாக உருவாக்கியது. இது அதிகாரத்துவத்தினது பொருளாதார அடித்தளங்களைப் பாதுகாக்கும் நோக்கில் கோர்பாச்சேவின் சீர்திருத்த வேலைத்திட்டத்தை முன்வைக்க அதிகாரத்துவம் முடிவுசெய்ய வழிவகுத்தது. இது முழுத்தொழிலாளவர்க்கத்தின் நலன்களுக்கெதிராகவும் சோவியத் பொருளாதாரத்தை ஏகாதிபத்திய நிதிநிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதை பிரேரித்தது. கோர்பாச்சேவினது சீர்திருத்தங்களின் மையமாக இருந்தது. போல்சேவிக்புரட்சியின் வெற்றிகளான தேசியமயமாக்கப்பட்ட சொத்துடமை உறவுகள், வெளிநாட்டுவர்த்தகத்தில் அரசஏகபோகம் ஆகியவற்றை முழுமையாக அழித்தொழிப்பதுவும் இறுதியாக சோவியத்யூனியனை முடிவுக்கு கொண்டுவருவதுமாகும்.

இந்த வேலைத்திட்டத்தினைத்தான் சிந்தனை பின்வருமாறு குதூகலிக்கின்றது. "அதிகாரத்துவத்துக்குள் இருந்து தோன்றிய வரையறுக்கப்பட்ட திட்டமென்றாலும் கிளாஸ்நோஸ்ட் மூலம் புதியஜனநாயக சுதந்திரக்காற்று எங்கும்வீச ஆரம்பித்தது. புதிய அரசியல் கட்சிகள் , அரசியல் குழுக்கள், சுதந்திரமான தொழிலாளர் அமைப்புக்கள், சமூகஸ்தாபனங்கள் ஆகியவை தோன்றின...........(சிந்தனை 1.92 பக்கம்8) கோர்பாச்சேவின் இந்த "ஜனநாயக" நடவடிக்கைகள் சோவியத்ஜனநாயகத்தை மீளமைப்பதற்கான அடித்தளத்தில் செய்யப்பட்டவையல்ல. சோவியத்ஜனநாயகத்தை மீளமைப்பது அதிகாரத்துவத்தினை தொழிலாளவர்க்கத்தின் தலையீட்டினால் முழுமையாக நிர்மூலமாக்குவதன் மூலமே சாத்தியமாயிருக்கக்கூடியது. இந்த "ஜனநாயக" நடவடிக்கைகள் சோவியத்யூனியனின் புத்திஜீவிகளையும், நிர்வாகப்பதவியிலிருப்பவர்களையும் அணிதிரட்டுவதன் மூலம் அதிகாரத்துவத்தினை பாதுகாப்பதற்கான சமூக அடித்தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

கோர்பாச்சேவ் அதிகாரத்துவத்திலிருந்து விரட்டப்பட்டது முற்றுமுழுதாக அதிகாரத்துவத்தின் பிரிவுகளுக்கிடையே எப்படி முதலாளித்துவ அறிமுகத்தை முன்னால் சோவியத்யூனியனில் நிறைவேற்றுவது என்பது தொடர்பான குத்துவெட்டுக்களின் வெளிப்பாடாகும்.

1991 ஆகஸ்ட் மாதத்தில் அதிகாரத்துவத்தின் ஓர் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சதி கோர்பாச்சேவிற்கோ அல்லது பொறிஸ் ஜெல்சினுக்கோ எதிரானதல்ல. இது நேரடியாக சோவியத் தொழிலாளவர்க்கத்திற்கெதிரானதாகும். முதலாளித்துவத்தை எப்படி அறிமுகம் செய்வது, ஒக்டோபர் புரட்சியின் தேசியமயமாக்கப்பட்ட சொத்துடமைமுறையை எப்படிக் கொள்ளையடித்துப் பங்குபோடுவது தொடர்பாக அதிகாரத்துவத்தின் சீர்திருத்தப் பிரிவாளருக்கும், ஏகாதிபத்தியகொம்பிரதோர் முதலாளித்துவத்தைப்பிரதிநிதிப்படுத்தும் பழைய அதிகாரத்துவத்தட்டுக்களுக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடுகளுக்கிடையில் சமநிலையை ஏற்படுத்தும் கரடிவித்தைக்குள் சிக்கிக்கொண்ட கோர்பாச்சேவின் அரசியல் தலைவிதி ஆகஸ்ட் 1991ன் சதியின் மூலம் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வரலாற்றுத் துரோகத்தின் இறுதிக்கட்டமாக சோவியத்யூனியனை நேரடியாக ஏகாதிபத்திய நிதிமூலதனத்தின் தலையீட்டிற்கு திறந்துவிடும் நடவடிக்கையையே கோர்பாச்சேவின் தலைமை மேற்கொண்டது. இதனை 1938ல் நான்காவதுஅகிலத்தின் இடைமருவுவேலைத்திட்டத்தில் அதிகாரத்துவத்தின் வளர்ச்சிப்போக்கு பற்றிய ட்ரொக்சியின்ஆய்வு சக்திவாய்ந்த முறையில் நிரூபிக்கின்றது.

படிப்பகம்

"சோவியத்யூனியன், அக்டோபர் புரட்சியிலிருந்து ஒரு தொழிலாளர் அரசாகத் தோன்றியது. சோசலிச அபிவிருத்திக்கு அவசியமான முன் நிபந்தனையான உற்பத்திச்சாதனங்களின் அரசுடமை, உற்பத்திச்சக்திகளின் துரிதமான வளர்ச்சிக்கான சாத்தியத்திற்கு வழிதிறந்தது. ஆனால் அதேசமயம் தொழிலாளர்அரசின் கருவிகள் ஒரு பூரணமான சீரழிவுக்குள்ளாகின. அது தொழிலாளவர்க்கத்தின் ஒரு ஆயுதம் என்பதிலிருந்து தொழிலாளவர்க்கத்துக்கு எதிரான அதிகாரத்துவ கலகத்தின் ஆயுதமாகவும், நாட்டின் பொருளாதாரத்தினை மேலும் சீர்குலைக்கும் ஆயுதமாகவும் பரிணாமம் செய்யப்பட்டது. பின்தங்கியதும், தனிமைப்படுத்தப்பட்டதுமான ஒரு தொழிலாளர்அரசின் அதிகாரமயமாக்கலும், அதிகாரத்துவம் சர்வ வல்லமைபெற்ற , வசதிகள்படைத்த சாதியாக பரிணாமம் அடைதலும் தனிநாட்டில் சோசலிசம் என்ற கோட்பாட்டை கோட்பாட்டுரீதியில் மட்டுமன்றி இத்தடவை நடைமுறை ரீதியிலும்- புரிந்துகொள்ளத்தக்க முறையில் நிராகரிப்பதை உள்ளடக்கிக்கொண்டுள்ளது.

இங்ஙனம் சோவியத்ருஷ்யா பயங்கரமான முரண்பாடுகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. ஆனால் அது இன்னமும் ஒரு சீரழிந்த தொழிலாளர்அரசாக இருந்து வருகின்றது. அரசியல் தீர்க்கதரிசனம் ஒரு பதிலீட்டுப் பண்பினைக் கொண்டுள்ளது. ஒன்றில் அதிகாரத்துவம் தொழிலாளர்அரசில் வரவர அதிகரித்த முறையில் உலக முதலாளிவர்க்கத்தின் கருவியாகி, புதிய சொத்துவடிவங்களை தூக்கிவீசி நாட்டினை மீண்டும் முதலாளித்துவத்தினுள் மூழ்கடிக்கும்., அல்லது தொழிலாளவர்க்கம் அதிகாரத்துவத்தினை நசுக்கி சோசலிசத்துக்கான பாதையைத் திறக்கும்."

(இடைமருவுவேலைத்திட்டம் "தொழிலாளர்பாதை" வெளியீடு பக்கம் 59-60)

சோவியத்யூனியன் கலைக்கப்பட்டதின் பின்னர் கோர்பாச்சேவ் சர்வதேச முதலாளித்துவ மையங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாளித்துவப் பிரதிநிதிகளுக்கு "சிறப்புரை" வழங்குவதை தொழிலாகக் கொண்டதுடன் இந்த மட்டங்களில் செல்வாக்குப்பெற்ற நபராகவும் ஜனநாயகத்தின் பாதுகாவலராகவும் மதிக்கப்படுகின்றார். இந்த வகையில் "சிந்தனை" இவரது சாதனைகளை வரலாற்று முக்கியம் வாய்ந்தவையாகவும், "இவரது பெயரை என்றென்றும் நிலைக்க வைக்கும் சாதனை" என்றும் எழுதுவது சிந்தனையின் அரசியல் வேலைத்திட்டத்துடன் முழுமையாகப் பொருத்தமானதே. தொழிலாளவர்க்கத்தைப் பொறுத்தவரையில் கோர்பாச்சேவ் உலகப்புரட்சி வேலைத்திட்டத்தின் நேரடி எதிரியாக வரலாற்றின் குப்பைக்கிடங்கில் நாற்றமெடுக்கும் ஒரு ஸ்டாலினிசப் பிரதிநிதியாகவே கணிக்கப்படுகின்றார்.

## ஜெல்சினது சர்வாதிகாரத்தயாரிப்பு

கோர்பாச்சேவ் ஆரம்பித்து வைத்த "ஜனநாயகமயப்படுத்தல்" தான் ஒக்டோபர் நாலாம்திகதி மொஸ்கோவின் "வெள்ளைமாளிகை" என அழைக்கப்படும் ரஷ்யப்பாராளுமன்றம் இருக்கும் கட்டிடத்தை ஜெல்சினின் பீரங்கிக்குண்டுகள் சல்லடை போடும் நிகழ்ச்சியாக தொடர்ந்துள்ளது. மில்லியன் மக்கள் குடியிருக்கும் ரஷ்யத் தலைநகரில் பாராளுமன்றத்தை ஜனநாயகத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில் வெடிவைத்துத் தகர்க்கும் இந்த காட்டுமிராண்டித்தனத்துடன் முன்னாள் சோவியத்யூனியனின் முதலாளித்துவ அறிமுகத்தை ஜனநாயகமுறையில் மேற்கொள்ளலாம் என்ற ஏகாதிபத்தியக் கட்டுக்கதைகள் முழுமையும் தவிடுபொடியாகியிருக்கின்றன. ஜெல்சினது இந்த நடவடிக்கையானது முதலாளித்துவஅறிமுகத்தை மேற்கொள்வது தொடர்பாக மூலோபாயரீதியில் முரண்பாடுகள் எதுவுமற்ற அவரது அரசியல் எதிரிகளுக்கு எதிராக குறிவைக்கப்படவில்லை. பதிலாக

சர்வதேசநாணயநிதியம், உலகவங்கி போன்றவற்றினால் தயாரிக்கப்பட்ட "அதிர்ச்சி" வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் வெடித்துக்கிளம்பவிருக்கும் தொழிலாளவர்க்கத்தின் எதிர்ப்புக்களை நசுக்குவதற்கான ஒரு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த பீரங்கித்தாக்குதல் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான ஜெல்சினது இறுதி ஆயுதம் என அனைத்து முதலாளித்துவ பொதுசனத்தொடர்பு சாதனங்களாலும் வலியுறுத்தப்படுவது, ஏகாதிபத்தியநாடுகள் இந்த சதியின் பின்னணியில் எந்த மட்டத்திற்கு பங்களித்திருக்கின்றார்கள் என்பதனை அம்பலப்படுத்துகின்றது.

ஜெல்சினது பிரதானமான எதிரிகளாக இந்தச்சதியில் விளம்பரப்படுத்தப்பட்ட கசபுலட்டோ (Chasbulatow), ருஷ்கோய் (Ruzkoi) உட்பட்ட ஏனைய அனைத்து ஜெல்சினது அரசியல் எதிரிகள் அனைவரும் ஒரு உருப்படியான வேலைத்திட்டத்தை முன்வைக்கவில்லை. இவர்கள் அனைவரும் ரஷ்யமுதலாளித்துவத்தை சுயாதீனமாக கட்டியெழுப்ப வேண்டுமென்ற பிற்போக்கு தேசியவாதவேலைத்திட்டத்தை, சீர்திருத்தங்களை சரியானமுறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிறைவேற்றலாம் என்ற நிலைப்பாட்டை வைத்தனர். இந்த அடித்தளத்தில் இவர்கள் ஜெல்சினது அரசியல் ரஷ்யாவை ஏகாதிபத்தியத்திடம் காலனித்துவ சரணடலுக்கு வழங்குவதாகும் என எதிர்ப்புத்தெரிவித்தனர்.

இந்த முரண்பாடுகளுக்குள் ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆதரவினைப் பெற்ற ஜெல்சின் இந்தச் சதியை திட்டமிட்டதோடு தனது பாராளுமன்ற அரசியல் எதிரிகளுக்கு ஒரு முடிவினையும் கட்டியிருக்கின்றார். இது ஜெல்சினது அரசியல் பலத்தினது வெளிப்பாடல்ல. மாறாக சோவியத்யூனியனின் இடிபாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட ரஷ்ய முதலாளித்துவ அரசின் பலவீனமான தன்மையின் நேரடிவிளைவாகும்.

## தொழிலாளவர்க்கத்தின் பணிகள்.

ரஷ்யாவின் இந்த சமீபத்திய நிகழ்வுகளில் தொழிலாளவர்க்கமும், மக்கள்திரளினரும் இரண்டு கன்னைகளுக்கும் ஆதரவளிக்க மறுத்தது. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் இடிபாடுகளிலிருந்து தோன்றிய இந்தச் சக்திகள் மீதான தொழிலாளவர்க்கத்தின் பாரிய வெறுப்பினை வெளிப்படுத்துகின்றது. ஆனால் மறுபுறத்தில் தொழிலாளவர்க்கத்தின் இந்த செயலற்ற தன்மையானது ஜெல்சினது சர்வாதிகாரத் திட்டங்களை வலுப்படுத்துகின்றது. எழுபது வருடங்களுக்கும் மேற்பட்ட ஸ்டாலினிசத்தின் பயங்கர ஆட்சியின் விளைவாக ரஷ்யத் தொழிலாளவர்க்கம் சோசலிச உணர்மையின்மீது ஏற்பட்ட மோசமான தாக்குதல் அதனது சுயாதீனமான நடவடிக்கைகளை காலம் தாழ்த்துகின்றது.

ரஷ்யத்தொழிலாளர்களின் உடனடிப்பணி ஒரு சுயாதீனமான தொழிலாளவர்க்கக்கட்சியினை கட்டுவதாகும். இதற்கான ஆரம்பவேலைகளை நான்காம்அகிலத்தின் அனைத்துலகக்குழு இந்த வருடத்தின் மாசிமாதத்தில் கீவ் (Kiev) நகரில் மேற்கொண்ட ஒரு மகாநாட்டின்மூலம் ஆரம்பித்து வைத்துள்ளது. முன்னால் சோவியத்யூனியனின் அனைத்து குடியரசுகளிலிருந்தும் பிரதிநிதிகள் பங்குகொண்ட இந்த நான்குநாள் மகாநாடு நான்காம்அகிலத்தின் வரலாற்றினை கலந்துரையாடியது. இந்த மகாநாடும், ரஷ்யாவின் இன்றைய அரசியல் மாற்றங்களும் ரஷ்யாவில் நான்காம்அகிலத்தின் தலையீடு தொடர்பான ஒரு புதிய அத்தியாயத்தை திறந்துவிட்டுள்ளது.

இந்த வரலாற்றுப்பாடங்களை தொழிலாளவர்க்கத்தினுள் பயிற்றுவிப்பதன் மூலம் தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான தலைமையைக் கட்டியெழுப்புவதுதான் நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிரிவுகளினது பணியாகும்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# சமர் பத்திரிகையின் வேலைத்திட்டம் ஒரு தேசியவாதத் தூக்குக்கயிறு

பிரான்சின் தலைநகர் பரிசிலிருந்து வெளிவரும் "சமர்" பத்திரிகை அதனது இதழ் 7 இலக்கமிடப்பட்ட வெளியீட்டில் "மூன்றாவது பாதைக்கான திட்டம்" என்ற தலைப்பில் தமிழ்தேசிய விடுதலைப்போராட்டம் தொடர்பான திட்டம் ஒன்றை பிரசுரித்திருக்கின்றது.

இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் தற்போதைய தேசியவிடுதலைஇயக்கங்கள் என்று சொல்லப்படுபவையின் அரசியல் வங்குரோத்துக்குப் பதிலாக ஒரு புதிய தேசியவிடுதலைஇயக்கம் ஒன்றினை உருவாக்குதே. இது தனிய "சமர்" பத்திரிகையின் திட்டம் மட்டுமல்ல., வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடையே பிரசுரிக்கப்படும் அரசியல் பத்திரிகைகளின் அடிப்படை இலக்கும் ஆகும்.கடந்த பத்துவருடகாலமாக தற்போது இயங்கும் இந்த இயக்கங்களின் அரசியலின் நேரடிப் பெறுபேறாக ஒரு முட்டுச்சந்திக்குள் தள்ளப்பட்டிருக்கும் தொழிலாளர்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் இந்தத் திட்டத்தின் அரசியல் அடித்தளத்தை விளங்கிக்கொள்வது அவசியமானது. இந்நிலைமைகளில் ஒரு புதிய இயக்கம் தேவையென்பதற்கு பழைய இயக்கங்களின் வங்குரோத்துக்கு என்ன் காரணங்கள் வழிதிறந்தன என்பதை ஆய்வு செய்யவேண்டும்.

## தேசியவிடுதலை




"சமர்" பத்திரிகையின் முன் அட்டை.

## இயக்கங்களின் வங்குரோத்து.

இது தனியே தற்போதைய தமிழ்இயக்கங்களுக்கே மட்டும் பிரத்தியேகமான ஒரு விசேடமான குணாம்சமல்ல. இரண்டாவது மகாயுத்தத்திற்கு பின்னர் உருவான அனைத்து விடுதலைஇயக்கங்களும் சர்வதேசரீதியாக இன்று ஏகாதிபத்தியத்தின்

படிப்பகம்

நேரடிக்கைக்கூலிகளாக மாறியிருக்கும் நிகழ்வுப்போக்கின் ஒரு பகுதியாகும்.

www.padippakam.com

பலஸ்தீன விடுதலைஇயக்கத்தின் தலைவர் யசீர்அரபாத் புரட்டாதி மாதம் 14ம் திகதி "எனது வாழ்க்கையின் மகத்தான மணித்தியாலம் இதுதான்" (Die Welt 14.10.93) என்று வாய்புலம்பியபடி வாசிங்டனின் வெள்ளை மாளிகைக்குள் நுழைந்தது அவரது தனிமனித குணாம்சங்களினால் தீர்மானிக்கப்படவில்லை. பதிலாக சர்வதேசரீதியாக ஏற்பட்ட புறநிலை மாற்றங்களினால் உருவாக்கப்பட்டது. இதே புறநிலையான மாற்றங்கள்தான் தமிழ்இயக்கங்களை அரசின் கைக்கூலிகளாக மாற்றியிருக்கின்றது.

தமிழ்தேசியஇயக்கங்களின் தலைவர்களினது ஜனநாயகமறுப்பு, உட்கட்சி ஜனநாயகமின்மை, ஏனைய இயக்கங்கள்மீது "விடுதலைப்போர்", மற்றும் ஏனைய ஊழல்கள் அனைத்தும் இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாளித்துவ வேலைத்திட்டத்தின் பிரிக்கமுடியாத பாகங்கள். இந்த நடவடிக்கைகளிலும் இவர்கள் சர்வதேச தேசியவாதிகளுக்கு ஒரு விதத்திலும் குறைந்தவர்களல்ல. இறுதி ஆய்வுகளில் இந்த குணாம்சங்கள் இந்த இயக்கங்களின் அரசியலை தீர்மானிக்கவில்லை. உலக முதலாளித்துவ நெருக்கடியின் நேரடி விளைவுகள்தான் இந்த இயக்கங்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்றது.

இவர்களது அரசியலின் வர்க்கத்தன்மையை தோலுரித்துக்காட்டிய இந்திய- இலங்கை ஒப்பந்தம் வெறுமனே ராஜீவ்காந்தியின் தனிமனித பண்புகளிலிருந்து உருவாகவில்லை. இவர் இந்தியாவின் பொருளாதாரத்தை உலக ஏகாதிபத்தியத்திற்கு திறந்துவிடுவதற்காக எடுத்த முயற்சிகளின் தவிர்க்கமுடியாத தேவை இந்த ஏகாதிபத்தியத் திட்டத்தை முன்வைத்தது. இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் அனைத்து நிபந்தனைகளையும்மாற்றங்களின்றி ஏற்பதற்கு சில இயக்கங்கள் தயக்கம் காட்டியதும் இந்திய முதலாளித்துவம் இவர்களை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததையும் ஒப்பந்தத்திற்கு முந்திய சில நாட்கள் நினைவுபடுத்துகின்றன. இந்த தயக்கம் பற்றியும், அதனது பின்னணி என்ன என்பதையும் நான்காவதுஅகிலத்தின் அனைத்துலகக்குழுவின் அறிக்கை பின்வருமாறு ஆய்வு செய்தது.:-

இந்திய சூழ்ச்சியினதும், மோசடியினதும் விளைவாகவே தாம் புதுடில்லிக்கு விமானத்தில் செல்லவும், இலங்கை-இந்திய உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்கவும் தீர்மானம் செய்ததாக பிரபாகரன் இன்று கூறுகின்றார். இந்தச்"சாட்டு" தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தின் பலவீனமான தன்மையை மட்டுமன்றி, குட்டிமுதலாளித்துவதேசியவாதத்தின் அரசியல் மலட்டுத்தனத்தையும் அம்பலப்படுத்துகின்றது. விடுதலைப்புலிகளின் தலைவர் காந்தியினால் ஏமாற்றப்பட்டிருப்பின் இதற்குக்காரணம், தமிழீழத்தின் சுயநிர்ணயத்தினை அடைவதில் அதன் முழுக்கொள்கையும் இந்திய முதலாளித்துவத்தின் உதவியை வேண்டுவதின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டிருந்ததினால் ஆகும். இந்த பேராபத்து மிக்க தவறான கணிப்புக்கான மூலம் முதலாளித்துவ தேசியவாதத்தின் தவிர்க்க முடியாத வர்க்க முன்னோக்கும், வேலைத்திட்டமுமே ஆகும். 70 வருடங்களுக்கு முன்னர் லெனின், ஒரு ஒடுக்கப்படும் தேசியஇனத்தின் முதலாளிவர்க்கம் தனது சொந்த தேசிய சிறப்புரிமையை அடையவும், "சுதந்திர" நாட்டினுள் தொழிலாளர் விவசாயிகளைச் சுரண்டுவதற்கான சிறந்த நிலைமைகளை நிலைநாட்டும் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே சுயநிர்ணயத்தினை கருக் கொள்கின்றது என எச்சரிக்கை செய்தார். இந்தச் சுயநலம், கூலியுழைப்பிலிருந்து உபரிப்பெறுமானத்தை பிடுங்கிக்கொள்கின்ற- அதாவது தொழிலாளவர்க்கத்தினை அடிமைப்படுத்துகின்ற- ஒரு வர்க்கம் என்ற முறையில் முதலாளிவர்க்கத்தின் தன்மையில் புறநிலையாக வேரூன்றி உள்ளது. இந்த வர்க்கப் புறநிலையானது முதலாளித்துவ தேசியவாதிகளின் சகல கன்னைகளதும்- தமிழீழ விடுதலைப்புலிகள்

படிப்பகம்

உட்பட கொள்கைகளை வழிநடத்துவதோடு அவற்றின் அரசியல் உடல் அமைப்பையும் நிர்ணயம் செய்கின்றது.

(இந்திய-இலங்கை ஒப்பந்தமும், புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்தின் பணிகளும். புள்ளி 8 19.11.1987)

இந்த இயக்கங்கள் அனைத்தினதும் வங்குரோத்தின் மத்தியபுள்ளி இந்த முதலாளித்துவவேலைத்திட்டம் ஆகும். இந்த நிலைமைகளில் தனிமனித தவறுகளை நீக்கி சுயவிமர்சனங்களை மேற்கொண்டு இதே முதலாளித்துவ வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கும் ஒரு புதிய "புனிதமான" இயக்கத்தின் மூலம் தமிழ்மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றுவிடலாம் என நினைப்பது ஒரு பிற்போக்கு கனவு.

இந்த அடித்தளத்திலிருந்து சமரினது வேலைத்திட்டத்தினை ஆய்வு செய்கையில் இது 1983ல் இயக்கங்களால் முன்வைக்கப்பட்டதை விட வித்தியாசப்படுவது முஸ்லீம்களினதும், தோட்டத்தொழிலாளர்களினதும் "சுயநிர்ணயஉரிமை" பற்றிய கேள்வியிலாகும். தோட்டத்தொழிலாளர்களைப் பொறுத்தளவில் ஈரோசும், ஈ.பி.ஆர்.எல்.எப் ம் மலையகப்பகுதியை தங்களது தமிழீழத்தின் வரைபடத்தினுள் சேர்த்திருந்தனர்.

சமர் தோட்டத்தொழிலாளர்களுக்கு "சொந்தப் பிரதேசங்களை" நிர்ணயிப்பதோடு அவர்களிற்கு "பூரணசுயாட்சி அதிகாரம்" வழங்குகின்றது. அத்துடன் புதிதாக முஸ்லீம் மக்களிற்கான "அரசியல் அதிகார அமைப்புமுறைகள் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்டவையாக அமைதல் வேண்டும். அவர்கள் ஐக்கியப்படுவதற்கு மேலாக அவர்களது இணைவு குறித்து முடிவு அவர்களது சுயநிர்ணயஉரிமையாகும்".என்கின்றது. (பக்கம் 7.).

இரண்டு சந்தர்ப்பங்களிலும் இவர்கள் "தமிழ்தேசிய இனத்தின் ஒரு பகுதியினரோ அல்லது அதற்கு கீழ்ப்பட்டவர்களோ அல்லர்" என்பதன் மூலம் தமிழ்தேசியஇனத்தின் கலப்படமற்ற சுத்தமான தனித்துவத்தை வலியுறுத்துவதுடன், இந்தக்காரணத்தால் இவர்கள் பிரிந்து போவதைத் தவிர

... என்பதன்மூலம் தீவின அனைத்து மக்களிடமும் ஒரு ஐக்கியம் உருவாவதற்கு வெடிவைக்கின்றது. இதனால் இந்த வேலைத்திட்டம் சிங்கள இனவாத அரசின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்கின்றது.

தோட்டத்தொழிலாளர்கள் முகம்கொடுக்கும் உடனடிப்பிரச்சினை தோட்டங்களை ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் கையளிக்கும் சிறீலங்கா அரசினைத் தூக்கியெறிவதற்கு தீவின் தொழிலாளர்களுடன் ஒன்றிணைவதாகும். இலங்கைத் தொழிலாளவர்க்கத்தின் பிரிக்கமுடியாத படையணிராகிய இந்தத் தோட்டத்தொழிலாளர்கள் "பூரணசுயாட்சி அதிகாரம்" என்ற படுகுழிக்குள் விழுவதற்குப் பதிலாக தொண்டமானின் தொழிற்சங்க அதிகாரத்துவத்திலிருந்து உடைத்துக்கொண்டு சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேறுவதை தங்களது வரலாற்றுப் பணியாக கொண்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ்பேசும் முஸ்லீம்கள் முஸ்லீம் மதத்தினைப் பின்பற்றுவதைத் தவிர மொழியிலோ, கலாச்சாரத்திலோ தமிழ்தேசியஇனத்தின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியினர் ஆவர். இந்தப் பிரதேசங்களில் வாழும் ஏனைய மதங்களைச் சேர்ந்த தமிழ்மக்கள் முகம்கொடுக்கும் அதே இன ஒடுக்குமுறைக்கு முகம்கொடுக்கும் இவர்கள் கடந்த காலங்களில் இயக்கங்களில் போராளிகளாக இனவாத இராணுவத்திற்கெதிராக போராடியுமிருக்கின்றார்கள். 1990ன் இறுதியில் தமிழீழவிடுதலைப்புலிகள் முஸ்லீம் தமிழர்களை வடபகுதியிலிருந்து வெளியேற்றியதும் அத்துடன் தொடர்ந்த அவர்கள் மீதான படுகொலைகளும் தமிழ்மக்களை மதரீதியில் பிளவுபடுத்துவதையும் ,அதன்மூலம் இனவாத அரசிற்கு கைகொடுப்பதையும் நோக்கமாகக்கொண்டது. இது எந்தவகையிலும் ஏனைய மதங்களைச் சேர்ந்த தமிழ்தேசியஇனத்தின் தொழிலாளர்களினாலும், ஒடுக்கப்பட்ட மக்களினாலும் தங்கள் சகோதரர்களை தங்களுக்கு "கீழ்ப்படுத்தும்" நோக்கில் செய்யப்பட்டதில்லை. பதிலாக இந்து-முஸ்லீம் பிரிவினையின் மூலம் முதலாளித்துவ நலன்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

முஸ்லீம் மக்களை தமிழீழவிடுதலைப்புலிகள் வடக்கிலிருந்து வெளியேற்றுகையில் இவர்களுக்கு "எதிரான" இயக்கங்கள், தமிழர்விடுதலைக்கூட்டணி, தமிழ்காங்கிரஸ் என்பவை ஐந்து முதலாளித்துவ முஸ்லீம் அமைப்புக்களுடன் இணைந்து "முஸ்லீம் பிராந்திய ஆட்சி" என்ற வேலைத்திட்டத்தினை முன்வைத்தன. இது இந்து-முஸ்லீம் பிரிவினையை வளர்ப்பதன்மூலம் அன்றைய பிரேமதாசா அரசினை பாதுகாக்கும் திட்டமாக இருந்தது.

"சமர்" பத்திரிகையின் தற்போதைய "பூரண சுயாட்சி அதிகார" திட்டத்தின் உள்ளடக்கம்LTTE இனது வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக நிறைவேற்றும் நோக்கத்தில் வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களுக்கு ஒரு பிரதேசத்தை தெரிவுசெய்யும் திசையில் இருக்கின்றது. முஸ்லீம் தமிழர்களது பிரச்சனைகளை மத அடிப்படையில் உருவாகிய முஸ்லீம் அமைப்புக்களோ அல்லது "பூரண சுயாட்சி அதிகாரமோ" தீர்த்து வைக்கப்போவதில்லை. இது முதலாளித்துவ நலன்களுக்கு தமிழினத்தின் ஒரு பகுதியினராகிய இவர்களை பகடைக்காய்களாகப் பாவிப்பதற்கே சேவை செய்யும். இந்த வேலைத்திட்டங்களை நிராகரிப்பதுவும், தொழிலாளவர்க்க வேலைத்திட்டத்தில் ஒன்றிணைவதுமே இவர்களுக்கான ஒரே வழியாகும்.

## சுயநிர்ணய உரிமை.

தமிழ், சிங்கள, முஸ்லீம், மலையக இலங்கைத்தீவின் மக்களுக்கு பிரிவினை வேலைத்திட்டத்தினை முன்வைப்பதற்கும், சுயநிர்ணய உரிமைக்கும் ஒரு வித தொடர்பும் இல்லை. சுயநிர்ணயஉரிமையின் பெயரால் இன்று உலகம் முழுமையும் வெடித்துக் கிழம்பும் இன, மத, பிரதேச வேறுபாடுகளை தங்களுடைய நலன்களுக்குச் சாதகமாக ஏகாதிபத்திய சக்திகள் பாவிப்பதனை காணமுடியும். அதேவேளையில் இதனது பெயரால் நானாவித இன, மதக்குழுக்களைச் சேர்ந்த வலதுசாரிப் போக்குக்கள் தங்களது சொந்த நாடுகள், அல்லது பிரதேசங்கள் தேவையென குரல் கொடுக்கின்றன.

1991ன் மார்கழி மாதத்தில் முன்னாள் யூகோசிலாவியாவில் குரோசியாவையும், சுலோவேனியாவையும் சுயநிர்ணயஉரிமையின் பெயரில்தான் ஜேர்மன் ஏகாதிபத்தியம் "சுதந்திரநாடுகளாக" அங்கீகரித்தது. இது இந்த நாடுகளின் பல இன, மத மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கவில்லை. பதிலாக ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கும் "சகோதர யுத்தத்தினை" இன்னும் தீவிரமாக்கியது. இதே பாணியில்தான் முன்னாள் சோவியத்யூனியனின் கலைப்பிற்கு பின்பு உருவாகிய நாடுகளின் இன, மத, மொழி முரண்பாடுகளில் ஏகாதிபத்தியத்தின் நேரடித்தலையீடு ஆர்மேனியா, அசபாச்சான், ஜோர்ஜியா மற்றும் இன்னும் பல நாடுகளில் உள்நாட்டு யுத்தத்திற்கு வழிவகுத்துள்ளது. காளான் முளைப்பதுபோல் தினசரி சர்வதேசரீதியாக பிரகடனப்படுத்தப்படும் பிரிவினை இயக்கங்கள் புதிய தேசிய அரசுகளின் நிர்மாணத்தினை சுட்டிக்காட்டவில்லை. மாறாக தற்போது நீண்டகாலமாக இருந்துவந்த தேசியஅரசுகளின் உடைவினை வெளிப்படுத்துகின்றது.

பிரித்தானியருக்கெதிரான இந்திய சுதந்திரப்போர் இந்தியாவின் 500 ற்கும் மேற்பட்ட சிற்றரசுகளின் மக்களை இன, மத, மொழி எல்லைகளைக் கடந்து இணைப்பதன் மூலம் இந்திய உபகண்டத்தின் ஐக்கியத்திற்காகவும், சமூக, பொருளாதார, கலாச்சார வளர்ச்சிக்கு பங்களிப்பதாகவிருந்தது. காங்கிரஸ் கட்சியின் வேலைத்திட்டம் பாகிஸ்தானைப் பிரிப்பதுடன் இந்தியஉபகண்டத்தினை முதலாளித்துவ தேசியவாதத்தினால் கட்டியெழுப்புவதற்கு சத்தியம் செய்தது. இன்று இந்தியா முழுமையும் வெடித்துக் கிழம்பும் பிரிவினை இயக்கங்கள் இந்த முதலாளித்துவ தேசியவாதத்தின் நாற்றமெடுத்த பிணத்திலிருந்துதான் உருவாகின்றன. இது உண்மையான தேசியஐக்கியத்தினையும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான யுத்தத்தினையும் மேற்கொள்வதற்கு முடியாத இந்திய தேசியவாதத்தின் பிற்போக்குத் தன்மையை நிரூபித்துக்காட்டுகின்றது.

இந்த நிலைமைகளில் இன்று இந்தியாவில் தோன்றியிருக்கும் பிரிவினை இயக்கங்கள் இந்திய தேசிய முதலாளித்துவத்தால் இன, மத, மொழி பிரிவினைக்குட்படுத்தப்பட்டிருக்கும் மக்களின் உண்மையான அபிலாசைகளை நிறைவு செய்யவோ அல்லது அவர்களை ஐக்கியப்படுத்தவோ எந்தவிதத்திலும்

படிப்பகம்

www.padippakam.com

லாயக்கற்றவையாகும். ஏகாதிபத்தியங்களின் நேரடிக்கட்டுப்பாட்டில் இந்தப்பிரிவினை இயக்கங்களில் பல ஏற்கனவே வந்துவிட்டதென்பதுடன் இவர்களின் வேலைத்திட்டம் ஏகாதிபத்தியத்திற்கு தங்கள் "பிரதேசங்களை" திறந்துவிடுவதினையே மையமாகக் கொண்டுள்ளது.

தமிழ் தேசிய விடுதலை இயக்கங்களைப் பொறுத்தவரையிலும் வேறுவிதமான விதிவிலக்கு இல்லை. பழைய இயக்கங்களின் வங்குரோத்து புதிதாக முற்போக்கான இயக்கங்களை தோற்றுவிப்பதற்கான காலப்பகுதியைத் திறந்துவிடவில்லை.தமிழ் தேசியவிடுதலைப் போராட்டத்திற்கு தலைமைதாங்கிய இயக்கங்கள் ஆரம்பத்திலிருந்தே தமிழ்தொழிலாளர்களினதும், ஒடுக்கப்பட்ட மக்களினதும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதை மையமாகக் கொண்டிருக்கவில்லை. இவர்களது அடிப்படை நோக்கம் தமிழ் முதலாளித்துவத்தின் நலன்களைப் பேணுவதற்காக சிங்கள முதலாளித்துவத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகவே இருந்தது. இந்த தேசியஇயக்கங்களின் இடிபாடுகளிலிருந்து தோன்றும் ஒரு புதிய தேசிய இயக்கம் அதை உருவாக்க விரும்புவோரது நல்லெண்ணங்கள் எதுவாயிருப்பினும் உள்ளடக்கத்தில் ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பிரதிநிதிப்படுத்தும் பிரிவினை இயக்கங்களிலிருந்து ஒரு விதத்திலும் வேறுபடவில்லை.

## பிரிவினை இயக்கங்களின் தோற்றத்தின் பின்னணி.

சர்வதேசமயமாக்கப்பட்ட உற்பத்திக்கும், பல்தேசியநிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்படும் உலகப்பொருளாதாரத்திற்கும், முதலாளித்துவம் வரலாற்றுரீதியாக தங்கியிருக்கும் தேசியஅரசுமுறைக்குமுள்ள சமரசம் செய்யமுடியாத முரண்பாடுகளின் கூர்மையடையும் தன்மை தேசியஅரசுகளின் உடைவிற்கு கொண்டுசெல்கின்றது.இதன் நேரடி விளைவுகளே இந்தப் பிரிவினை இயக்கங்களின் தோற்றமாகும். இது தனியே முன்னாள் யூகோசிலாவியாவிற்கும் சோவியத்யூனியனிற்கும், இந்தியா, இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளுக்கும் மட்டும் பிரத்தியேகமான ஒரு வளர்ச்சிப்போக்கல்ல. இத்தாலியை வடக்கு, தெற்கு என்று பிரிப்பதற்கும் இங்கிலாந்தில் 1745ல் இங்கிலாந்துடன் இணைக்கப்பட்ட ஸ்கொட்லாந்தைப் (Scottland) பிரிப்பதற்கும், பெல்ஜியத்தில் பிளமன் (Flamen) ,வாலுனன் (Wallonen) என்ற பிரிவினை கோசத்திற்கும் அடிப்படைக்காரணம் உலக ரீதியாக வளர்ச்சியடைந்த பொருளாதார அழுத்தங்களின் வெளிப்பாடேயாகும்.

இது 19ம் நூற்றாண்டின் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்காலத்தில் உருவாகிய தேசியஇயக்கங்கள் கொண்டிருந்த முற்போக்கான இன, மத, மொழி பேதமற்ற தேசியஅரசுகளை உருவாக்கும் குணாம்சத்தை கொண்டிருக்கவில்லை. இதற்கு நேரெதிராக ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவத்தினால் உலக ரீதியாக அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய முறையில் உலகப்பொருளாதாரத்தையும், உற்பத்திசக்திகளையும் ஒழுங்குபடுத்த முடியாததின் நேரடி விளைவாகும்.

ஏகாதிபத்தியங்கள் பல்தேசியநிறுவனங்களின் வர்த்தகப்போட்டிக்கான மூலப்பொருள்களையும், மலிந்த கூலியுழைப்பையும் பெற்றுக்கொள்வதற்கான உலகின் மிகவும் சாதகமான "பிரதேசங்களை" தேர்ந்தெடுப்பதற்கு முயல்கின்றன. இந்தப் பிரிவினை இயக்கங்கள் இந்தத் தேவையினை நிறைவேற்றும் கருவிகளாகத் தொழிற்படுகின்றன. தேசியஅரசுகளுக்குப் பதிலாக பொருளாதார ரீதியில் சாதகமான பிரதேசங்களை பிரிப்பது தொடர்பாகவும், ஒவ்வொரு நாட்டினதும் வளமான பகுதிகளை தேர்ந்தெடுத்து இணைப்பதன்மூலம் "பிராந்திய நாடுகளை" (Regional States) உருவாக்குவது தொடர்பாகவும், "பிராந்திய நாட்டின் எழுச்சி" (The Rise Of the Region State) என்ற தலைப்பில் கெனிச்சி ஒமாய் (Kenichi Ohmae) என்ற முதலாளித்துவப் பொருளாதார நிபுணர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "பிராந்திய நாடுகள்" இயற்கையான பொருளாதார

படிப்பகம்

www.padippakam.com

பிரதேசங்கள். அவைகள் ஒரு குறிப்பிட்ட நாட்டின் பூகோள எல்லைகளுக்குள் இருக்கும்., அல்லது இல்லாமல் இருக்கும். - அவை அப்படி இருந்தால் அது வரலாற்று விபத்தாகும். சில சந்தர்ப்பங்களில் தனித்துவமான இந்த பொருளாதார அலகுகள் வடக்கு இத்தாலி, வேல்ஸ் (Wales), கற்றலோனியா, (Catalonia), அல்சாசலோறேயின், (AlsaceLorraine), அல்லது பாடன்வூட்டம்பேர்க், (Baden-Wü rttemberg) போன்ற பகுதிகளாக தாய் நாடுகளிலிருந்து பிரிந்திருக்கும். வேறு சந்தர்ப்பங்களில் தேசிய எல்லைகளைக் கடந்து இணைந்திருக்கும் சந்தியாகோ (San Diego), ரியூயானா (Tiguana), போலவும் கொங்கொங், (Hong Hong), தெற்குச் சீனா போலவும் பொருளாதார வடிவங்களை எடுக்கும். அல்லாவிடில் "வளர்ச்சி முக்கோணமாகிய" சிங்கப்பூரையும் ,அதனது அயலில் இருக்கும் இந்தோனேசியத் தீவுகளைப் போலவும் இருக்கும் இன்றைய எல்லைகளற்ற உலகில் இவை இயற்கையான பொருளாதார பிரதேசங்கள். இங்கே என்ன முக்கியமெனில் ஏதோ ஒரு வகையில் ஒன்றுடன் ஒன்றை இணைக்கையில் உலகப்பொருளாதாரத்தில் வெற்றிகரமாகப் பங்கெடுப்பதற்கான முக்கியமான கலவையை இவை சொந்தமாகக் கொண்டிருக்கின்றன. ( Foreign Affairs, Spring 1993, பக்கம் 79).

இந்த நிலைமைகளில் தனிநாடுகளைக் கோரும் தேசிய முதலாளித்துவ ,குட்டிமுதலாளித்துவ போக்குகள் ஏகாதிபத்தியத்தின் இரும்புப்பிடிக்குள் இருந்து விடுபட்டு சுயாதீனமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதுபற்றி கதைப்பது தொழிலாளவர்க்கத்தையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் ஏமாற்றுவதற்கான திட்டமிட்ட சதியாகும். இவர்கள் உருவாக்கும் நாடுகளில் ஏகாதிபத்திய சரண்டலை பாதுகாக்கும் விசேட சர்வாதிகார ஆட்சிகளையே மக்களுக்கு வழங்குவதற்கான தயாரிப்புக்களை மேற்கொள்கின்றனர்.

## முதலாளித்துவ வேலைத்திட்டம்.

அனைத்துப் "பழைய" இயக்கங்களின் தலைமைகளும் தாங்கள் போட்டுக்கொண்ட கோமாளித்தனமான இடதுசாரி வினோத உடைகளினால் ஒன்றை மட்டும் ஒருபோதும் மறைக்கவில்லை. இவர்கள் நிர்வாணமாகக் காட்டியது தமிழ் முதலாளித்துவத்தின் நலன்களுக்கு கீழ்படிந்ததே இவர்களது வேலைத்திட்டமும், இயக்கமும் என்பதனையே. இவர்களது "பழைய கொள்கை விளக்கப்புத்தகத்திலிருந்து தேடியெடுத்து சமர் மிகவும் விசுவாசமாக பின்வருமாறு எழுதுகின்றது:- "தமிழ் தேசியஇனத்தின் அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கமும் இணைந்து அவற்றிற்கிடையேயான முரண்பாட்டை தேசிய முரண்பாட்டிற்குள் கீழ்படுத்தி சிநேகபூர்வமான வழிகளில் கையாளுதல்". இதழ் 7 (பக்கம்6)

உணர்மையுள்ள தமிழ் தொழிலாளர்களுக்கும், இளைஞர்களுக்கும் இந்த வடிவத்திலோ அல்லது சில சிறிய மாற்றங்களோடோ இயக்கங்களின் வேலைத்திட்ட, கொள்கைவிளக்கப்புத்தகங்களில் ஏற்கனவே வாசித்தது ஞாபகத்துக்கு வரலாம். இந்த வகையில் மட்டுமல்ல ,வரலாற்றுரீதியாகவும் இந்த வேலைத்திட்டம் மிகப்பழையது. ரஷ்யப்புரட்சியில் மென்சவிக்குகள் முன்வைத்த இரண்டுகட்டப்புரட்சியின் ஒரு தோற்றம்.

தொழிலாளவர்க்கத்திற்கு தேசிய முரண்பாடு கிடையாது. அது தேசங்களின் எல்லையைக் கடந்து சர்வதேசரீதியாக புறநிலையாக ஐக்கியப்பட்டிருக்கும் ஒரேஒரு வர்க்கம். தொழிலாளவர்க்கத்திற்கும், ஏனைய வர்க்கங்களுக்கும் இடையில் இருக்கும் முரண்பாடுகள் வர்க்க போராட்டத்தில் தொழிலாளவர்க்கத்தின் தலைமையை நிலைநாட்டுவதன்மூலமும் முதலாளித்துவவர்க்கத்தின் மீது தொழிலாளவர்க்கத்தின் சர்வாதிகாரத்தினை உருவாக்குவதன் மூலம் மட்டுமே தீர்த்து வைக்கப்படும். எந்த நிலைமைகளிலும் தொழிலாளவர்க்கத்தின் வேலைத்திட்டத்தின் அச்சாணி அதனது வர்க்க சுயாதீனத்தைப் பாதுகாப்பதாகத்தான் இருக்கமுடியும்.

இங்கேதான் தமிழீழவிடுதலைப்போராட்டம் ஏன் முட்டுச்சந்திக்கு வந்தது என்ற கேள்விக்கான விடை இருக்கின்றது. இந்தப் போராட்டம்

படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளவர்க்கத்தின் தலைமையில் இல்லாததின் நேரடி விளைவே ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான அத்தியாவசியமான, ஜனநாயகக் கோரிக்கைகளுக்குப் பதிலாக இன்று அவர்கள் தமிழ் முதலாளித்துவத்தின் சர்வாதிகாரத்தினையும் பல்தேசியநிறுவனங்களது சரணடலையும் முகம்கொடுக்கவேண்டிய நிலைமை உருவாகியிருக்கின்றது. தமிழ்மக்களின் இந்த நிலைமை இந்த நூற்றாண்டின் ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் பின்தங்கிய நாடுகளில் ஜனநாயகப்புரட்சியின் தலைவனாக யார் இருப்பது என்ற மிகவும் தீர்க்கமான பிரச்சினையின் மிகவும் கசப்பான அனுபவமாகும். தமிழ் ஒடுக்கப்பட்ட மக்களோ அல்லது ஆசிய, ஆபிரிக்க, லத்தீன்அமெரிக்க கண்டங்களில் வாழும் லட்சக்கணக்கான மக்களோ இந்தப்பிரச்சினைக்கான தீர்வினை ரஷ்யப்புரட்சியின் அனுபவங்களுக்கு வெளியிலிருந்து பெற்றுவிடமுடியாது.

ரஷ்யப்புரட்சியில் மென்சவிக்குகளது வேலைத்திட்டம் வரப்போகும் புரட்சி முதலாளித்துவத்தை ஆட்சியிலமர்த்தும் ஒரு முதலாளித்துவக் குடியரசை உருவாக்கும் என்றதிலிருந்து ஆரம்பித்தது. முதலாளித்துவ ஜனநாயகத்தின் ஒரு நீண்டகாலப்பகுதியினூடு தொழிலாளவர்க்கம் தனது சுயமான போராட்டங்களினால் சோசலிசப்புரட்சியை நோக்கி முன்னேறும் என்ற முடிவிற்கும் வந்தது. எனவே வரப்போகும் புரட்சியில் தொழிலாளவர்க்கம், முதலாளித்துவவர்க்கத்தினரின் பிரிவுகளுடன் ஒரு அரசியல் கூட்டுக்குப் போவதுடன் அதனது தலைவனாக முதலாளித்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியது. லெனினதும், ரொக்சியினதும் வேலைத்திட்டம் இதனை முழுமையாக நிராகரித்ததுடன் தொழிலாளவர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை நிலைநாட்டுவதை மையமாகக் கொண்டிருந்தது. ரஷ்யமுதலாளித்துவத்தின் பிற்போக்குத் தன்மையையும், தொழிலாளவர்க்கத்தின் மீதுள்ள அதனது பகையுணர்ச்சியும், பயமும் அதனை ரஷ்யாவின் ஜனநாயகப்புரட்சியின் பணிகளான நிலப்பிரபுத்துவத்தின் எச்சசொச்சங்களை அழித்தொழிப்பதற்கு லாயக்கற்றதாக்கியிருக்கின்றது. ரஷ்யாவின் பெரும்பான்மையான ஏழை விவசாயிகளின் அரசியல் பாத்திரம் எவ்வளவுதான் முக்கியமானதாக இருந்தாலும் அவர்களால் இன்னொரு வர்க்கத்தின் முன்னோக்குக்குள் மட்டும்தான் இயங்கமுடியும். எனவே ரஷ்யாவில் ஜனநாயகப்புரட்சியின் தலைமை தொழிலாளவர்க்கத்தின் தோள்களில்தான் சுமத்தப்பட்டிருக்கின்றது. தனது தலைமையின் கீழ் விவசாயிகளை அணிதிரட்டிய தொழிலாளவர்க்கம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிர்மாணிப்பதன் மூலம்தான் ஜனநாயகப்புரட்சியினை நிறைவுசெய்ய முடியும். இந்த ஜனநாயகப்புரட்சியை வெற்றிகரமாக்குவதற்கான முன்நிபந்தனைகள் முதலாளித்துவ சொத்துடமை முறைகளை இல்லாதொழிப்பதில் தங்கியிருக்கின்றது. இதனால் இந்த ஜனநாயகப் புரட்சியானது ஒரு சோசலிச குணாம்சத்திற்கு வெளிப்படையாக மாற்றமடைகின்றது.

இந்த முன்னோக்குத்தான் போல்சவிக் புரட்சியினை வெற்றிக்கு இட்டுச் சென்றதுடன் உலகின் மிகப்பின்தங்கிய ரஷ்யாவில் பல வேறுபட்ட தேசியஇனங்களின் ஐக்கியத்திற்கும், சோசலிச சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்குமான மூலைக்கல்லாக இருந்தது.

## பின்தங்கியநாடுகளின் தேசியமுதலாளித்துவத்தின் தன்மை.

"சமர்" தற்போது முன்வைக்கும் இந்த அனைத்து வர்க்கக்கூட்டு போல்சவிக்குகளினது வேலைத்திட்டத்தினை குழிதோண்டிப் புதைத்து மென்சவிக் வேலைத்திட்டத்திற்கு உயிரூட்டிய ஸ்டாலின், புகாரின் ஆகியோரது சித்தாந்த ஆயுதக்கிடங்குகளிலிருந்து பெறப்பட்டதாகும். 1928ல் சீனப்புரட்சியின் தோல்விகளின் மத்தியில் மூன்றாவது அகிலத்தின் ஆறாவது காங்கிரஸ் ஸ்டாலின், புகாரினால் எழுதப்பட்ட வேலைத்திட்டத்தை நிறைவேற்றியது. இந்த வேலைத்திட்டம் போல்சவிக்குகளது உலகப்புரட்சி முன்னோக்கினை முழுமையாக நிராகரித்தது. காலனித்துவ முதலாளித்துவத்தின் முன்னால் தொழிலாளவர்க்கத்தை நிராயுதபாணியாக்கும் நோக்கில் "காலனித்துவ நாடுகளின் முதலாளித்துவத்துடன் தற்காலிகமான

படிப்பகம்

www.padippakam.com

உடன்பாடுகள் தொழிலாள, விவசாயிகளின் புரட்சிகர இயக்கங்களுக்கு அது தடையாக இல்லாமல் ஏகாதிபத்தியத்திற்கெதிரான உண்மையான போராட்டத்தை அது நடாத்தும் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது." என இந்த வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. (லெனினிற்கு பின்பு மூன்றாவது அகிலம், பக்கம் 127. ஆங்கிலப்பதிப்பு, NewPark Publications, London.). இது தனியே சீனப்புரட்சியினை மட்டுமல்ல, அதன் பின்னர் காலனித்துவ நாடுகளில் தோன்றிய அனைத்துப் புரட்சிகர எழுச்சிகளிலும் தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனத்தினை கழுத்தறுத்ததோடு தேசிய முதலாளித்துவத்திற்கு அடிபணியபண்ணுவதற்குமாகத் தயாரிக்கப்பட்டது.

ட்ரொக்சி "ஏகாதிபத்தியத்திற்கெதிரான உண்மையான போராட்டத்தை" செய்வதற்கு காலனித்துவ நாடுகளின் தேசியமுதலாளித்துவத்திற்கு சக்தியிருக்கின்றது என்று சொல்வது மென்சவிக்குகளது வேலைத்திட்டத்திற்கு திரும்பிப்போவது என வாதிட்டார். நிலப்பிரபுத்துவம், சார் மன்னனிது அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து ரஷ்ய முதலாளித்துவத்திற்கு புரட்சிகர குணாம்சம் உருவாகும் என்பதே மென்சவிக்குகளது வாதம். இதே அடித்தளத்தில் காலனித்துவ அடக்குமுறை தேசியமுதலாளித்துவத்திற்கு புரட்சிகர குணாம்சத்தை வழங்கும் என ஸ்டாலின், புகாரினால் முன்வைக்கப்பட்டதை நிராகரித்த ரொக்சி தேசியமுதலாளித்துவத்தின் வேலைத்திட்டத்தை தீர்மானிப்பது:-

**"முதலாளித்துவத்தின் கொள்கையின் தன்மை தொடர்பான கேள்விகள் புரட்சிகர போராட்டத்தை நடாத்தும் தேசத்தினது முழுமையான உள்ளார்ந்த வர்க்கஉறவுகள் எந்த வரலாற்றுக்கட்டத்தில் இந்தப் போராட்டம் உருவாகின்றது. தேசியமுதலாளித்துவம் முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ எந்த மட்டத்திற்கு அரசியல், பொருளாதார இராணுவ ரீதியில் உலக ஏகாதிபத்தியத்தில் தங்கியிருக்கின்றது, இறுதியாகவும்,மிக முக்கியமாகவும் எந்த மட்டத்திற்கு உள்நாட்டுத் தொழிலாளவர்க்கம் வர்க்கரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது, அத்துடன் அதற்கு சர்வதேச புரட்சிகர இயக்கங்களுடன் என்ற தொடர்புகள் இருக்கின்றது என்பதினாலே தீர்மானிக்கப்படுகின்றது.**

**ஒரு ஜனநாயக அல்லது தேசியவிடுதலை இயக்கம் முதலாளித்துவத்திற்கு சுரண்டலை தீவிரமயப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கும். புரட்சிகர அபிவிருத்திகளுக்குள் தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான தலையீடு முதலாளித்துவத்தின் முழுமையான சுரண்டலை முடிவுக்கு கொண்டுவரும் பயமுறுத்தலை அதற்கு விளக்குகின்றது".** (லெனினிற்கு பின்பு மூன்றாவதுஅகிலம், பக்கம் 131)

தேசிய முதலாளித்துவம் பற்றிய 1928ன் இந்த மதிப்பீட்டின் சரியான தன்மை இன்று 65 வருடங்களுக்கு பின்னர் ஏகாதிபத்தியத்தின் மரணநெருக்கடி நிலைமைகளில் உலகின் மூலைமுடுக்கெல்லாம் உலகப்பொருளாதாரத்தின் கட்டுப்பாட்டினுள் வந்துவிட்ட நிலையில் முழுமையாக நிரூபித்துக்காட்டப்படுகின்றது.

"ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டம்" என்ற சொல்லை சம்பிரதாயத்திற்கு தன்னும் உச்சரிப்பதை நிராகரிக்கும் தேசியமுதலாளித்துவம் ஜனநாயகப்புரட்சியில் தொழிலாளவர்க்கத்தின் குரல்வளையை நசுக்கும் சக்திகளாக உருமாறியிருக்கின்றது. பலஸ்தீனவிடுதலைஇயக்கமும், ஆபிரிக்கதேசியகாங்கிரசும் (ANC), சான்டினிஸ்டாக்களும் (Sandinista), தமிழ்தேசியவிடுதலை இயக்கங்களும் தவிர்க்கமுடியாதபடி ஏகாதிபத்தியத்தின் தேவைகளுக்கு சுதந்திரவர்த்தகவலயத்தினை உருவாக்க தயாராகவிருப்பதன் வரலாற்றுஅடித்தளம் இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த முதலாளித்துவ வேலைத்திட்டத்தில்தான் இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# சோசலிசப்புரட்சி வேலைத்திட்டம்

தமிழீழவிடுதலைப்புலிகளின் வேலைத்திட்டத்திற்கும், அதற்கு எதிரான ஏனைய அனைத்து இயக்கங்களுக்குமிடையில் மூலோபாய ரீதியில் சீனப்பெருஞ்சுவர் இல்லை. தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு எதிரான ஏனைய இயக்கங்கள் விடுதலைப்புலிகளுக்கு முடிவுகட்டுவதால் முதலாளித்துவத்தைப்பாதுகாக்கலாம் என இனவாத அரசிற்கு சத்தியம் செய்து கொடுக்கையில், LTTE தமிழ்பிரதேசங்களை தனது கையில் ஒப்படைப்பதால் முதலாளித்துவத்தைப்பாதுகாப்பதற்கான நிபந்தனைகளை உருவாக்குவது தொடர்பாக வாக்குறுதியளிக்கின்றது. இறுதியில் இவர்கள் அனைவரும் பின்பற்றுவது ஒரே பாதையாகும். அது இலங்கைத்தீவில் முதலாளித்துவத்தைப் பாதுகாப்பது என்பதே.

சமர் வைத்திருக்கும் "மூன்றாவது பாதை "அடித்தளத்தில் தற்போதைய இயக்கங்களின் ஒரேஒரு பாதையான முதலாளித்துவப் பாதுகாப்பு என்பதிலிருந்து அடித்தளத்திலிருந்து ஒருபோதும் வேறுபடவில்லை. இந்த 'மூன்றாவதுபாதை" என்ற தேசியவாதஇயக்கம் ஒன்றை உருவாக்கும் பிற்போக்கு வேலைத்திட்டத்தினை தொழிலாளர்களும், ஒடுக்கப்பட்டமக்களும் முழுமையாக நிராகரிக்க வேண்டும்.

தமிழ் தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்டமக்களுக்கு முன்னால் இருக்கும் ஒரேஒரு வழி தீவின் தொழிலாளவர்க்க ஐக்கியத்திற்காகப் போராடுவதாகும். இலங்கைத்தீவில் சோசலிசப்புரட்சியின் கட்சியாக நான்காவது அகிலத்தின் அனைத்துலகக்குழுவைக் கட்டியெழுப்புவதும் "தமிழீழ சிறீலங்கா சோசலிசக்குடியரசை" உருவாக்குவதற்கு போராடுவதுமே இன்றைய முட்டுச்சந்தியிலிருந்து வெளியேறுவதற்கான ஒரேயொரு பாதையாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# ஜேர்மனியில் இனவாதத்தின்வளர்ச்சியும் தொழிலாளவர்க்கத்தின் படிப்பினைகளும்



சோலிங்கனில் எரிக்கப்பட்ட வீடு.

சோலிங்கனில் துருக்கி நாட்டைச் சேர்ந்த ஐந்து பெண்களும், குழந்தைகளும் மே29 இனவாதத்தாக்குதலால் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திலிருந்து அவசியமான அரசியல் படிப்பினைகளை தொழிலாளவர்க்கம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சோலிங்கன் படுகொலையின் பின்னைய ஒவ்வொரு இரவும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள், அரசியல் அகதிகள் வாழும் வீடுகள் கொழுத்தப்பட்டும், அவர்கள்மேல் கொடூரமான தாக்குதல் நடாத்தப்படுவதனூடாகவே கடந்து செல்கிறது. கடந்த இரு மாதங்களில் மட்டும் நூற்றிற்கும் மேற்பட்ட வீடுகளும், அகதிமுகாம்களும் தீமூட்டப்பட்டுள்ளது. அதில் வாழ்ந்த தொழிலாளர்களும், அவர்களது குடும்பங்களும் எரிந்து கருகிய தோல்களுடனேயே உயிர் தப்ப நேரிடுகிறது. வரப்போகும் நாட்களில் கொளுத்தப்படவேண்டிய வீடுகளும், கொல்லப்பட வேண்டிய நபர்களினதும் பட்டியல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டுள்ளன. இவைதான் உலகிலேயே "மிக நாகரீகமடைந்த நாடு" என்று

படிப்பகம்

www.padippakam.com

சொல்லப்படுவதிலுள்ள தற்போதைய நிலைமைகள்.

ஆனால் வெளிநாட்டுத்தொழிலாளர்களின் மேலான இத் தீவைப்புத் தாக்குதல்கள் சில தனிநபர்களின் சீரழிவின் அகநிலை வெளிப்பாடல்ல. இப்பிரச்சனையை அகநிலை ரீதியாக அணுகுவது பிரச்சனைக்கான உண்மையான காரணங்களை தெளிவுபடுத்தாது., மாறாக அதை மூடிமறைக்கும்.

இவ் இனவாதத் தாக்குதல்களை பார்ப்பதற்கு நம் முன்னே இரு வழிமுறைகள் உள்ளன. முதலாவது, ஜேர்மன் முதலாளித்துவத்தினாலும், SPD தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் தேசியவெறி நிலைப்பாட்டிலிருந்து இந்த இனவாதப் பாசிச தாக்குதல்களின் அலை வெளிநாட்டுக்காரர்களும், அரசியல் அகதிகளும் அதிகரித்துவிட்டதால் ஏற்பட்டதொன்று என்பது. அடுத்த நிலைப்பாடு, ஜேர்மனியில் தற்போது அபிவிருத்தி அடைந்துவரும் இனவாதம் முதலாளித்துவம் சர்வதேச ரீதியாக முகம்கொடுக்கும் நெருக்கடியினதும், கோல் (Kohl) அரசாங்கத்தினதும், SPD, தொழிற்சங்க அதிகாரத்துவங்களினதும் இனவாத அரசியலினால் உருவாக்கப்பட்டதொன்று என்பதை பிரதிநிதித்துவப்படுத்துவது.

தேசியவாதத்தின் அடித்தளத்தில் ஓர் நாட்டில் உள்ள பிரச்சனைக்கு தீர்வுகாண முடியாதது மட்டுமல்ல, அந்நாட்டின் பிரச்சனைகளை உருவாக்கிய காரணங்களையும் விளங்கிக் கொள்ள முடியாது. தொழிலாளவர்க்கம் ட்ரொக்சி குறிப்பிட்டது போல் உலக விடயங்களிற்கு மீண்டும் திறவுகோலாக மாறியுள்ள ஜேர்மனின் மாற்றங்களை புரிந்துகொள்ள தனது சுயாதீனமான நிலைப்பாட்டை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும்.

## SPD, தொழிற்சங்கங்கள் இனவாதிகளின் பக்கத்தில்

கடந்த இருபது ஆண்டுகளில் உற்பத்தி மேலும் மேலும் சர்வதேசரீதியாக ஒருங்கிணைக்கப்பட்டதும், உலக பொருளாதாரத்தை ஒன்று குவிப்பதில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களும் அனைத்து நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களை புறநிலை ரீதியாக ஐக்கியப்படுத்தியுள்ளது. ஆனால் அரசியல் ரீதியாய் உலகின் மிகுதி எல்லா நாடுகளையும் போல்தான் ஜேர்மனியிலும் தொழிலாளவர்க்கத்தின் ஏனைய எல்லா பாரம்பரிய இயக்கங்களைப் போலவே SPD, தொழிற்சங்க அதிகாரத்துவங்களாலும் முதலாளித்துவத்திற்கெதிரான பொதுப் போராட்டத்தில் தொழிலாளவர்க்கம் இனவாத அடிப்படையில் பிளவுபடுத்தப்படுகின்றது.

"ஜேர்மனி ஜேர்மன்காரனுக்கே" என்ற நாசிகளின் இனவாத கோஷம் மிக நீண்ட காலத்திற்கு முன்பே கோல் அரசாங்கத்தினதும்,SPD, DGB தொழிற்சங்க அதிகாரத்துவங்களினதும் உத்தியோகபூர்வமான கொள்கையாகிவிட்டது. "வெளிநாட்டுக்காரர்களே வெளியேறு" என்ற சுலோகம் இவ் அனைத்துக் கட்சிகளினதும், இயக்கங்களினதும் பிரதான அரசியல் பதாகையாக்கப்பட்டுள்ளது.

சோலிங்கன் படுகொலை கோலின் கூட்டரசாங்கம் (CDU,CSU), SPD யின் முழு ஆதரவுடன் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரும் உரிமையை உத்தியோகபூர்வமாய் நீக்கியதன் இருதினங்களின் பின் இடம்பெற்றது. இதே கிழமை பாராளமன்றத்தில் மீண்டும் SPD யின் ஆதரவுடன் "Solidar pakt" எனப்படுவது அறிமுகப்படுத்தப்பட்டது. இது தொழிலாளர்களையும், வேலையற்றோரையும் மோசமான வறுமைக்குள் தள்ளுவதை இலக்காய் கொண்டுள்ளது.

கடந்தவருட இறுதியில் Rostock அரசியல் அகதிமுகாம் மேலான தாக்குதல் Petersburg மகாநாட்டில் SPD யின் கட்சித் தலைமை அரசியல் தஞ்சம் கோரும் உரிமையை நீக்க முடிவெடுத்த அடுத்தநாள் நடைபெற்றது. பின் SPD யின் விசேட கட்சி காங்கிரஸ் இம்முடிவை உறுதிப்படுத்திய ஒரு கிழமையின் பின் Möllnல் மூன்று துருக்கிப் பெண்கள் கொலை செய்யப்பட்டனர். கோல் அரசாங்கம் SPDயுடன் இணைந்து

படிப்பகம்

மேற்கொள்ளும் இனவாத அரசியல் இறுதி ஆய்வுகளில் "பாசிஸ்டுகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

www.padippakam.com

## ஓர் வரலாற்றுக் காட்டிக்கொடுப்பு

கிட்லரின் பாசிச சர்வாதிகாரம் வீழ்ச்சியடைந்து 45 வருடங்களின் பின் பாசிச காடையர்கள் ஜேர்மனியில் மீண்டும் தலைதூக்குவது தொழிலாளவர்க்கம் ஸ்ரலினிஸ்டுகளாலும், SPD, தொழிற்சங்க அதிகாரத்துவங்களாலும் வரலாற்று ரீதியாய் காட்டிக்கொடுக்கப்பட்டதன் பெறுபேறாகும். 1930களில் ஜேர்மன் தொழிலாளவர்க்கத்தின் பாரிய சக்தி ஸ்ரலினிஸ்டுகள், SPD, தொழிற்சங்க அதிகாரத்துவத்தினாலும் முடமாக்கப்பட்டது, கிட்லரின் பாசிச ஆட்சிக்கு கதவுகளை திறந்டவிட்டது.

1933ல் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி (KPD)தான் கொண்டிருந்த 600,000 அங்கத்தவர்களுடனும் ஆறு மில்லியன் வாக்காளர்களுடனும் எதுவித போராட்டமும் இல்லாமல், எதுவித எதிர்ப்பும் இல்லாமல் கிட்லர் பாசிச ஆட்சியை கைப்பற்ற நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுத்தது. அவர்களின் பிரதான கோஷம் "முதலில் கிட்லர் பின்பு நாம்". கிட்லரின் வெற்றி ஜேர்மன் ஐரோப்பிய தொழிலாளர்கட்கு கொடூரமான விளைவுகளை வழங்கியது.

SPDயின் ஆளுமையின் கீழ் இருந்த தொழிற்சங்கங்களைப் பொறுத்த அளவில் அவர்கள் 1933 மே தினத்தில் "சுவஸ்ரிக்கா" சின்னத்தின் (பாசிச சின்னம்) கீழ் தமது அணிவகுப்பை செய்தனர். தமது அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்ட போதும், பின் நாசிகளால் வதைமுகாம்களில் படுகொலை செய்யப்பட்ட போதும் இவ் அதிகாரத்துவங்களின் பிரதான கோஷம் "சித்திரைவதை முகாம்களிலும் நமது அங்கத்தவர்களிற்கு நாம் கல்வியறிவூட்டுவோம்" என்றிருந்தது.

கிட்லரின் சொந்த வேலைத்திட்டத்தை விட இவ் அனைத்து அதிகாரத்துவங்களின் வலதுசாரி அரசியலே அவரது வெற்றிக்கு அனைத்து முன்னிலைமைகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

இரண்டாம் உலகயுத்த முடிவின் பின் தொழிலாளவர்க்கம் நாசிகளுடன் கணக்குத்தீர்க்க எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கில் SPD யினாலும், கிழக்கில் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினாலும் முறியடிக்கப்பட்டது.

கிழக்கு ஜேர்மனியில் தொழிலாளர்களால் நிறுவப்பட்ட பாசிச விரோத கமிட்டிகள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வன்முறையால் கலைக்கப்பட்டதுடன் தொழிலாளவர்க்கத்தை ஒடுக்குவதற்காக பல நாசி உத்தியோகத்தர்கள் ஸ்டாலினிச ஆட்சியின் அரச பதவிகளில் அமர்த்தப்பட்டனர். மேற்கு ஜேர்மனியில் புதிய ஜனநாயககுடியரசு பாசிஸ்டுகளுடன் கணக்குத் தீர்த்து நிறுவப்படவில்லை., மாறாக அக் காடையர்களின் உதவியுடன் உருவாக்கப்பட்டது. பல ஆயிரக்கணக்கான நாசி உத்தியோகத்தர்களிற்கு அரசாங்கத்தில், போலீசில், இராணுவத்தில், நீதிமன்றங்களில் உயர்பதவிகள் வழங்கப்பட்டது.

கிட்லரின் பாசிசஆட்சி தற்செயலாக உருவானதொன்றல்ல. அவனது ஆட்சி ஏகாதிபத்தியத்தின் உற்பத்தி. ஜேர்மன் ஏகாதிபத்தியம் ஏகாதிபத்திய வர்த்தக பகையாளிகளிற்கெதிரான யுத்தத்தை தொடுப்பதற்கும், உள்நாட்டில் தொழிலாளவர்க்கத்தை நசுக்குவதற்குமாக கிட்லர் பாசிசம் உருவாக்கப்பட்டது.

இந்நூற்றாண்டில் ஜேர்மன் ஏகாதிபத்தியத்தை இரண்டு யுத்தங்களிற்கு தள்ளிய அனைத்து புறநிலை முரண்பாடுகளும் இன்று புதிப்பிக்கப்பட்ட சக்தியுடன் முன்னணிக்கு வந்துள்ளது. ஜேர்மன் முதலாளித்துவம் இனவாதம், தேசியவெறி, இராணுவவாத, பாசிச பரிவாரங்களை ஏகாதிபத்திய யுத்தத்திற்காக மிக நனவு பூர்வமாய் மீண்டும் அணிதிரட்டப்படுகின்றது. இரண்டாம் உலகயுத்த முடிவின் பின் முதல் தடவையாக ஜேர்மன் இராணுவம் SPD ன்பூரவுடன் 1991 பாரசீக வளைகுடாவிற்கும் 1992 கம்போச்சியா, பொஸ்னியாவிற்கும், இப்போது சோமாலியாவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சில அரசியல் முடிவுகள்.

படிப்பகம்

www.padippakam.com

இயக்கம் ஜேர்மனியில் இன்னும் அபிவிருத்தியடையவில்லை. ஆனால் தொழிலாளவர்க்கம் தனது சொந்த சர்வதேசிய முன்னோக்கிற்கான போராட்டத்தை நடாத்தாவிடில் கூர்மையடைந்து செல்லும் உலக முதலாளித்துவ நெருக்கடியினாலும், SPD, தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் வலதுசாரி இனவாத அரசியலினூடாயும் அப்படியானதொரு இயக்கம் வளர்ச்சியடைவதற்கான நிலைமைகள் உள்ளன.

பாசிசப் போக்குகளின் வளர்ச்சி ஓர் தூய்மையான ஜேர்மன் பிரச்சனை அல்ல. முதலாளித்துவம் எல்லா நாடுகளிலும் ஒரே சட்டங்களின் அடிப்படையிலேயே இயங்குகின்றது. "ஜேர்மனி ஜேர்மன்காரனுக்கே" என்பதைப்போல் "அமெரிக்காவே முதல்" என்று அங்குள்ள தேசிய வெறியர்களும், "பிரித்தானியாவின் பாரம்பரியங்களைப் பேணு" என்று பிரித்தானிய வலதுசாரிகளும், "தமிழீழம் தமிழனுக்கே" என்று தமிழ் தேசியவாதிகளும் குலைக்கின்றனர் உலகத்தின் வெவ்வேறு மூலைகளில் இக் கோஷங்கள் எழுப்பப்பட்டாலும் இவை ஒவ்வொன்றும் ஒரு மலச்சட்டியைப் போன்றது. மலச்சட்டிகளிற்கிடையே பிரதான வேறுபாடுகள் என்பது கிடையாது.

எல்லா முதலாளித்துவ நாடுகளையும் விட ஜேர்மனியில் பாசிச சக்திகள் மேலும் தலைதூக்கக் காரணம் ஜேர்மன் முதலாளித்துவத்தின் தாமதமான அபிவிருத்தியினூடாக அதன் அரசு நிறுவப்பட்டதிலும், அவ் அரசு தனது உயிர் வாழ்விற்கும் ஜனநாயக பாரம்பரியங்களை அடிப்படையாக கொண்டிருக்காததிலும் வேர் விட்டுள்ளது. இப்பிரச்சனையை தெளிவாய்ப் பார்ப்பதற்கு நம்முன்னுள்ள உதாரணம் ஐரோப்பாவின் ஏனைய முதலாளித்துவ நாடுகளாகும். பிரித்தானியாவிலும், பிரான்சிலும் முன்பிருந்த சட்டங்களின்படி அங்கு பிறந்த ஒருவர் அந்நாட்டின் குடியுரிமையை பெற்றுக்கொள்வது சாதாரணமான ஓர் விடயம். ஆனால் ஜேர்மனியின் சட்டங்கள் ஜனநாயகத்தின் அடிப்படையில் அல்ல., விலங்கியலின் அடிப்படையில் எழுதப்பட்டதால் இரத்தத்தின் தன்மையை மட்டும் வைத்தே குடியுரிமை தீர்மானிக்கப்படும்.

1848 இல் ஜேர்மன் முதலாளித்துவப் புரட்சி பிரான்சையும், பிரித்தானியாவையும் போல் பிரபுத்துவத்துடன் கணக்குத் தீர்த்த தன்மையை கொண்டிருக்கவில்லை. இதற்கு நேர் எதிரான முறையில் தொழிலாள வர்க்கத்திற்கெதிரான யுத்தத்தினூடாக பிரபுக்களுடன் கூட்டுச்சேர்ந்து தனது முதலாளித்துவ ஆட்சியை நிறுவியது. பொலீசும், இராணுவமும் இவ் முதலாளித்துவ அரசின் மிக பிரதான அடித்தளங்களாக்கப்பட்டது.

இப்படியான தன்மை கொண்ட அரசிடம் பாசிச கட்சிகளை தடைசெய்யக் கோரி MLPD,PDSம் ,குட்டிமுதலாளித்துவ அமைதிவாதிகளும் முன்வைக்கும் கோரிக்கை முழுமையான பிற்போக்குத்தனம் நிறைந்தது. உண்மையில் 1848ல் எப்படி ஜேர்மன் முதலாளித்துவம் தொழிலாளவர்க்கத்திற்கு எதிராய் பிரபுக்களுடன் கூட்டுச்சேர்ந்ததோ அதேபோல் தான் இன்றும் அதே வர்க்கத்திற்கெதிராய் பாசிஸ்டுகளுக்கு ஆதரவளிக்கின்றது.

Mölln படுகொலையின் பின் இக் குட்டிமுதலாளித்துவ தேசியவாத MLPD, PDS அமைதிவாதிகளுடன் இணைந்து இனவாதத்திற்கெதிரான "மெழுகுதிரி போராட்டங்களில்" குதித்தனர். பெரும்பான்மையான ஞாயிற்றுக்கிழமைகளில் இப்போராட்டம் இடம்பெற்றது. இதற்கு தலைமை தாங்கிய கிறீஸ்தவ பாதிரிகளும், நடிகைகளும் தமது கண் கூசாதவாறு எட்டத்தில் மெழுகுதிரியைப் பிடித்தனர். ஆனால் இனவாதத் தாக்குதலிற்கெதிரான "இப் போராட்டம்" எனப்படுவது சில கிழமைகளிற்குள் கோமாளித்தனமாய் தொடங்கியதைப் போல் முடிவடைந்தது. அதன்பின் இவ் மணித்தியாலம் வரை ஜேர்மனின் எந்தவொரு மூலையிலும் ஒரு மெழுகுதிரி கூட எரியவில்லை.

சோலிங்கன் படுகொலையின் பின்னர் இக்குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் இனவாதத் தாக்குதலை நிறுத்துவதற்கு இங்குள்ள வெளிநாட்டுத்தொழிலாளர்களிற்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்தனர். இவ் இரட்டைக் குடியுரிமையால் இனவாதத்


படிப்பகம்

www.padippakam.com

தாக்குதலிற்கு எதிராய் தொழிலாளர் தம்மை எப்படிப் பாதுகாத்துக் கொள்ளப் போகின்றனர்.? குட்டி முதலாளிகள் கூறுவதெல்லாம் சாதாரணமாய் இதைத்தான்.

: கனரக ஆயுதங்களுடன் நடாத்தப்படும் நாசிகளின் தாக்குதலை எதிர் கொள்ள ஒவ்வொரு துருக்கித் தொழிலாளியும் ஒரு கையில் ஜேர்மன் கடவுச் சீட்டுடனும், மறு கையில் துருக்கி கடவுச் சீட்டுடனும் நிற்க வேண்டும். தாக்குதலின் இறுதி முடிவு தீர்மானிக்கப்பட்ட பின் அரசை நோக்கிய அடுத்த கோரிக்கை இக்குட்டி முதலாளிகளால் உரத்த குரலில் எழுப்பப்படும் , "இறந்த தொழிலாளிக்கு ஓர் ஜேர்மன் சவப்பெட்டி வழங்கு" !

எதுவாயினும் இக்குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளிற்கும் ,போராட்டங்களிற்கும் ஓர் ஆழ்ந்த அரசியல் நோக்கம் உண்டு. அவை முதலாளித்துவ வர்க்கத்தின் முன்னால் தொழிலாளவர்க்கத்தை அரசியல் ரீதியாக நிராயுதபாணியாக்கும் இலக்கை கொண்டிருக்கின்றன. ஜேர்மனில் அடிப்படைச் சட்டம்ஒன்றன் பின் ஒன்றாக மாற்றப்பட்டதை தொடர்ந்து வெளிநாட்டுக்காரர்களிற்கல்ல, 1930ப் போல் ஜேர்மன் இராணுவத்திற்கே உலக குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஜேர்மனில் தற்போது அபிவிருத்தியடையும் இனவாதத்திற்குப் பதில் தமிழ்தேசியவாதமல்ல. முதலாளித்துவ அமைப்பினால் உருவாக்கப்படும் ஒவ்வொரு சமூக, பொருளாதார நெருக்கடியையும் தொழிலாளர்கள் சர்வதேச நிலைப்பாட்டில் நின்று அணுகவேண்டும்.

தொழிலாளவர்க்கம் ஓர் தேசிய வர்க்கம் அல்ல. அது ஓர் சர்வதேசிய வர்க்கம். முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்தில் அது சர்வதேசிய வர்க்கமாக மட்டுமே முன்னேற முடியும். தொழிலாள வர்க்கம் தனது சர்வதேச ரீதியான போராட்டங்களை ஒர் சோசலிச முன்னோக்கின் அடிப்படையில் ஐக்கியப்படுத்தி முதலாளித்துவ அமைப்பு முறைக்கெதிராய் தலையிடுவதனூடாகவே பாசிசத்திற்கும், அனைத்துவிதமான இனவாதங்களிற்கும் முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

முதலாளித்துவ அமைப்பு முறைக்கான போராட்டம் ஒருபோதும் தேசியவாத வேலைத்திட்டத்தை மையமாகக் கொண்டுள்ள பழைய இயக்கங்களின் கட்டமைப்பினுள் ஒருபோதும் அபிவிருத்தியடையப் போவதில்லை. இது ஜேர்மனிக்கு எவ்வளவு பொருந்துமோ அதேபோல் ஏனைய நாடுகளிற்கும் செல்லுபடியாகும். வரலாற்று ரீதியாக பார்ப்பின் தேசியவாத வேலைத்திட்டத்யையும், தேசியஅரச அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டிருந்த அனைத்து இயக்கங்களும் இறந்து விட்டன. இறந்ததொன்றை உயிர்ப்பிக்க முடியாது.

இந் நிலைப்பாட்டிலிருந்து தொழிலாளர்கள் ஓர் சர்வதேச சோசலிச முன்னோக்கின் பக்கம் திரும்ப வேண்டும். அப்படியானதொரு முன்னோக்கிற்காக நான்காம் அகிலத்தின் ஜேர்மன் பிரிவு BSA(Bund Sozialisticher Abeiter) உம் , புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்(RCL) வெளிநாட்டுக் கிளையும் மட்டுமே தொழிலாள வர்க்கத்தினுள் போராடுகின்றது.

இதன் அடித்தளத்தில் தொழிலாளர்கள் தாம் தேர்ந்தெடுக்கும் நாட்டிற்கு செல்வதற்கும், அங்கு முழுக்குடியுரிமையுடன் வாழ்வதற்கும் உள்ள ஜனநாயக உரிமையை நாம் பேணுகின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்மக்கள் மீதான 1983 ன் படுகொலைகளுக்கு பத்துவருடங்களுக்குப் பின்னால்......

கடந்த ஆடிமாதம் தமிழ்மக்கள்மீதான நாடுதழுவிய இனப்படுகொலையுடன் ஆரம்பித்த இனவாதயுத்தம் பத்துவருடங்களை கோரமான முறையில் நிறைவுசெய்தது. இந்த பத்து வருடங்களின் மோசமான அனுபவங்களை மறுபரிசீலனை செய்வது, எதிர்காலத்திற்கான தயாரிப்புக்களைச் செய்யவேண்டியது இன்று பிரதானமான அரசியல் கடமையாகும்.

சிங்கள இனவாதத்தை அடிப்படையாகக்கொண்ட சிறீலங்காவின் ஏகாதிபத்தியச்சார்பு அரசினது படைகள் கடந்த பத்துவருடகாலமாக தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை ஆக்கிரமித்திருப்பதுடன் தொடர்ந்த இராணுவ அட்டூழியங்களுக்கு உட்படுத்தியிருக்கின்றது. இந்த இராணுவ வெறியாட்டம் சமீபத்திய "ஒப்பரேசன் யாழ்தேவி" (Operation Yarldevi)யுடன் ஒரு புதிய கட்டத்திற்கு உக்கிரமாக்கப்பட்டுள்ளது.

இந்த பத்துவருடங்களில் வடக்கு, கிழக்கின் மக்கள் தங்களது ஆயிரக்கணக்கான உற்றார், உறவினர் கொடூரமாக கொல்லப்படுவதையும், இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் நிரந்தர அகதிகளாக விரட்டப்படுவதையும் நாளாந்த வாழ்க்கையின் தவிர்க்கமுடியாத அம்சமாக ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர். இந்தப்பிரதேசங்களின் பொருளாதாரக் கட்டுமானங்களாகிய விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில் போன்றவை முற்றுமுழுதாக நிர்மூலமாக்கப்பட்டிருப்பதுடன் பள்ளிக்கூடங்கள், நூல்நிலையங்கள், கோவில்கள், ஏனைய கலாச்சார நிலையங்கள் ஆகியவையும் இராணுவ வெறித்தனத்திற்கு பலியாக்கப்பட்டிருக்கின்றன.

சிறீலங்கா அரசின் பொருளாதாரத் தடையானது உணவுப்பொருள்கள், மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப்பொருள்களின் விநியோகத்தை தடைசெய்திருக்கின்றது. இது மக்கள் திரளினரை பட்டினிச்சாவின் விளிம்பிற்குத் தள்ளியிருக்கின்றது.

இந்த அரச அடக்குமுறையுடன் இணைந்து தமிழ்மக்களின் தினசரி சமூகவாழ்க்கை தமிழீழவிடுதலைப்புலிகளின் இராணுவத்தளபதிகளினால் தீர்மானிக்கப்படுகின்றது. இயந்திரத்துப்பாக்கிக் குழல்களின் பயமுறுத்தலால் வயதுவந்தோர் தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர்களின் மனிதசக்திகளுக்கு அப்பாற்பட்ட மகாபுருசத்தனத்தை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பள்ளிச்சிறுவர்களுக்கு மனிதசமுதாயத்தின் வரலாறு போரில் உயிர்நீத்த தமிழீழவிடுதலைப்புலிகளின் அங்கத்தவர்களை முதலில் தரிசிப்பதன் மூலம் கற்பிக்கப்படுகின்றது.

தமிழீழவிடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத "விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில்" அரசகூலிப்படை இயக்கங்கள் சிங்கள முதலாளித்துவத்தின் தேவைகளை நிறைவேற்ற "சமூகசேவை" செய்கின்றனர்.

கடந்த பத்துவருடகால போரின் கணக்கெடுப்பானது ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தளவில் இரண்டு கத்திமுனைகளுக்குள் அகப்பட்ட நிலையில் இருக்கின்றது. ஒரு பக்கத்தில் தினசரி

படிப்பகம்

அதிகரித்துவரும் அரசஅடக்குமுறை, மறுபக்கத்தில் தமிழீழவிடுதலைப்புலிகளினதும், ஏனைய "விடுதலை". இயக்கங்களினதும் அடக்குமுறை.

இது தமிழ், மக்களுக்கெதிரான சிங்கள மக்களின்போரல்ல. இந்தப்போர் ஏகாதிபத்தியங்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக உள்நாட்டு முதலாளித்துவத்தால் நடாத்தப்படுகின்றது. இந்தப்போரின் ஆரம்பத்திலிருந்தே அனைத்து தமிழ் தேசியவிடுதலை இயக்கங்களும் ( LTTE, EPRLF, PLOT, TELO, EROS, இன்னும் வேறுஇயக்கங்கள்) இவர்களுடன் இணைந்து தமிழர்விடுதலைக்கூட்டணி உட்பட அனைத்து தமிழ்முதலாளித்துவ அரசியல் போக்குகளும் தமிழ்தொழிலாளர்களினதும், ஒடுக்கப்பட்ட மக்களினதும் செலவில் சிங்களஅரசுடன் ஒரு சமரசத்திற்குப் போவதற்கான தயார்நிலையை நேரடியாகவும், மறைமுகமாகவும் வெளிப்படுத்தினர். இந்த அடித்தளத்தில் இவர்கள் அனைவரும் ஏகாதிபத்தியச் சதியாகியாகிய இந்திய, இலங்கை ஒப்பந்தத்தில் 1987ல் கைச்சாத்திட்டனர்.

இந்தப்போரில் தமிழ் முதலாளித்துவத்தின் பங்களிப்பு தமிழ்மக்களின் உரிமைகளுக்கு போராடுவதென்ற அடித்தளத்திலிருந்து உருவாகவில்லை. பதிலாக தங்களது சொந்த வர்க்க நலன்களைப் பாதுகாப்பது என்பதிலிருந்து தீர்மானிக்கப்பட்டது. சிங்கள முதலாளித்துவத்திற்கும், தமிழ் முதலாளிகளுக்குமிடையில் உண்மையான உறவு இருக்கின்றது என்பது பிரேமதாசாவின் கொலையின்போது தெளிவாகியது.

பிரேமதாசாவின் மரணச்செய்தியில் எல்.ரி.ரி யிலிருந்து ஐரோப்பாவில் வெளியாகும் ஈழநாடுவரை இந்த ஏகாதிபத்தியப் பிரதிநிதியிடம் ஒரு துளி மனிதாபிமானம் இருக்குமோ எனத் தேடியதை காணக்கூடியதாகவிருந்தது. இவர்கள் எல்லோருக்கும் சிகரம் வைத்தாற்போல் தமிழ் முதலாளிகளின் புத்திஜீவித்தலைவர் கனவான். என். திருச்செல்வம் பின்வருமாறு தனது "எதிரிக்கு" அஞ்சலி செலுத்தியிருந்தார். "இது (பிரேமதாசர்வின் கொலை) ஒரு பயங்கரமான துர்அதிஷ்டமாக இருந்தாலும் இது நாட்டிற்கு ஒரு புதிய மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கின்றது. இந்தச்சந்தர்ப்பம் பாரிய பொறுப்புக்களை உணர்ந்துகொள்ளவும் ஒரு கூட்டான தீர்மானங்களுக்கு வருவதற்கும் வழிதிறந்திருக்கின்றது." (Guardian Weekly 16.5.93).

இந்த இனவெறிப் போரானது தனிய தமிழ்ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரானதல்ல. இது நேரடியாக தீவு முழுமையும் வாழும் தொழிலாளர், ஏழைவிவசாயிகளுக்கு எதிரானதாகும். மனித உரிமை ஸ்தாபனங்களின் அறிக்கையின்படி 1988ற்கும் ,1993ற்கும் இடைப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் காணாமல் போனவர்களினதும், பலாத்காரமாக கடத்திக் கொலை செய்யப்பட்டவர்களினதும் எண்ணிக்கை சில சந்தர்ப்பங்களில் ஒப்பீட்டுரீதியில் உலக நாடுகளில் முதலாவது இடத்தைப் பிடித்துக்கொண்டது. 1988ற்கும் 1990ற்குமிடையில் 60.000 சிங்கள ஏழை கிராமவாசிகள் கொன்றொழிக்கப்பட்டனர். இவர்களுள் பெரும்பான்மையானோர் இளைஞர்கள் ஆகும்.

இந்தப்போரின் வேர்கள் 1948ல் உலக ஏகாதிபத்தியத்தால் யுத்தத்திற்குப் பிந்திய உடன்பாடுகளின் ஒரு பகுதியாக இந்திய உபகண்டத்தில் அமைக்கப்பட்ட தேசியஅரசு அமைப்புமுறையின் அடித்தளத்தில் இருக்கின்றன. சிறீலங்காவின் அரசு தேசியவிடுதலையின் வெற்றியினால் உருவாகவில்லை. இதற்கு நேரெதிராக தொழிலாளவர்க்கத்தின் போராட்டங்களை அழித்தொழிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. இந்த அரசுகளது வேலைத்திட்டத்தின், மத்தியபுள்ளி தொழிலாளவர்க்கத்தையும், ஒடுக்கப்பட்டமக்களையும் இன, மத, பிரதேச அடித்தளத்தில் பிரிப்பதாகும். ஏகாதிபத்திய சரணடலும், முதலாளித்துவ ஆட்சியும் இன்று இலங்கைத்தீவில் உயிர்வாழ்வது தமிழ் சிங்கள தொழிலாளர்களையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் இனவெறிச் சித்தாந்தத்தினால் பிரிப்பதிலேயே தங்கியிருக்கின்றது.

## தேசிய விடுதலைப்போராட்டம்.

23.7.83ல் திருநெல்வேலியில் மேற்கொண்ட தாக்குதலினால் 13 இராணுவத்தினரை கொன்றதன்மூலம் 1979ல்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

ஸ்தாபிக்கப்பட்ட தமிழீழவிடுதலைப்புலிகளின் முதலாவது பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த இராணுவத்தாக்குதலின் வெற்றியானது தமிழ் மக்கள் மத்தியில் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு செல்வாக்கினை தேடிக்கொடுத்ததுடன் கிட்டத்தட்ட ஒரு டசின் புதியஇயக்கங்கள் தோன்றுவதற்கும் வழிதிறந்தது. விடுதலைப்புலிகள் உட்பட்ட அனைத்து இயக்கங்களினதும் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் இந்தியாவின் அன்றைய பிரதமமந்திரி இந்திய முதலாளித்துவத்தின் சார்பில் ஒரு பிரதானமான பாத்திரத்தை வகித்திருந்தார். இந்திய முதலாளித்துவம் இந்த இயக்கங்களின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குமேல் அழுத்தங்களை கொடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக பாவித்தது. இதன்மூலம் கிரெம்ளினின் ஸ்டாலினிச அதிகாரத்துவத்திடம் பொருளாதார ,அரசியல் சலுகைகளைப் பெற்றுக்கொண்டது. அதேவேளையில் தமிழீழவிடுதலைப் போராட்டத்தை தேவையேற்படின் கழுத்தைத் திருகுவதற்கான நோக்கத்தில் பிரதானமான தமிழ் இயக்கங்களை அரசியல் ரீதியாகவும், இராணுவரீதியாகவும் தனது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

தமிழ்தேசிய விடுதலை அனைத்தும் அவற்றினது தோற்றத்திலிருந்தே இந்திய முதலாளித்துவத்தின் ஏதோ ஒரு பிரிவிற்கு அடிபணிந்திருந்தன. இது தொழிலாளவர்க்கம் தொடர்பான இந்த இயக்கங்களின் இயற்கையான பகையுணர்ச்சியின் நேரடி வெளிப்பாடாகும்.

1983ற்கும் , 1987ற்குமிடையில் ஐந்து பெரிய விடுதலைஇயக்கங்கள் (PLOT, LTTE, EPRLF, TELO, EROS) பாரியளவில் இளைஞர்களைத் திரட்டின. இந்த ஆள்திரட்டலின் போதே ஒன்றிற்கொன்று முரண்பாடான இயக்கங்களிற்குள் தொடங்கிய "ஆயுதப்போராட்டம்" பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை கொலைவெறிக்குப் பலியாக்கியதுடன் தமிழீழவிடுதலைப்புலிகளின் ஆதிக்கத்தை பெரும்பான்மையாக நிலைநாட்டுவதுடன் முடிவிற்கு வந்தது.

1987ல் ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்ட இந்திய, இலங்கை ஒப்பந்தத்தை இந்த இயக்கங்கள் அனைத்தும் ஏற்றுக்கொண்டதும், அதைத் தொடர்ந்த இந்தியப்படைகளின் ஆக்கிரமிப்பும் இந்த இயக்கங்கள் அனைத்துள்ளும் ஒரு பாரிய நெருக்கடியை கட்டவிழ்த்துவிட்டது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இந்த இயக்கங்களில் நம்பிக்கையிழந்து விலகியது; நேரடியாக இவ்வியக்கங்களின் ஸ்தாபன ரீதியான உடைவிற்கு வழிதிறந்தது.

இன்று இந்திய, இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஆறு வருடங்களிற்கு பின்னர் தமிழ் தொழிலாளர்களினதும், ஒடுக்கப்பட்ட மக்களினதும் அடிப்படையான தேவைகளின் நேரடி எதிரிகளாக வளர்ச்சியடைந்திருக்கின்றன. தீவு முழுவதும் ஏகாதிபத்தியச் சுரண்டலை பாதுகாப்பதற்காக இலங்கையின் முதலாளித்துவ அமைப்புமுறையின் ஒரு பிரிக்கமுடியாத பாகமாக இந்த இயக்கங்கள் இன்று உருமாறியிருக்கின்றன. சிறீலங்கா இராணுவத்துடன் இன்று இராணுவ மோதலில் ஈடுபடும் ஒரேஒரு இயக்கமாக விடுதலைப்புலிகள் மட்டும்தான் செயற்படுகின்றது. ஆனால் ஏன் இந்த இராணுவ மோதல்?. இது தமிழ் ஒடுக்கப்பட்ட நலன்களைப் பாதுகாப்பது என்ற அடித்தளத்திலிருந்தல்ல., தமிழ் முதலாளித்துவத்தின் பொருளாதார தேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டிருக்கின்றது.

தமிழ் ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்கான போரை நடாத்துவதாக விடுதலைப்புலிகள் உரிமைகொண்டாடுகின்றது. அப்படியானால் அது கணக்குக்காட்டியே தீரவேண்டும். ஏன்? எந்த நோக்கங்களின் பின்னணியில் சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைக்குப் போவதற்கான தொடர்ந்த தயார் நிலையில் அது இருக்கின்றது என்பதற்கு. இதைத்தவிர ஐக்கியநாடுகள்சபையின் துருப்புக்களை இலங்கைக்கு வரவழைப்பது தொடர்பான கோரிக்கையை விடுதலைப்புலிகள் ஏன் முன்வைக்கின்றது.

விடுதலைப்புலிகள் தனது இராணுவபலத்தைக் காட்டுவது அதனது தீர்மானகரமான பொருளாதார, அரசியல் நலன்களை நிறைவேற்றுவதற்கான முயற்சியினாலேயே ஆகும். இது ஒரு முதலாளித்துவ தமிழீழத்தை உருவாக்குவதையும், அதில் தனது அதிகாரத்தை நிலைநாட்டுவதையும் மையமாகக் கொண்டிருக்கின்றது. இந்த

படிப்பகம்

www.padippakam.com

இலக்கை அடைய முன்னரே விடுதலைப்புலிகள் என்ன தலைவிதியை தமிழ்மக்களுக்கு எதிர்காலத்தில் அது பெறப்போகும் தமிழீழத்தில் இருக்கும் என்பதை அறியத்தருகின்றது. முஸ்லீம் மதச்சிறுபான்மையோராகிய தமிழர்களை யாழ்ப்பானத்திலிருந்து விரட்டியதுடன் திட்டமிட்ட படுகொலைகளை அவர்களுக்குமேல் கிழக்குமாகாணத்தில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளை சித்திரைவதை முகாம்களில் கொடுமைப்படுத்துகின்றது. இதனுடன் சேர்ந்து "சிங்களத்திற்குப்" பதிலாக தமிழ் பொலீஸ்"," தமிழ் நீதிமன்றம், "தமிழ்சிறைச்சாலைகளை" நிர்மாணித்து வெற்றிகரமாக" நடாத்துகின்றது. உலகின் எந்தவொரு முதலாளித்துவ அரசின் பொலீசும், நீதிமன்றமும், சிறைச்சாலையும், இராணுவமும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இதுதான் தமிழ்மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகளுக்கான விடுதலைப்புலிகளின் பதில்.

## தொழிலாளவர்க்கத் தலைமை நெருக்கடி.

தமிழ்த்தேசியவிடுதலைப் போராட்டம் இன்று வந்தடைந்திருக்கும் முட்டுச்சந்தியும், தமிழ்தேசியஇயக்கம் ஏகாதிபத்தியத்திடம் முழுமையாக அடிபணிந்ததும் ஒரு பிரதானமான கேள்வியை எழுப்புகின்றது. இந்த வளர்ச்சிப்போக்கு வரலாற்று ரீதியான அவசியமா? இனவாத சிங்கள அரசு தமிழ்மக்களின் பொருளாதார, கலாச்சார வளர்ச்சிகளை கல்வி, தொழில் கலாச்சாரம் ஆகிய இன்னோரன்ன துறைகளில் திட்டமிட்டு அடக்கியொடுக்கியது. இந்தப்பிரச்சினைகளை ஒக்ஸ்போர்ட் ( Oxford) பல்கலைக்கழகத்தில் படித்த தமிழ் முதலாளிகளின் பரம்பரையினர் பாராளுமன்றத்தின் மூலமாக தீர்த்து வைப்பதில் தவறிவிட்டனர். எனவே தமிழ்மக்கள் தேசியவிடுதலை இயக்கங்களை கட்டியெழுப்பி . ஆயுதப்போராட்டத்தின் மூலம் தங்களது உரிமைகளுக்கு போராடவும், ஒரு தனிநாட்டைக் கட்டியெழுப்பவும் தீர்மானிப்பதற்குநிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இது தேசியவிடுதலைப் போராட்டம் தோன்றியதற்கான காரணத்தை தேசியவாதிகள் நிறுவிக்காட்டுவதின் மத்தியபுள்ளியாக இருக்கின்றது.

இதன் மூலம் இந்த தேசியவாதிகள் சிறீலங்காவின் முதலாளித்துவ அரசு ஏதோ வகையில் சிங்கள தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் சாதகமான வகையில் செயற்படுகின்றது என்று நியாயப்படுத்துவதற்கு முனைகின்றனர். இதற்கு எதிர்மாறாக உலக ஏகாதிபத்தியத்தின் ஒரு கருவியாக இந்த அரசானது அதனது ஸ்தாபனத்திலிருந்தே "தீவுமுழுமையும் வாழும்" தொழிலாளர், விவசாயிகளை சுரண்டுவதில் எந்தவொரு இன வேறுபாட்டையும் காட்டவில்லை.

1948ல் இந்த அரசு ஸ்தாபிக்கப்பட்டதுடன் தமிழ், சிங்கள தொழிலாள ஒடுக்கப்பட்ட மக்களின் பணி இந்த பிற்போக்கு அரசை தூக்கியெறிவதற்கான சோசலிச முன்னோக்கிற்காக போராடுவதை மையமாகக் கொண்டிருந்தது. இந்த முன்னோக்கிற்கான போராட்டத்தின் தலைமையை இந்திய போல்சிவிக், லெனினிஸ்ட் கட்சியும் (BLPI), லங்காசமசமாஜக்கட்சியும் (LSSP) தொழிலாளவர்க்கத்திற்கு முன்வைத்தன. இந்தக்கட்சிகள் ஒடுக்கப்பட்ட தமிழ்மக்கள்மத்தியில் மட்டுமல்ல, சிங்கள மக்கள்மத்தியிலும் பாரிய செல்வாக்கினைப் பெற்றிருந்தன. ஒடுக்கப்பட்ட மக்கள் ,தொழிலாளவர்க்கம் இலங்கையில் ஜனநாயகப்புரட்சிக்கு தலைமை தாங்கும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்த நம்பிக்கையின் அடித்தளம் சிறீலங்காவின் ட்ரொக்சிச இயக்கத்துள் ஏற்பட்ட மோசமான சந்தர்ப்பவாதப்போக்கின் விளைவால் உடைத்துக்கொட்டப்பட்டது. இந்தச் சந்தர்ப்பவாதப்போக்கு நான்காவது அகிலத்தினுள் உருவாகிய பப்லோவாத, திரிபுவாதத்தின் ஒரு பாகமாகும். 1964 இல் LSSP முதலாளித்துவ SLFP யுடன் கூட்டரசாங்கம் அமைத்ததுடன் இந்த வரலாற்றுத்துரோகம் அதனது இறுதியான உச்சக்கட்டத்தையடைந்தது.

தமிழ், சிங்கள தொழிலாளர்களிடையே ஏற்பட்ட பிளவும், தொழிலாளவர்க்கத்தின் தலைமை தொடர்பான சந்தேகமும் இந்தத் துரோகத்தின் உடனடி விளைவாகும். அத்துடன் இத்துரோகமானது . சிங்கள

படிப்பகம்

www.padippakam.com



இராணுவத்தினால் சுடப்பட்ட தமிழ்இளைஞர்கள்

அத்துடன் இத்துரோகமானது சிங்கள அரசிற்கு அதனது இனவாத வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான தங்குதடையற்ற அனுமதியையும் வழங்கியது. இதுதான் தமிழ்தேசியவாதத்தின் வளர்ச்சிக்கு திறவுகோலாகவிருந்தது.

தமிழ்தேசியவாதத்தின் வளர்ச்சி ஒரு வரலாற்றுக்கட்டாயத்தின் வெளிப்பாடல்ல. இது சிங்கள அரசு நிறைவேற்ற மறுத்த தமிழ்மக்களின் ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக உருவாகவில்லை. பதிலாக இது தொழிலாளவர்க்கத் தலைமையின் துரோகத்தின் ஒரு நேரடி விளைபொருளாகும்.

ட்ரொக்சிசத்தின் புரட்சிகரப்பாரம்பரியங்கள் தமிழ் தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்களிடையே பாரிய செல்வாக்கினைப் பெற்றிருந்தது. இந்த ட்ரொக்சிச செல்வாக்கினை முகம்கொடுப்பதற்கும் முறியடிப்பதற்குமாக தமிழ் தேசியவாதம் அதனது ஆரம்பகாலங்களில் மார்க்சிச முகமுடியை தரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது.

1977ல் தமிழர்விடுதலைக்கூட்டணி தமிழ்மக்களுக்குத் தனிநாடு வேண்டுமென்று கோரிக்கை வைக்கையில் அது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சும்மா தற்செயலாக "சோசலிசத்தமிழீழம்" என்ற வார்த்தையை எழுதவில்லை. இதேமாதிரி தமிழர்விடுதலைக்கூட்டணிக்கு பின்னர் தமிழீழக்கொடியை தாக்கியஅனைத்து தேசியஇயக்கங்களும் "சோசலிசத்தமிழீழத்தின்" அவசியத்தை வலியுறுத்த மறக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com

இது தமிழீழவிடுதலைப்புலிகள் 1980ல் வெளியிட்ட "சோசலிசத்தமிழீழத்தைநோக்கி" என்ற அதனது முதலாவது கொள்கை விளக்கப்புத்தகத்தில் பின்வருமாறு எழுதும் மட்டத்திற்கு சென்றிருந்தது.:-

எமது தேசியவிடுதலைப் போராட்டமானது வர்க்கப்போராட்டத்தை ஒன்றிணைத்த புரட்சிகர அரசியல் திட்டமாக அமைய வேண்டும். ஒடுக்கப்படும் எமது தேசியஇனத்தின் அரசியல் விடுதலைக்காக மட்டுமன்றி, நசுக்கப்படும் வர்க்கங்களினதும், சாதியென்ற பெயரால் சுரண்டப்படும் எமது மக்களினதும் சுபீட்சத்திற்காகவும் நாம் போராடவேண்டும். அதாவது, எமது தேசியவிடுதலைப் போராட்டமானது,

சோசலிசப்புரட்சியை இலக்காகக் கொண்ட கொள்கைத் திட்டத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டும். எமது மக்கள் அரசியல் ரீதியாக மட்டுமன்றி, பொருளாதார, சமூக ஒடுக்குமுறையில் இருந்தும் விடுதலைபெறவேண்டும். ஆகவே, தமிழீழத்தேசிய விடுதலை இயக்கங்களில் பங்கேற்கும் பழமைவாத நடுத்தரவர்க்கக் கட்சிகளுக்கு நிபந்தனையற்ற பரிபூரண ஆதரவளிப்பது தமிழ்ப்பாட்டாளி வர்க்கத்தின் விடிவிற்கும், சோசலிசப்புரட்சிக்கும் வழிகோலப்போவதில்லை.

"ஒரு குறிப்பிட்ட கோரிக்கை எந்தளவிற்கு சாத்தியமாகும், என்பதில்தான் பூர்சுவாக்கள் மிகவும் அக்கறை கொண்டிருப்பார்கள். ஏனெனில்,பாட்டாளிவர்க்கத்திற்குப் பாதகமான முறையில் மற்றைய தேசியஇனத்தைச் சேர்ந்த முதலாளி வர்க்கத்துடன் உடன்பாடு செய்துகொள்ளும் மாற்றமுடியாத கொள்கையை இவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். பாட்டாளிவர்க்கத்தைப் பொறுத்தவரையில் முக்கியமானது என்னவெனில் பூர்சுவாக்களுக்கு எதிராக தனது வர்க்கத்தைப் பலப்படுத்தி உறுதியான சனநாயகத்தையும், சோசலிசத்தையும் மக்களுக்கு புகட்டிக் கொடுப்பதுதான்". என்று லெனின் சொல்கிறார்.

ஒடுக்கப்பட்டுவரும் தமிழ்த் தேசியஇனத்தின் "தேசியவிடுதலை" தமிழ் விவசாய பாட்டாளிகளின் சமூக, பொருளாதார சுபீட்சத்திற்கு வழிகோலும் "சோசலிசப்புரட்சி" இவ்விரண்டும் ஒன்றோடொன்று இணைந்த இலக்குகளாகும். ஒரு புரட்சிகரமான அரசியல் திட்டமானது, இவ்விரு அம்சங்களையும் இணைத்த செயல் திட்டமாக அமையவேண்டும்.

சோசலிசத் தமிழீழத்தை நோக்கி, கொள்கைப்பரப்பு வெளியீட்டுப் பிரிவு, தமிழீழவிடுதலைப்புலிகள், (பக்கம் 24,25)

இந்த வரிகளை எழுதி பதின்மூன்றுவருடங்கள் கழிந்துவிட்டன. இன்று தமிழீழவிடுதலைப்புலிகள் ஏகாதிபத்தியத்தின் வரம்புகளற்ற சுரண்டலுக்கு தமிழ்பிரதேசங்களை தாரைவார்ப்பதற்கான முழுமையான முயற்சிகளையும் செய்கின்றது. இந்த இடதுசாரி வார்த்தைஜாலங்களுக்கு பின்னால் தமிழ்மக்கள் அள்ளுப்பட்டு தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும், ஏனைய தேசிய இயக்கங்களுக்கும் அடிபணிந்துபோனதற்கான நேரடிப்பொறுப்பு LSSP யின் வரலாற்றுத்துரோகத்தில் தங்கியிருக்கின்றது.

இந்த நிலைமைகளில் கடந்த பத்துவருடகால அனுபவங்களின் பாடமாக தமிழ்தொழிலாளர்களும், ஒடுக்கப்பட்டமக்களும் தமிழீழவிடுதலைப்புலிகள், மற்றைய அனைத்து தேசியவாதப்போக்குகளும் பிரதிநிதிப்படுத்தும் பிற்போக்குத்தேசியவாதவேலைத்திட்டமான முதலாளித்துவதமிழீழத்தை முழுமையாக நிராகரிக்கவேண்டும். அத்துடன் தமிழ்மக்களின் பிரச்சினையை சோசலிசவேலைத்திட்டத்தின் அடித்தளத்தில் தீர்ப்பதற்கு முன்வரவேண்டும்.

தீவின் தொழிலாளவர்க்கத்திற்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கான ஒரேஒருவழி "ஐக்கியசோசலிச தமிழீழ, சிறீலங்காகுடியரசு" மட்டுமேயாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# முதலாளித்துவ ஐரோப்பியஐக்கியமும் நாணயமாற்றுவிகிதத்தின் உடைவும்

ஆவணி மாதத்தின் முதலாவது கிழமையில் ஐரோப்பிய சர்வதேச முதலாளித்துவப் பத்திரிகைகள் ஐரோப்பிய ஐக்கியத்தின் மரண ஊர்வலத்தையும்,தகனக் கிரியைகளையும் பற்றி ஆசிரியத் தலையங்கங்களை எழுதிக் குவித்தன. ஆவணிமாதம் முதலாம் திகதியிலிருந்து இதுவரை காலமும் ஐரோப்பிய நாடுகளில் நடைமுறையிலிருந்துவந்த "நாணயமாற்றுவிகிதமுறை" (Exchange Rate Mechanism) பெரும்பான்மையான ஐரோப்பிய குடும்பநாடுகளின் விருப்பத்திற்கு மாறாக ஜேர்மனியினதும், நெதர்லாந்தினதும், நிதிமந்திரிகளினதும், மத்தியவங்கிகளினதும் வற்புறுத்துதலின் விளைவாக முழுமையாக கைவிடப்பட்டதுதான் இந்தப்பிரகடனங்களைச் செய்வதற்கு உந்துகோலாக இருந்தது. இந்த நாணயமாற்றுவிகிதமுறையின் உடைவானது ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கு கற்பனாவாதமாகிய முதலாளித்துவ ஐரோப்பிய ஐக்கியம் என்ற திட்டத்திற்கு இன்னுமொரு மரணஅடியைவழங்கியிருக்கின்றது.

## ஐரோப்பிய"நாணயமாற்று விகிதமுறை"

இந்த ஐரோப்பிய "நாணயமாற்றுவிகிதமுறையின்" தோற்றம் இரண்டாவது உலகமகாயுத்தத்தின் பின்னர் 1944ல் அமெரிக்க டொலரை உலக நாணயமாக்கிய பிரட்டன்-வூட்ஸ் (Bretton-Woods) ஒப்பந்தத்தின் உடைவு ஏற்படுத்திய ஏகாதிபத்திய நெருக்கடியுடன் பின்னிப்பிணைந்தது. ஒரு அவுன்ஸ் தங்கம் 35 அமெரிக்க டொலர்களுக்கு சமம் என்ற அடித்தளத்தில் உருவாக்கப்பட்ட பிரட்டன்-வூட்ஸ் நாணயஅமைப்புமுறையின் மூலம் உலகநாணயங்கள் அனைத்தும் அமெரிக்க டொலருடன் கட்டுப்பட்டு இணைக்கப்பட்டிருந்தன. 1960களின் பின்னணியில் உருவாகிய ஏகாதிபத்திய நெருக்கடியானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தை 1971ம் ஆண்டு ஒகஸ்ட்மாதம் 15ம் திகதி இந்த ஒப்பந்தத்தை உடைப்பதற்கு நிர்ப்பந்தித்தது. இது சர்வதேசரீதியாக டொலருடன் பிணைக்கப்பட்டிருந்த அனைத்து நாணயங்களையும் பாதித்ததின் விளைவு உலக நிதியமைப்புமுறை முழுமையான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது.

ஐரோப்பாவில் இதன் விளைவுகள் ஐரோப்பிய நாணயங்களின் பெறுமதியில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியதுடன் ஐரோப்பா முழுமையாகவும் பணவீக்கத்தினையும், பொருளாதார சீர்குலைவுகளையும் விரிவுபடுத்தியது. இந்த நெருக்கடிக்கு முகம்கொடுக்கும் நோக்கில் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களால் விசேடமாக ஜேர்மனியாலும், பிரான்சினாலும் 1979ல் "ஐரோப்பிய நாணயமாற்றுவிகிதமுறை" உருவாக்கப்பட்டது. இது அமெரிக்க டொலருக்கு பதிலாக ஜேர்மன் மார்க்கினை (DM) ஐரோப்பிய நாணயங்களை கூட்டிக்கட்டி வைத்திருக்கும் நங்கூரமாக்கி ஒரு ஸ்திரமான ஐரோப்பிய நாணயமுறையை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்த அடித்தளத்தில் ஒவ்வொரு ஐரோப்பிய நாடுகளின் நாணயங்களுக்கும் ஜேர்மன் மார்க்குடனான ஒப்பீட்டில் நாணயமாற்றுவிகிதம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானிக்கப்பட்ட விகிதத்திலிருந்து ஐந்துவீத வரம்புக்குள் ஒவ்வொரு நாணயத்தின் நாணயமாற்று விகிதமும் கூடிக்குறைவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த ஐந்துவீத வரம்பிற்கு கூடி அல்லது குறைந்து நாணயங்கள் சந்தையில் விற்பனை செய்யப்பட்டால் ஒவ்வொரு தேசிய அரசாங்கங்களும், மத்தியவங்கிகளும் தங்களது சொந்த நாணயங்களை விற்பதன்மூலமோ,

படிப்பகம்

www.padippakam.com

நாணயமாற்று விகிதமும் கூடிக்குறைவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த ஐந்துவீத வரம்பிற்கு கூடி அல்லது குறைந்து நாணயங்கள் சந்தையில் விற்பனை செய்யப்பட்டால் ஒவ்வொரு தேசிய அரசாங்கங்களும், மத்தியவங்கிகளும் தங்களது சொந்த நாணயங்களை விற்பதன்மூலமோ, அல்லது வாங்குவதன்மூலமோ மீண்டும் நாணயப் பெறுமதியில் சமநிலையை ஏற்படுத்தும் உடன்பாட்டைக் கொண்டிருந்தன. இந்த உடன்பாடு ஆவணி முதலாம் திகதியிலிருந்து செல்லுபடியாததாகியதுடன் இதற்குப்பதிலாக ஐரோப்பியநாணயங்கள் ஜேர்மன் மார்க்கின் பெறுமதியிலிருந்து 30வீதம் கூடிக்குறைவதற்கான முறையை பதிலீடு செய்யப்பட்டிருக்கின்றது. இது நாணயமாற்றுவிகிதத்தை முழுமையாக ஒருவித கட்டுப்பாடில்லாமல் கூடிக்குறைவதற்கான கதவுகளை திறந்துவிட்டிருக்கின்றது. இதன்மூலம் ஐரோப்பிய நாடுகள் போட்டிபோட்டுக்கொண்டு தங்களது நாணயங்களை மதிப்புக்குறைப்பதன் மூலம் உள்நாட்டில் பணத்தின் பெறுமதியைக் கூட்டுவதும், வெளிநாட்டுக்கான ஏற்றுமதி விலையைக் குறைப்பதுவுமான ஊகவாணிபத்திற்கும் அதேநேரத்தில் இறக்குமதிக்கட்டுப்பாடுகளை இறுக்கமாக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குமான வர்த்தகயுத்தத்தை ஒரு புதியகட்டத்திற்கு முன்கொண்டு வருகின்றன.

## இந்த நாணயநெருக்கடியின் உந்துசக்தி

ஒரு நெருக்கடிகளற்ற "அமைதியான" நாளில் நாணயச்சந்தையில் உலகம் முழுமையும் சுழற்சியில் இருக்கும் 3 பில்லியன் ஜேர்மன் மார்க்குகளுக்கு பெறுமதியான சர்வதேசநாணயங்களின் கொந்தளிப்புகளுக்கும், ஏற்றத்தாழ்வுகளுக்கும் தனிய ஐரோப்பிய மத்தியவங்கிகள் மட்டுமல்ல உலகின் அனைத்து மத்தியவங்கிகளாலும் முகம்கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றது. இந்த நிலைமைகளில் ஐரோப்பிய நாணயஅமைப்புமுறையின் தீர்மானிக்கப்பட்ட விகிதத்தினை தொடர்ந்தும் சமநிலையில்

வைத்திருப்பதற்காக ஜேர்மனியும், பிரான்சும் ஆவணி 93ன் இறுதியில் 36 மணித்தியாலங்களுக்குள் 150 மில்லியாடன் ஜேர்மன் மார்க்குகளை' நாணயச்சந்தையில் வாரியிறைக்க வேண்டியிருந்தது. ஜேர்மன்வங்கி தினசரி வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பணத்திற்கான வட்டிவிகிதத்தினை தொடர்ந்தும் குறைக்க மறுத்ததினால் சர்வதேசரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஊகவாணிபத்தில் ஜேர்மன் மார்க்கின் பெறுமதி உயர்ந்ததாலும் அதேநேரத்தில் ஏனைய ஐரோப்பிய நாணயங்களின் விசேடமாக பிரான்சின் பிராங்கினது பெறுமதி வீழ்ச்சியடைந்ததினாலும் இந்த நாணயநெருக்கடி உச்சக்கட்டத்தையடைந்தது. எதிர்வரும் தை 1994ல் ஐரோப்பிய நாணயஅமைப்புமுறையின் இரண்டாவதுகட்ட ஐக்கியத்தை மஸ்ரிட் (Maastricht) உடன்படிக்கையில் திட்டமிட்டிருந்த ஐரோப்பியநாடுகள் இந்த நாணயஅமைப்புமுறையையே முழுமையாக உடைத்துக்கொட்டியதற்கான அடிப்படையான காரணம் உலக சந்தைக்கும், தேசியஅரசுகளின் நலன்களிற்குமிடையிலுள்ள சமரசம் காணமுடியாத முரண்பாடாகும். இதுதான் ஜேர்மனியினதும், பிரான்சினதும் பகீரதப் பிரயத்தனங்களுக்கும் மத்தியிலும் ஐரோப்பிய நாணயமாற்று அமைப்புமுறையை சுடுகாட்டிற்கு கொண்டுபோவதை தவிர்க்கமுடியாமல் செய்ததாகும்

ஐரோப்பியநாடுகளின் ஒட்டுமொத்த நலன்களிலும் பார்க்க ஜேர்மன் ஏகாதிபத்தியத்தினது சொந்த தேசியநலன்கள் முன்னணியில் நின்றதன் வெளிப்பாடுதான் ஜேர்மன்வங்கி தினசரி வர்த்தகத்திலிருக்கும் பணத்தின் வட்டிவிகிதத்தை குறைக்க பிடிவாதமாக மறுத்து வந்தது. இது ஜேர்மனியில் முதலாளித்துவமறுஇணைப்பிற்கு பின்னர் ஏற்பட்ட பணவீக்கத்தின் உயர்ந்த மட்டத்தை குறைப்பதற்காக ஜேர்மன் முதலாளித்துவத்தின் உடனடித்தேவையாக இருக்கின்றது. அதேநேரத்தில் ஜேர்மனியின் இந்த உயர்ந்த வட்டிவிகிதமானது ஏனைய ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நெருக்கடிகளை எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல் உக்கிரமாக்குகின்றது.

இந்த ஐரோப்பிய நாணயநெருக்கடி இரண்டாவது உலகயுத்த முடிவிலிருந்து

படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்திய நாடுகளிடையே இருந்துவந்த சர்வதேச பொருளாதார கூட்டுழைப்பு ஒரு முடிவிற்கு வந்ததின் நேரடியான விளைபொருளாகும். கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களாக ஐக்கியஅமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஐரோப்பிய நாடுகளிற்கிடையே உலக வர்த்தகத்தை பொதுவாக ஒழுங்குபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புமுறைகள் அனைத்தும் ஒரு முடிவிற்கு வந்தடைந்துவிட்டது. 1971ன் பிரிட்டன்-வூட்ஸ் ஒப்பந்தத்தின் உடைவிற்கு பின்னர் ஏகாதிபத்திய நாடுகளிற்கிடையே உலகவர்த்தகம் தொடர்பான ஒருவிதமான பொது உடன்பாடுகளை தீர்மானிப்பதற்கான அமைப்புமுறை உருவாக்கப்பட முடியவில்லை. உலக வர்த்தகமானது 1971லிருந்து ஏழு முதலாளித்துவ நாடுகளின் தலைவர்களது வருடாந்த சந்திப்பினாலும் ( G7 meeting) உலகவங்கி சர்வதேசநாணயநிதியத்தினாலுமே ஒழுங்குபடுத்தப்பட்டது. உலகவர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு பொது உடன்பாட்டிற்கு வருவதை ஏகாதிபத்தியநாடுகள் முழுமையாக கைவிட்டதன் விளைவுதான் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக "வர்த்தகத்திலும், வரியிலுமான பொது உடன்பாடு" (General Agreements of Trade&Traffics) என்று ஏற்கனவே இருந்து வந்த உலக வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் இயந்திரமுறையை மீண்டும் புதிப்பிப்பதற்கு நிராகரிப்பதன் அடித்தளமாகும்.

உலக வர்த்தகம் தொடர்பான பொதுவான உடன்பாட்டிற்கு பதிலாக ஏகாதிபத்தியநாடுகள் உலகச்சந்தையை கைப்பற்றுவதற்காக ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றின் தலைமையில் மூன்றுபிரதான வர்த்தகமுகாம்களாக பிரிவுபட்டிருக்கின்றன. இது தவிர்க்கபடமுடியாமல் வர்த்தகப்போருக்கும், நாணயநெருக்கடிக்கும் இறுதியில் ஏகாதிபத்திய யுத்தத்திற்கும் வழிதிறக்கும். ஐரோப்பிய நாணயநெருக்கடி தொடர்பாக ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்ல சர்வதேசரீதியாக ஏகாதிபத்திய நாடுகள் திசைதெரியாமல் இருப்பதை ஆவணி 6ம் திகதியிட்ட பிரான்சின் பிரதானமான முதலாளித்துவப்பத்திரிகை Le Monde பின்வருமாறு குறிப்பிடுகின்றது."இதற்கான ஒரேஒரு பொருத்தமான பதிலீடு சர்வதேசரீதியிலானதாகும். சர்வதேச நாணயநிதி அமைப்புமுறைகளின் நெருக்கமான ஒத்துழைப்பு மட்டும்தான் 1980களில் போத்தலிலிருந்து வெளியேறிய பூதத்தினை கட்டுப்படுத்துவதற்கான ஒரேஒரு வழியாகும். ஆனால் நாங்கள் அதிலிருந்து நீண்டதூரம் தள்ளியிருக்கின்றோம். டொலரை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் இதுவரை தோல்வியிலேயே முடிந்துள்ளன. இதனை நிறைவேற்றுவதற்கு வங்கிகளை ஒரு வரிசையில் கொண்டுவருவதிலிருந்து வரி செலுத்தும் முறையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் வரையிலான பிரமாண்டமான நடவடிக்கைகளை செய்யவேண்டும். ஆனால் இதனை நிறைவேற்றுவது அரசியல் ரீதியாகவும், நிபுணத்துவ நடைமுறைரீதியிலும் எங்களுடைய கைகளுக்கு எட்டாமலேயே இருக்கின்றது".

## முதலாளித்துவ ஐரோப்பிய ஐக்கியம்

இந்த முதலாளித்துவ ஐரோப்பிய ஐக்கியத்திற்கான அத்திவாரம் 1950களில் ஐரோப்பாவின் விசேடமாக பிரான்சினதும், ஜேர்மனியினதும் கனரக இயந்திரத்தொழிற்சாலைகளை தேசிய எல்லைகளுக்கு அப்பாற்பட்ட நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்கு கீழ் கொண்டுவருவதற்காக அமைக்கப்பட்ட "மொன்ரான் ஐக்கியம்" (Montanunion) என்பதன்மூலம் இடப்பட்டது. இதனது பிரதானமான நோக்கம் இரண்டாவது உலகமகா யுத்தத்திற்கு பின்னர் ஐரோப்பிய நாடுகளிற்கிடையே மீண்டும் முளைவிடத் தொடங்கிய ஏகாதிபத்திய முரண்பாடுகளை கட்டுப்படுத்துவதை இலக்காகக் கொண்டது. பிரான்சினது பொருளாதார, அரசியல் நலன்களுக்கு நேரடிச்சவாலாக யுத்த அழிவுகளிலிருந்து வேகமாக வளர்ச்சியடைந்த ஜேர்மனியினது பொருளாதார பலத்தினை "ஐரோப்பிய அமைப்புமுறைகளினால்" கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பிரஞ்சு ஏகாதிபத்தியம் செயற்பட்டது. ஜேர்மனி யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியினால் அரசியல், இராணுவ ரீதியில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சிற்கு அடிபணிந்த நிலையில் கிழக்குஐரோப்பாவில் ஜேர்மனி போரில் இழந்த சந்தைகளுக்குப் பதிலாக இந்த "ஐரோப்பியஐக்கிய" திட்டத்தை

படிப்பகம்

www.padippakam.com

ஏற்றுக்கொண்டது.

1957ல் ஜேர்மனி, பிரான்சு, இத்தாலி, நெதர்லாந்து, லக்சம்பேர்க், பெல்ஜியம் ஆகிய ஆறுநாடுகள் இணைந்து "ஐரோப்பிய பொருளாதார குடும்பம்" என (EEC) தங்களை அழைத்துக்கொண்டன. 1980களில் மேலதிகமாக இன்னும் ஆறுநாடுகள் இணைந்து "ஐரோப்பியக்குடும்பம்" என பெயரிட்டன. இந்த ஐரோப்பியக் குடும்பநாடுகளின் பொருளாதார, அரசியல் நலன்களைப் பேணும் நோக்கத்தில் 1971ன் பிரட்டன்வூட்ஸ் ஒப்பந்தத்தின் உடைவின்போது உவவாக்கப்பட்ட ஐரோப்பிய நாணயமாற்றுவிகித அமைப்புமுறைதான் முதலாளித்துவ அடிப்படையிலான ஐரோப்பிய ஐக்கியத்தின் அச்சாணியாகும்.

இந்த நாணயஅமைப்புமுறையின் மூலம் ஐரோப்பாவிற்குள் சமூக, பொருளாதார சமநிலையை ஏற்படுத்தும், அதேநேரத்தில் ஐரோப்பாவை தனது சர்வதேச வர்த்தகப்போட்டியாளர்களான அமெரிக்காவிற்கும், ஜப்பானுக்குமெதிரான ஒரு இரும்புக்கோட்டையாகக் கட்டுவதே "ஐரோப்பியஐக்கியம்" என்ற ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் திட்டமாகும்.

இதனை படிப்படியாக நிறைவேற்றும் நோக்கத்தில் 1991 மார்கழி 9ம், 10ம் திகதிகளில் நெதர்லாந்தின் மஸ்ரிட் (Maastricht) நகரில் ஐரோப்பியக் குடும்பநாடுகள் மிகவும் கூர்மையான முரண்பாடுகளிற்கு மத்தியிலும் "மஸ்ரிட் ஒப்பந்தம்" என்ற உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின்படி ஐரோப்பிய நாடுகளின் அரசியல் ஐக்கியத்தினை நாணயங்களின் ஐக்கியத்தின் மூலமாக அடைவது என்பதை அடித்தளமாக ஏற்றுக்கொண்டன. ஆகக்கூடியது 1999ற்குள் அனைத்து ஐரோப்பிய தேசியநாணயங்களும் இல்லாதொழிக்கப்பட்டு ஒரு பொதுவான ஐரோப்பிய நாணயத்தினால் பிரதியீடு செய்வதனை இந்த ஒப்பந்தத்தின் பிரதானமான இலக்காகும். இத்துடன் வெளிநாட்டு அரசியல்,பாதுகாப்புஅரசியல், தொழிற்துறை அரசியல் போன்ற பிரதானமான துறைகளில் ஐரோப்பிய குடும்பநாடுகள் என்ற அடித்தளத்தில் செயற்படுவது, இராணுவரீதியான இறுக்கமாக இணைந்து வேலைசெய்தல், ஐரோப்பிய பொலீசை நிர்மாணித்தல்,

கட்டுப்படுத்துவது தொடர்பாக இணைந்து செயற்படல் என்பனவும் தீர்மானிக்கப்பட்டன.

இந்த தீர்மானங்களால் ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் சொந்த நலன்களுக்கு கால்கட்டுப்போட முடியவில்லை. ஜேர்மனி ஜேர்மன் மார்க்கின் வட்டி விகிதத்தை குறைப்பதற்கு தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்தது. இது ஜேர்மன் நாணயத்துடன் கட்டுப்பட்டிருந்த ஐரோப்பிய நாணயங்களின் பெறுமதியை பாரிய அளவில் குறைத்ததுடன் ஐரோப்பிய நாடுகளில் வேலையில்லாத்திண்டாட்டத்தை இரண்டு மடங்காக்கியது. ஜேர்மனியின் கூர்மையாகிய பொருளாதார நெருக்கடியானது ஜேர்மன் வங்கியை 1992ன் கோடைமாதங்களில் மீண்டும் வட்டிவிகிதத்தை உயர்த்துவதற்கு நிர்ப்பந்தித்தது.

இதன் விளைவாக பெரியபிரித்தானியாவும், இத்தாலியும் இந்த ஐரோப்பிய நாணயஅமைப்புமுறையின் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க முடியாமல் இந்த அமைப்பு முறையிலிருந்து விலகிக்கொண்டன. பிரான்சும், ஜேர்மனியும் இந்த நாணயஐக்கியத்தை நடைமுறைப்படுத்துவதற்காக எடுத்த அனைத்து முயற்சிகளும் உலகச்சந்தையின் சொந்த விதிகளுக்கு முன்னால் தவிடுபொடியானதுடன் ஆவணி முதலாம்திகதி இந்த நாணயஐக்கியம் என்ற திட்டத்தினை முழுமையாக கைவிட்டதைப் பிரகடனப்படுத்தின.

இந்த நெருக்கடி எந்த மட்டத்திற்கு ஐரோப்பிய அரசியல் ஐக்கியத்திற்கு ஒரு மரணஅடியாக விழுந்தது என்பதை ஜேர்மனியின் ஆவணி 7/8 திகதியிட்ட Süddeutsche Zeitung பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு ஆரம்பித்திருந்தது. :- "ஆவணிமாதத்தின் நாணயப்புயலானது நிலையான நாணயமாற்றுவிகிதத்தின் சங்கிலிக்கோர்வையை மட்டும் அறுக்கவில்லை பதிலாக ஐரோப்பிய ஒருமைப்பாடு என்ற பாரம்பரியக்கட்டுமானத்தையும் நொருக்கிவிட்டது. நாற்பது வருடங்களுக்கு முன்னர் "மொன்ரான் ஐக்கியம்" என்றதுடன் ஆரம்பமான இந்த சின்ன ஐரோப்பிய சகாப்தத்தின் இறுதி அத்தியாயம்தான் மஸ்ரிட்."

படிப்பகம்

www.padippakam.com

# ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் நோக்கம்

ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் ஐரோப்பிய ஐக்கியம் என்பது ஐரோப்பிய நாடுகளிற்கிடையே முரண்பாடுகளற்ற சமூக, அரசியல், பொருளாதார ஐக்கியத்தினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. பதிலாக ஐரோப்பாவின் பலம்வாய்ந்த தொழிற்துறை, வர்த்தகநிறுவனங்களை ஐரோப்பாவிலும், சர்வதேசரீதியிலும் லாபங்களைக் குவிப்பதற்கான கொள்ளையடிப்புக்களை அரங்கேற்றும் மேடையாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

1915களில் முதலாவது உலகமகாயுத்தத்தின் மத்தியில் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களினால் அன்று முன்மொழியப்பட்ட இந்த ஐக்கியத்தைப்பற்றிய லெனினினது கணிப்பீடு ஏகாதிபத்திய சகாப்தத்தின் அடிப்படையான முதலாளித்துவ முரண்பாடுகளை ஆணித்தரமாக எடுத்துக்காட்டியது. முதலாளித்துவ லாபஅமைப்புமுறையில் தேசங்களிற்கிடையில் உண்மையான ஐக்கியம் கிடையாது.

"முதலாளித்துவ நடைமுறைகளின்கீழ் ஐரோப்பிய ஐக்கியநாடுகள் என்பது காலனிகளைப் பங்குபோடுவதற்குரிய உடன்பாடுகளுக்கு வருவது என்பதற்கு சமமானது. ஆனால் முதலாளித்துவத்தின்கீழ் பலப்பிரயோகத்தைத் தவிர பங்குபோடுவதற்கான வேறெந்த அடிப்படைக் கோட்பாடுகளும் கிடையாது. ஒரு முதலாளித்துவ நாட்டின் "தேசியவருமானத்தை" ஒரு கோடீஸ்வரன் "மூலதனத்திற்கு பொருத்தமானவாறு" (இத்துடன் மேலதிகமாகவும் சேர்த்துக்கொண்டால்தான் அவருக்குச் சேரவேண்டியதிலும் பார்க்க அவரது பெரிய மூலதனம் கூடுதலாக பெறமுடியும்.) ஒரு குறிப்பிட்ட தகவுப்பொருத்தமாக மட்டும்தான் வேறுயாருடனாவது பங்கிட்டுக்கொள்ள முடியும். முதலாளித்துவம் என்பது உற்பத்திச்சாதனங்களின் தனியுடமையும், உற்பத்தியில் அராஜகமும் ஆகும். இந்த அடித்தளத்தில் "நியாயமான" முறையில் வருமானத்தைப் பங்கிடுவதைப்பற்றி பிரசங்கம் செய்வது புருத்தோனியவாதமாகும்., குட்டிமுதலாளித்துவ பிலிஸ்தீனிய அற்பத்தனமாகும். "பலத்திற்குப் பொருத்தமான" அடித்தளத்தைத் தவிர வேறுவகையில் பங்கிட்டுக்கொள்ள முடியாது. ஆனால் பலப்பொருத்தங்கள் பொருளாதார வளர்ச்சியுடன் மாறுபட்டுக்கொண்டிருக்கின்றன". என்ற லெனின் தொடர்ந்து குறிப்பிடுகையில் " உண்மைதான் முதலாளிகளிடையே, அரசுகளிடையே தற்காலிகமான உடன்பாடு சாத்தியமே. இந்த அடித்தளத்தில் ஐரோப்பிய முதலாளிகளின் உடன்பாடாக ஐக்கிய ஐரோப்பிய நாடுகள் சாத்தியமே...... எந்த நோக்கத்திற்காக? ஐரோப்பாவில் சோசலிசத்தைக் கூட்டுச்சேர்ந்து நசுக்குவதற்காக, ஐப்பானிற்கும், அமெரிக்காவிற்கும் எதிராகக் கூட்டுச்சேர்ந்து கொள்ளையடித்த காலனிகளைக் காப்பாற்றிக்கொள்வதற்காக". (லெனின் நூல்தொகுதி 21 பக்கங்கள் 344-345 ஜேர்மன்பதிப்பு.)

கிட்டத்தட்ட எண்பது வருடங்களுக்கு முன்னர் பெரும்பான்மையான காலனிகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த ஐரோப்பாவின் பொருளாதாரமானது தேக்கநிலையையடைந்ததும் அமெரிக்காவினதும், ஜப்பானினதும் பொருளாதாரம் பாரியளவிலான வளர்ச்சியை 19ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து அடையத்தொடங்கியதும் ஐரோப்பாவினது காலனித்துவ நலன்களுக்கு நேரடிச் சவாலாகியது. இது ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களை காலனிகளைப் பாதுகாப்பதற்காகவும், புதிய சந்தைகளையும், மூலப்பொருள்களையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காகவும் இந்த ஐரோப்பிய ஐக்கியக்கோரிக்கையை 1915களில் முன்வைக்க நிர்ப்பந்தித்தது.

இதே ஏகாதிபத்திய முரண்பாடுகள்தான் இரண்டாவது உலகமகாயுத்தத்திற்கான உந்துசக்தியாக இருந்ததுடன் இன்று இந்த யுத்தம் முடிந்து 50 வருடங்கள் முடிவதற்குள் மீண்டும் முன்னணிக்கு வந்திருக்கின்றது. காலனிகளையும், சந்தைகளையும், மூலப்பொருள்களையும் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதன்மூலம் உலகச்சந்தையை கட்டுப்படுத்துவதை

படிப்பகம்

www.padippakam.com

நோக்காகக்கொண்டு ஏகாதிபத்தியங்கள் இன்று அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா என்ற மூன்று பிரதான முகாம்களாக பிளவுண்டு நிற்கின்றன.

ஐரோப்பிய நாணயஐக்கியமும், அதன்மூலமான ஐரோப்பிய அரசியல் ஐக்கியமும் என்ற ஐரோப்பிய நாடுகளின் திட்டம் உலகச்சந்தையில் ஐரோப்பிய நிறுவனங்களினது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டது. கடந்த ஐந்து வருடங்களுக்குள் ஐரோப்பாவின் பிரதானமான தொழிற்துறைகள் அனைத்தும் ஒரு சில ஏகபோக நிறுவனங்களாக ஒன்றிணைக்கப்பட்டுவிட்டதுடன், மூலதனங்கள் குவிக்கப்படுவதற்கும் வழிதிறந்துவிட்டது.

இந்நிலைமைகளுக்குள் "பலத்திற்கு பொருத்தமானவாறு பங்கிடுவது" என்ற லெனினது சொற்கள் நாணய ஐக்கியத்தை குழிதோண்டிப்புதைத்த ஐரோப்பிய நாடுகளிற்கிடையேயான முரண்பாடுகளிற்கான விளக்கத்தைத் தருகின்றன.

கிழக்குஐரோப்பாவிலும், சோவியத்யூனியனிலும் ஸ்ரலினிச அதிகாரத்துவங்களின் வீழ்ச்சியும், இதனோடு தொடர்புடைய ஜேர்மனியின் முதலாளித்துவ மறுஇணைப்பும் ஐரோப்பாவிலும், சர்வதேசரீதியிலும் ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் நிலைமைகளை மாற்றிவிட்டது. ஏற்கனவே ஐரோப்பாவின் பொருளாதாரப் பலம்வாய்ந்த நாடாகவிருந்த ஜேர்மனி முதலாளித்துவ மறுஇணைப்பின்மூலம் அரசியல்ரீதியிலும், இராணுவரீதியிலும் சர்வதேசரீதியில் ஆதிக்கம் செலுத்துவதற்கு முண்டியடித்துக்கொண்டு முன்வந்தது. ஜேர்மனியைப் பொறுத்தளவில் 1945ல் யுத்தத்தில் இழந்துபோன கிழக்குஜேர்மனியை மீண்டும் இணைத்துக்கொள்வது மட்டுமல்ல, ஐரோப்பாவை தனது நலன்களுக்கு பொருத்தமானவாறு "ஒழுங்குபடுத்துவதே" பிரதான நோக்கமாகவிருந்தது. 1991 மார்கழி 14/15ம் திகதிகளில் ஜேர்மனி குரோசியாவையும், சுலோவேனியாவையும் முன்னாள் யூகோசிலாவியாவில் "சுதந்திரநாடுகள்" என அங்கீகரித்தது, ஜேர்மனியில் மீண்டும் புத்துயிர்பெற்ற இராணுவவாதத்தினை வெளிப்படுத்தியது. அமெரிக்காவினதும், ஐரோப்பிய நாடுகளினதும் விசேடமாக பிரான்சினதும் நலன்களுக்கு சவால்விட்ட இந்த அங்கீகாரமானது "புதியஜேர்மனியின் நோக்கங்களை பறைசாற்றியது.

இதனைத்தொடர்ந்து கம்போடியாவிலும், சோமாலியாவிலும் ஐக்கியநாடுகள்சபையின் தலைமையின்கீழ் தனது படைகளை அனுப்பியதும் ஜேர்மனி தனது பொருளாதார நலன்களை தனது வர்த்தக எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக இராணுவவாதத்தில் முன்னோக்கிச் செல்வதை வெளிக்காட்டுகின்றது. ஐரோப்பாவில் ஜேர்மனியின் இன்றைய இந்த "பலம்வாய்ந்த" நிலைதான் அது ஐரோப்பியஐக்கியம் தொடர்பான கடந்தகால ஒப்பந்தங்களையெல்லாம் கிழித்தெறிவதன் பின்னணியாகும்.

## தொழிலாளவர்க்கத்தின் முன்னோக்கு

ஐரோப்பாவின் பலம்வாய்ந்த பெரும் நிறுவனங்கள் மூலதனத்தை ஒன்றுகுவிப்பதில் ஐரோப்பாவின் எல்லைகளை ஏறத்தாள முழுமையாக அழித்தொழித்துவிட்டன. அதேநேரத்தில் ஐரோப்பாவின் எல்லைகள் தொழிலாளவர்க்கத்தினைப் பொறுத்தளவில் புதிய முள்ளுக்கம்பிவேலிகளாய் உயர்ந்து நிற்கின்றன. பதினேழு மில்லியன் ஐரோப்பியர்கள் ஐரோப்பா முழுமையாகவும் சமூகசேவைப் பிச்சைப்பணத்தில் வாழ நிர்ப்பந்திக்கப்படும் அதேநேரத்தில் அடுத்தவருடத்தில் எட்டுப்பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் ஐரோப்பாவில் வாழும் தொழிலாளர்கள் வேலை இழப்பதற்கு முகம் கொடுக்கின்றனர். ஐரோப்பாவின் பொருளாதாரவளர்ச்சி குறைந்த நாடுகளான ஸ்பெயின், இத்தாலி போன்றவை மட்டுமல்ல சுவீடன், ஜேர்மனி போன்ற பொருளாதார பலம்வாய்ந்த நாடுகளும் பாரிய சமூகநெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றன.

வேலையில்லாத்திண்டாட்டத்தை உற்பத்தி செய்வதும், சமூகசேவைகளை வெட்டிக்குறைப்பதுமான தொடர்ந்த தாக்குதல்களுக்கு தொழிலாளவர்க்கம் ஐரோப்பா முழுவதும் முகம்கொடுக்கின்றது.தேசியவாதத்தையும், இனவாதத்தையும் திட்டமிட்டு கிளறிவிடுவதன் மூலம்.

படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளவர்க்கத்தை பிளவுபடுத்தி யூகோசிலாவியா மாதிரியான இரத்தக்களரி ஒன்றிற்கு ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் தயார் செய்கின்றன.

இந்த நிலைமைகளில் ஐரோப்பியத் தொழிலாளர்களுக்கு முன்னால் உள்ள பணி என்ன என்பதை நான்காவது அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் ஜேர்மன் பிரிவான சோசலிசத்தொழிலாளர்கழகம் (Bund sozialishtische Arbeiter) தனது வேலைத்திட்டத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.:-

"ஆயுதங்களால் குவிக்கப்பட்டும், பொருளாதார ரீதியில் பின்னிப்பிணைந்தும் இருக்கும் ஐரோப்பாவில் ஐக்கியஐரோப்பியசோசலிசக்குடியரசு மட்டும்தான் தொழிலாளவர்க்கத்திற்கு சாத்தியமாகக்கூடிய ஒரே ஒரு ஆட்சி வடிவமாகும்.

ஒரு தனி ஐரோப்பிய நாட்டில் தொழிலாளர் ஆட்சி என்பது பொருளாதார ரீதியிலோ, அல்லது இராணுவரீதியிலோ நீண்டகாலம் தாக்குப்பிடிக்க முடியாது. முழு ஐரோப்பிய தொழிலாளவர்க்கத்தினதும் ஆதரவைப் பெற்றுக்கொள்வதின்மூலம் தொழிலாளவர்க்கத்தின் ஆட்சியை கைப்பற்றுவது என்பது ஒரு முழு ஐரோப்பியப் பணியாகும்.

முதலாளித்துவத்தால் திட்டமிட்டு சமூக, அரசியல் ரீதியான தொழிலாளவர்க்கத்தினைப் பிளவுபடுத்தும் நடவடிக்கையானது சமூகநெருக்கடிகளையும், எழுச்சிகளையும் பிரதேசரீதியாக தனிமைப்படுத்துவதையும் இரத்தக்களரியில் மூழ்கடிப்பதையும் இலக்காகக் கொண்டது.

ஆதலால் நான்காவது அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் கிளைகளை அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் கட்டியெழுப்புவதே சோசலிசத்தொழிலாளர் கழகத்தினதும் (BSA) அதனது சகோதர இயக்கமான பிரித்தானிய 'சர்வதேசக்கம்யூனிஸ்ட்கட்சியினதும் (ICP) மூலோபாயத்தின் மத்தியபுள்ளியாகும்."

www.padippakam.com

# பிரான்சில் முதலாளித்துவ நெருக்கடி

**(ஐப்பசி மாதத்தின் முடிவில் பிரான்சின் விமானப் போக்குவரத்து நிறுவனமான AIRFRANCE ன் தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள் தனியார்மயப்படுத்தலுக்கும், வேலைவெட்டுக்களுக்குமெதிரான வேலைநிறுத்தங்களை மேற்கொண்டனர். இது பிரான்சில் முதலாளித்துவ ஆட்சி முகம்கொடுக்கும் பாரிய நெருக்கடிகளை பிரதிபலிக்கும் ஒரு வேலைநிறுத்தமாகும். வெளிநாட்டுக்காரர்களுக்கெதிராக புதிய இனவாதச் சட்டங்களை இயற்றுவதன் மூலம் புதிய தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதுவும் இந்த நெருக்கடிகளின் நேரடி விளைவேயாகும். கீழ்வரும் கட்டுரை பங்குனி மாதம் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னணியில் பிரான்சினது நிலைமைகளை ஆய்வு செய்கின்றது).**

மார்ச் 93 பொதுத்தேர்தலில் 12 வருடகாலமாக ஆட்சி செய்த ஜனாதிபதி பிரான்சுவா மித்திரனின் சோசலிசக்கட்சி வரலாற்றுரீதியான தோல்வியைக் கண்டதுடன் RPR, UOF வலதுசாரிக்கூட்டு அமோகவெற்றியின் மூலம் எடுவாட் பலதுாரின் தலைமையில் புதிய அரசாங்கத்தை அமைத்துள்ளது.

வலதுசாரிகளின் இவ்வெற்றியானது 12 வருடகாலமாக சோசலிச ஆட்சியென கூறப்பட்ட அரசாங்கத்தின் சமூக, பொருளாதார கொள்கையின்மேல் தொழிலாளவர்க்கத்திற்கும், குட்டிமுதலாளித்துவத்தட்டினருக்கும் இருந்த வெறுப்பின் பிரதிபலிப்பாகும்.

தமது ஆட்சிக்காலப்பகுதியில் சோசலிச அரசாங்கம் முதலாளிவர்க்கம் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றியதுடன் அதைவிட பன்மடங்கு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் சமூகநலன்களை ஒழித்துக்கட்டியது.

உழைக்கும் மக்களின் தொகையில் 13% வேலையற்று இருக்கும் அதேவேளையில் நாதமொன்றிற்கு 50.000 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்படுகின்றனர். வீடின்மை, சமூகஉதவிகளின்வெட்டு மற்றும் அனைத்து நெருக்கடியினுள்ளும் வலதுசாரிகளின் வெற்றி ஒன்றும் தற்செயலானதல்ல. இது திட்டமிட்டு ஸ்டாலினிச, திரிபுவாத தொழிற்சங்கத் தலைமைகளின் தேசியவாதவேலைத்திட்டத்தின் மூலம் தொழிலாளவர்க்கத்தின் வர்க்க உணர்வை மழுங்கடித்ததன் வெளிப்பாடாகும். இனவாதத்தையும், தேசியவாதத்தையும் பிரதான கொள்கைகளாக இப்புதிய அரசாங்கம் கொண்டுள்ளது. இது உள்நாட்டில் இனவாதவர்க்க யுத்தத்தையும், எல்லைக்கப்பால் வர்த்தகயுத்தத்தையும் மேற்கொள்கின்றது.

உள்நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்ட அதிதேசியவாதியும், மாஜிமதுபான வியாபாரியுமான சார்ள்ஸ் பஸ்குவா பதவிக்கு வந்ததும் வராததுமாகவே மூன்று தொழிலாளவர்க்க இளைஞர்கள் பொலிசாரினால் ஏப்ரல் 93 சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்நடவடிக்கை குற்றச்செயல், சண்டைசச்சரவு மற்றும் போதைவஸ்து போன்ற முதலாளித்துவ சீரழிவின் அறிகுறிகளுக்காக வெளிநாட்டுத்தொழிலாளர்களை குற்றம்சாட்டும் இனவாத சக்திகளுக்கு வலதுகையாகவிருக்கின்றது. பிரான்சு முதலாளித்துவத்தின் அனைத்து நெருக்கடிகளுக்கும் வெளிநாட்டுத் தொழிலாளரை காரணம் காட்டும் இவ்வரசாங்கம் கொடிய இனவாத சட்டங்களை கிட்டத்தட்ட எந்தவித எதிர்ப்புமின்றி அமுலுக்கு கொண்டு வந்துள்ளது.

இப்புதிய சட்டங்களின்படி இதுவரை வெளிநாட்டுத் தொழிலாளவர்க்கத்திற்கு இருந்த மிச்சசொச்ச உரிமைகளும் தவிடுபொடியாகின்றன. இங்கு பிறக்கும் குழந்தைகட்கு கிடைக்கும் பிரஜாவுரிமை நடைமுறைச் சாத்தியமற்ற

அரசியல் அகதிகள் விவகாரத்தில் பொலிசாரின் கையோங்கி நிற்கின்றது. அனைத்து அரசியல் அகதிகட்கும் இருந்த OFPRA(அகதிகள் அலுவலகம்) இற்கு விண்ணப்பம் செய்யும் உரிமை பொலிசாரின் நிபந்தனைகளின் மூலம் முற்றாக நிராகரிக்கப்படுகின்றது.

நாட்டின் எல்லைகளிலும், விமான நிலையங்களிலும் தஞ்சம் கோரும் அகதிகள் கொடூரமானமுறையில் பலவந்தமாக (PAF) விஹான எல்லைப்பொலிஸ்சினால் வந்த விமானங்களிலேயே திருப்பி அனுப்பப்படுகின்றனர். இங்கு வாழும் தொழிலாளி ஒருவர் தன் குடும்பத்தினரை அழைப்பதென்பது கிட்டத்தட்ட சாத்தியமற்ற நிலைக்கு வந்துவிட்டது. வெளிநாட்டுத்தொழிலாளர்களின் சமூக உதவிகள் பாரிய வெட்டுக்குட்படுத்தப்படுகின்றது. சமூக உதவி பெறும் வெளிநாட்டுத்தொழிலாளர்களின் பெயர்ப்பட்டியல் பொலிஸ்நிலையங்களுடன் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் வெளிநாட்டுத் தொழிலாளரின் முழுவிடயங்களும் பொலிஸ் கட்டுப்பாட்டினுள் வந்துள்ளது

வெளிநாட்டவர் ஒருவர் பிரெஞ்சுப்பிரெஜையை திருமணம் செய்யின் இத்திருமணம் மாநகரமுதல்வருக்கு இனவாத அடிப்படையில் திருப்தியளிக்காவிடின் அதை தடுத்து நிறுத்தும் உரிமையை முதல்வர் கொண்டிருப்பார். இப்புதிய சட்டங்களின்படி ஒரு தொழிலாளரின் கடவுச்சீட்டை அல்லது நாட்டில் இருப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை எந்த இடத்திலும் பரிசோதிக்க பொலிசாருக்கு உரிமையளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் அமுலுக்கு வரமுன்னமே ஆத்திரமூட்டலுடனும், பலாத்காரத்துடனும் இப்பரிசோதனைகள் பொலிசாரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் பிராந்தியரீதியில் பலபிரிவுகளாக இருந்த அதிகாரத்தினை சார்ள்ஸ் பஸ்குவா தனி ஒரு அதிகாரத்தினுள் கொண்டுவருவதுடன் அதன் உத்தியோகத்தர்கள் நேரடியாக பிராந்தியத்தின் பொலிஸ்மா அதிபருடன் நெருங்கி செயற்படுவர். இவர்கள் பொலிஸ்மா அதிபருக்கு பிராந்திய பாதுகாப்புத் திட்டத்தில் துணையாய் இருப்பர். இத்திட்டம் நீதிபரிபாலன செயலகத்துடன் இணைந்து எதிர்வரும் புரட்டாதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. இது நடைமுறைக்கு வருவதன்மூலம் PAF தையல் நிலையங்கள், கட்டிடவேலைத்தலங்களில் அனுமதியின்றி வேலைசெய்வோரைக் கட்டுப்படுத்தும் அலகாக மாறும். PAFன் வளர்ச்சிப்போக்கு DST எனப்படும் பிரான்சின் உயர்ந்த இரகசியப்பொலிசுடன் நெருங்கிச் செயற்படும் அளவிற்கு அபிவிருத்தியாகும்.

## பொருளாதார நெருக்கடி

இரண்டாவது உலகமகாயுத்தத்தினை தொடர்ந்து ஜேர்மனி துண்டாடப்பட்டதுடனும், குளிர்கால யுத்த காலத்திலும் பிரான்சு தனது உண்மையான பொருளாதார வலுவிலும் பார்க்கக்கூடிய ஆதிக்கத்தினை ஐரோப்பாவில் நிலைநாட்ட முயன்றது. ஆனால் இன்று இடம்பெறுகின்ற அனைத்து மாற்றங்களின் முன்பு 2ம் உலகயுத்தத்தின் பின்1930களை ஒத்த அதிகூடிய பொருளாதார நெருக்கடியுள் இருக்கின்றது. பிரான்சின் அனைத்து பொருளாதார துறைகளும் விவசாயம், கடற்தொழில், உல்லாசத்துறை, தொழில்நுட்பக்கைத்தொழில் என்பன கட்டுப்படுத்த முடியாத வீழ்ச்சியினைக்காட்டுகின்றது.

கடந்த நவம்பர்மாதம் GATT (வர்த்தகம், வரி தொடர்பான பொதுஉடன்பாடு)இனால் உருவாக்கப்பட்ட அமெரிக்காவுடனான விவசாய எண்ணெய்ப்பயிர் தொடர்பான ஒப்பந்தம் நாட்டின் விவசாயிகளின் எதிர்ப்பினால் பிரான்சு நிராகரித்தது. இது சம்பந்தமாக அமெரிக்க ஜனாதிபதி கிளிங்ரனுடன் பேச்சுவார்த்தைக்காக திடீர்விஜயம் ஒன்றை மேற்கொண்ட பிரதமர் பலதூர் இதுபற்றி 15 நிமிடம் தன்னும் பேசமுடியாது போனது, ஏகாதிபத்தியங்களிற்கிடையேயான முரண்பாட்டை படம்வரைந்து காட்டுகிற்றது.

ஆடிமாதம் டோக்கியோவில் இடம்பெற்ற அபிவிருத்தியடைந்த நாடுகளின்

www.padippakam.com

படிப்பகம்

(G7 நாடுகள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, ஜப்பான்பிரான்சு, இத்தாலி, கனடா) அதேவேளையில் இதில்கலந்துகொண்ட அமெரிக்கப்பிரதிநிதி பிரான்ஸ் விவசாய ஒப்பந்தத்தை விமர்சிப்பதானால் அமெரிக்காவிற்கு மன்னிப்புத் தெரிவிக்கவேண்டும் என மிரட்டினார். இவ்விவசாய ஒப்பந்த நெருக்கடியுடன் அமெரிக்காவிற்கு பிரான்சினால் ஏற்றுமதி செய்யப்படும். கூடவே உருக்கு சம்பந்தமான நெருக்கடியும் நாளாந்தம் உருப்பெற்று வருகின்றது.

என்றுமில்லாதளவில் பொருளாதார நெருக்கடியுள் இருக்கும் பிரான்சிய முதலாளித்துவம் சர்வதேசரீதியில் அமெரிக்கா, ஜப்பானுடனும் ஐரோப்பா கூட்டினுள் ஏகாதிபத்திய எதிரணிகளுடனும் வர்த்தகயுத்தத்தில் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளும் ஆயுதயுத்தத்தின் முன்னோடியான பொருளாதார பாதுகாப்புவாதத்தை ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வுகளும் படம்பிடித்துக்காட்டுகின்றன. 1990 இல் இருந்து மும்மடங்காகிய அரசாங்கத்தின் நிதிப்பற்றாக்குறை இன்று மொத்தத்தேசிய உற்பத்தியில் (GNP) 4.42%த்தினை அடைந்துள்ளது. இது சமூகபாதுகாப்பில் பற்றாக்குறையுடன் சேர்ந்து 10,2%மாகும். 1993ம் ஆண்டின் 0.4% தேசியஉற்பத்தி 0.4%த்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்நெருக்கடி நிலையைச் சமாளிக்க சிகரெட், மதுபானம் எரிபொருள் ஆகியவற்றின் விலைகளை முறையே 1.5%, 1.6%, 8.5% ஆல் அதிகரித்த பலதூர் அரசாங்கம் தொழிலாளர் சம்பளத்தின் நேரடிவரியினை 1.1%ஆல் அதிகரிக்கின்றது. பெரிய உத்தியோகத்தர்கட்கு 0.8% ஆகமட்டுமுள்ள இவ்வதிகரிப்புடன் ஒரு சாதாரண தொழிலாளியின் மொத்த சம்பளத்தில் இருந்து வெட்டப்பட்டவரி 17.5% இருந்து 18.6% ஆக உயர்கின்றது. பலதூர் அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய இனவாதசட்டங்களை உருவாக்க முடிந்ததுபோல் பொருளாதாரத் திட்டங்களை செய்வதற்கு உலகப்பொருளாதார நிலைமை இடம்கொடுக்கவில்லை. நாளொன்றிற்கு ஒரு திட்டம்போட்டு அதைபின்வாங்குவது சாதாரணமாகிவிட்டது.

அனைத்து பொருளாதாரதுறைகளிலும் நிமிடத்திற்கு நிமிடம் வேலைவெட்டுக்கள் நடைபெறுகின்ற இதேவேளை வேலைவெட்டிற்கெதிராக இருந்த அனைத்து விதிமுறைகளும் முதலாளிவர்க்கத்திற்கு சார்பாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக பாரிசின் மேற்பகுதியிலுள்ள ST.CYR இல் SKF என்ற நிறுவனம் பல ஆண்டுகளாக வேலைசெய்த தொழிலாளர்களை திடீரென்று அலுவலகத்திற்கு அழைத்து வேலைநீக்கக் கடிதத்தை வழங்கியது. இந்தமுறை தேசியரீதியில் தினசரிநடைபெறும் ஒரு நிகழ்வுப்போக்கை எடுத்துள்ளது.

யுத்த தளவாட உற்பத்தியில் உலகில் 3ங் இடத்தை வகிக்கும் THOMSON-CSF என்ற பிரான்சிய நிறுவனம் 1992ம் ஆண்டில் 16 கோடி பிராங்குகள் நிகரலாபத்தின் மத்தியிலும் 1994 இறுதிக்குள் 4000 தொழில்வெட்டுக்களை மேற்கொள்ளவுள்ளது. இதுபோல BULL கணனி உற்பத்திநிறுவனம் 2800 AEROSPATALE 2250, CREDIT LYONNAIS 7000 தொழில்வெட்டுக்களை வருடஇறுதிக்குள் செய்யவிருக்கின்றது. இவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமே.

இதுவரை 33 இலட்சம் வேலையற்றோர் எண்ணிக்கை இவ்வருட இறுதிக்குள் 40 இலட்சத்தை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்துடன் செப்ரெம்பர் மாதம் பாடசாலையில் இருந்து வெளியேறும் 6 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களில் 85%த்தினரும் உழைப்புச் சந்தைக்குள் வருகின்றனர். இப்புதிய வலதுசாரி அரசாங்கத்தின் திட்டங்களில் ஒன்று கடந்த அரசாங்கத்தால் மிச்சசொச்சமாக விடப்பட்ட தேசிய நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதாகும். பதவிக்கு வந்ததும் மத்தியவங்கி, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து சுயமாக இயங்கும் குழுவொன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மேலும் 21 நிறுவனங்களும் தனியார்மயமாக்கலுக்குட்படுகின்றன. இதன்மூலம் எதிர்பார்க்கப்படும் வேலைவெட்டு இன்னும் அதிகரிக்க இடமுண்டு. முதலாளித்துவ ஊதுகுழல்களின் விளம்பரத்தின் மத்தியிலும் பலதூர் பெற்றுக்கொண்ட உள்நாட்டுக்கடனின் 30% தொழிலதிபர்களின் வரிநிலுவைக்கு அறவிடப்படும். எஞ்சியிருக்கும் பெரும்பகுதியும் "பொருளாதார வளர்ச்சிக்காக" முதலாளிகளின்

www.padippakam.com
படிப்பகம்

வரிச்சலுகைக்கு பிரயோகிக்கப்படவுள்ளது.

www.padippakam.com

இத்துடன் கூடவே ஜனாதிபதி பிரான்சுவா மித்திரனின் காலம்சென்ற அதிநெருங்கிய நண்பர் தொடக்கம் ஸ்டாலினிஸ்டுகள், ஆளும்கட்சி எதிர்கட்சி அரசியல்வாதிகளும் மந்திரிகள் உட்பட உதைபந்தாட்டம் வரைக்கும் ஊழல் தாண்டவமாடுகின்றது. பிரான்சில் அதிவேகத்துடன் வளர்ந்துவரும் இனவாதம், தேசியவாதம், மற்றும் சமூக, பொருளாதார நெருக்கடிகளை சர்வதேச மார்க்சிச கண்ணோட்டத்தின் மூலமே விளங்கிக்கொள்ள முடியும்.

காரணம் சர்வதேசரீதியில் சரிந்துபோகும் உலகமுதலாளித்துவப் பொருளாதாரத்தின் விதிகளே ஒவ்வொரு நாடுகளிலும் சமூக, பொருளாதார அரசியலை நிர்ணயிப்பவையாக இருக்கின்றன. இந்நெருக்கடிகள் முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகத்தின் சீரழிவினையே காட்டுகின்றன. இந்த அடிப்படையிலேயே அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி போன்ற ஏகாதிபத்திய நாடுகளிலும், மற்றும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் ஏகாதிபத்திய சார்பு பொம்மை அரசாங்கங்களின் இனவாத, தேசியவாத கொள்கையை விளங்கிக்கொள்ள முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

# ஏன் பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டார்

மே 1ம் திகதி பிரேமதாச படுகொலை செய்யப்பட்டதன் பின் புதிய ஜனாதிபதியாக D.B விஜயதுங்கா தெரிவுசெய்யப்பட்டது இலங்கையின் இதுவரையுமான முதலாளித்துவ ஆட்சிமுறையில் ஓர் கூர்மையான திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. பேரழிவிலிருந்து நாட்டைப்பாதுகாக்க என்ற போர்வையில் அனைத்துப் பிற்போக்கு சக்திகளையும் பொறுக்கியெடுத்து ஓர் "தேசிய அரசாங்கம்" ஒன்றை அமைக்க D.B விஜயதுங்க எடுத்துள்ள நடவடிக்கைகள் 1965ல் இந்தோனேசியாவைப்போல காட்டுமிராண்டித்தனமான இராணுவசர்வாதிகார ஆட்சிக்கான திசையைநோக்கி இலங்கை முதலாளித்துவம் திரும்பியுள்ள புதிய காலப்பகுதியையும், கொடூரமான வர்க்க மோதுதலிற்கான ஆரம்பத்தையும் குறிக்கின்றது.

1948ல் இலங்கை "சுதந்திரமடைந்ததன்" பின் முதல் தடவையாக ஓர் "தேசிய அரசாங்கம்" ஒன்றை அமைக்கும் பேச்சுவார்த்தைகளில் ஐக்கியதேசியக்கட்சியும் (UNP), ஜனநாயக ஐக்கியதேசியமுன்னணியும் (DUNF) சிறீலங்கா சுதந்திரக்கட்சியுள் அனுராபண்டாரநாயக்காவின் பிரிவும், இலங்கை முஸ்லீம் காங்கிரசின் தலைவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து வெளிவரும் முதலாளித்துவ பத்திரிகைகள் "LTTE கெதிராய் போராடுவதற்கு" இவ் அனைத்துக்கட்சிகளையும் உள்ளடக்கிய ஓர் "தேசியஅரசாங்கம்" அமைப்பதனூடாகவே பேரழிவிலிருந்து நாட்டை பேணமுடியும்" என வலியுறுத்துகின்றன. ஆனால் முதலாளித்துவ பத்திரிகைகளில் வலியுறுத்தும் கருத்தில் எதுவித உண்மையுமில்லை. ஏகாதிபத்தியங்களதும், சர்வதேசநாணயநிதியம்(IMF), உலகவங்கி ஆதரவுடன் இலங்கை முதலாளித்துவத்தால் நிறுவப்படும் ஓர் தேசிய அரசாங்கத்தின் "பிரதான இலக்கு" LTTE இற்கு எதிராய் போராடுவதல்ல. உண்மையில் அப்படியானதொரு ஆட்சி சாத்தியமாயின் LTTE உடன் ஓர் தொடர் உடன்பாடுகளை செய்துகொள்வதற்கு முன்வரும் என்பதோடு இப்படி ஒருஆட்சியைப் பாதுகாப்பதற்கு LTTE யின் தலைமை முழுமையாக அரசியல் ஆதரவையும் வழங்கும்.ஓர் தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான புறநிலை அவசியத்தை LTTE ற்கும், யு.என்.பி அரசாங்கத்திற்குமிடையே இடம்பெறும் குத்துவெட்டுக்களிலிருந்ததல்ல., மாறாக சர்வதேசரீதியாக முதலாளித்துவம் எதிர்கொண்டுள்ள வரலாற்று நெருக்கடியின் விளைவுகள் இலங்கையில் ஏற்படுத்தும் அரசியல், பொருளாதார, சமூக தாக்கங்களின் அடிப்படையில் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

## பிரேமதாசாவின் அரசியல் வரலாறு

பிரேமதாசாவின் முழு வாழ்க்கை பூராவும் பிரதிபலித்த அவரது ஆரம்ப கல்வியறிவும், அரசியல் வளர்ச்சியும் Oxford,Cambrige கலாசாலைகளில் கல்வி பயின்ற இலங்கையின் ஏனைய முதலாளித்துவ வர்க்க கொழுந்துகளைப் போலல்லாமல் இனவாத கூச்சல்களிற்கு பேர்போன பௌத்த பாஞ்சாலைகளிலும், பிக்குகளின் செல்வாக்கிலும் அடித்தளமிடப்பட்டது. இதனால் இலங்கையின் மிகுதி எல்லாத் தலைவர்களை விடவும் மிக கீழ்த்தரமாய் சண்டை போடக்கூடியவராய் அவர் எப்பொழுதும் இருந்தார். அவரது

படிப்பகம்

www.padippakam.com

அரசியல் வாழ்க்கை 1950களில் கொழும்பு மாநகரசபை உறுப்பினராய் தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து ஆரம்பமாகியது. இக்காலப்பகுதிகளில் அவர் தன்னை சீரழிந்த குட்டி முதலாளித்துவ தட்டுக்கள், தண்டனைபெற்ற குற்றவாளிகள், உதிரிகளையும், மீசையும், வாயுமாக அலையும் இனவாத குண்டர் படையையும் அடித்தளமாய் கொண்டிருந்ததோடு தன்னையும் ஒரு தேசியவெறிக்காடையனாக அபிவிருத்தி செய்துகொண்டார். 1960களில் அவர் பாராளுமன்றத்திற்கு முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்டதிலிருந்து மே 1வரை எதுவித தடையுமில்லாமல் எதிர்க்கட்சி தலைவர், பிரதமமந்திரி, இறுதியாக ஜனாதிபதி பதவி வரையும் வகித்தார்.

இலங்கையின் ஜயவர்த்தனா ஆட்சி படுமோசமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட நிலையில் 1988 டிசம்பரில் அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். இலங்கை, இந்திய ஒப்பந்தத்திற்கெதிராய் வளர்ச்சியடைந்த தமிழ்மக்களின் எதிர்ப்பை நசுக்கவும், பாசிச JVP இயக்க தலைவர்களிற்கு அமைச்சர் பதவிபோன்ற சில சலுகைகள் வழங்குவதனூடாக அதை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரும் பொறுப்பும் அவரிற்கு ஏகாதிபத்தியங்களால் ஒப்படைக்கப்பட்டது. ஏகாதிபத்திய நிதி சஞ்சிகையான "Business International" தனது 1988 டிசம்பர் வெளியீட்டில் பிரேமதாச செய்து முடிக்கவேண்டிய கடமைகளை பின்வருமாறு குறிப்பிட்டது. "J V Pற்கு ஆதரவளிப்பவர்களிடையே ஊடுருவி பிரச்சனைகளிற்கு பரிகாரம் காண்பதன் மூலம் பதட்டத்தினை போக்கவும், ஆளும்க்ட்சியின் எதிரிகளிற்கு இருந்துவரும் ஆதரவிற்கு குழிபறிக்கவும் பிரேமதாச அதிக காரியங்களை செய்யமுடியும்."

JVPஐ தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர பிரேமதாச எடுத்த முயற்சி சாத்தியமற்றுபோக "அதிக காரியங்களை செய்வதற்காக" அதனது தலைமையை முழுமையாக அழித்தொழிக்க வேண்டியிருந்தது. இலங்கை வரலாறு காணாத இரத்தக்களரி கிராமப்புறங்களில் உருவாக்கப்பட்டது. பிரேமதாசாவினதும், அவரது நெருங்கிய ஜெனரல்களினதும் நேரடி கண்காணிப்பின் கீழ் இலட்சத்திற்கும் அதிகமான கிராமப்புற இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு அடையாளம் தெரியாமல் ரயர் குவியல்களில் போட்டு எரிக்கப்பட்டனர். இவ் இரத்தக்களரி இயக்கத்திற்கு LTTE உட்பட அனைத்து முதலாளித்துவக்கட்சிகளும், LSSP, CP, NSSP போன்றன தமது முழு ஆதரவையும் தெரிவித்தன. இலட்சக்கணக்கான கிராமப்புற இளைஞர்களை படுகொலை செய்ததன் மூலம் தென்மாகாணத்தில் உருவான தற்காலிக ஸ்திர தன்மையின் பின்னர் பிரேமதாச அரசாங்கம் வடக்கில் தமிழ்மக்களிற்கெதிரான புதிப்பிக்கப்பட்ட இனப்படுகொலைகளில் இறங்கியது.

பிரேமதாசவின் பொருளாதாரக் கொள்கைகள் அவரது அரசியல் வேலைத்திட்டத்தை போலவே ஏகாதிபத்திய கொள்ளையடிப்பிற்கு இலங்கையின் அனைத்துக் கதவுகளையும் திறந்துவிட்டது. பல்தேசிய கம்பனிகளுடன் செய்துகொள்ளப்பட்ட தொடர் உடன்பாடுகளின் பேரில் தென்மாகாணங்களில் சுதந்திரவர்த்தகவலையங்கள் நிறுவப்பட்டு இளம்பெண்கள் இரவுவேலைகளிலும், குழந்தைகள் வேலைசெய்யவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.. உலகவங்கிகளினது நிபந்தனைகளின் பேரில் தொழிலாளவர்க்கத்தின் அனைத்து சமூகவெற்றிகளும், அடிப்படை ஜனநாயக உரிமைகளும் ஓர் குறுகிய காலத்தினுள் முழுமையாக அழிக்கப்பட்டன. தனியார் மயமாக்கல் வங்கிகளிலிருந்து தோட்ட பிராந்தியம் வரை கொண்டு செல்லப்பட்டது. பிரேமதாசாவின் பொருளாதார வேலைத்திட்டங்கள் நேரடியாக நாட்டின் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்குமட்டுமல்ல, குட்டிமுதலாளித்துவத்தட்டுகளுக்கும் மோசமான தாக்குதல்களை கட்டவிழ்த்துவிட்டன. விசேடமாக தொழிலாளவர்க்கத்தினதும், விவசாயிகளினதும் வளர்ந்துவரும் எதிர்ப்பினை கட்டுப்படுத்துவதற்காக பிரேமதாச முன்வைக்கும் கவர்ச்சியான மோசடித்திட்டங்கள் உலகவங்கியினதும், சர்வதேசநாணயநிதியத்தினதும் நேரடி கண்டிப்புக்குள்ளாக்கப்பட்டிருந்தது. இங்கேதான் பிரேமதாசாவின் கொலைக்கான அரசியல் காரணம் வெளியே தலையை நீட்டுகின்றது. இந்த வருடமுடிவிற்குள் "500 மணிக்கூட்டுக் கோபுரங்களும், 500

படிப்பகம்

www.padippakam.com

ஆடைத்தொழிற்சாலைகளும்" நிறுவுவது என்ற விலாசமான திட்டத்தை அறிவித்த ஜனாதிபதியை இந்த திட்டங்களுடன் சேர்த்து மே மாதம் முதலாம் திகதி மனிதக்குண்டு சிதறடித்தது. பிரேமதாச உயிருடன் இருக்கும் போதே இந்த "அபிவிருத்தித்திட்டங்களை" "ஊதாரித்தனமானது" என விமர்சித்த உலகவங்கியும்,சர்வதேசநாணயநிதியமும் புதிய ஜனாதிபதி விஜயதுங்கவின் அரசாங்கத்திற்கு வழங்கிய கடன்கள் இப்படியான திட்டங்களை முழுமையாக கைகழுவிவிட வேண்டும் என்ற எச்சரிக்கையுடனேயே வழங்கப்பட்டது. இது மட்டுமல்ல பிரேமதாசா ஆட்சியிலும் பார்க்க பிரமாண்டமான தாக்குதலை தொழிலாள, ஒடுக்கப்பட்ட மக்களுக்குமேல் நடாத்துவதற்கான வாக்குறுதியுடனேயே இக்கடன் வழங்கப்பட்டது. இத்திட்டங்களை ஆடி 30 திகதியிட்ட தொழிலாளர்பாதை தனது தலைமைக் கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றது.

"இலங்கைக்கு உதவி வழங்கும் குழு 82 கோடி டாலர் கடன் வழங்க முன்வந்ததற்குக் காரணம் மின்சாரக் கட்டணத்தினை அதிகரித்தல், பாண், மாவு விலைகளை உயர்த்துதல், மாவு, அரிசி இறக்குமதியைத் தனியாரிடம் கையளித்தல் போன்ற நடவடிக்கைகளை விஜேதுங்க அரசாங்கம் எடுத்ததனால் மட்டுமல்ல. மின்சாரசபை தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை அனைத்தையும் தனியார் மயமாக்க யூ.என்.பி அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளதே காரணம். தோட்டத் துறையில் மட்டும் ஐந்து லட்சம் தொழிலாளர்களை நடுறோட்டிற்குத் தள்ளும் வேலையை விஜேதுங்க அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.

பிரேமதாசாவின் கொலைகாரர் யாராக இருந்தாலும் கொலைக்கான அரசியல் காரணம் ஒரு கேடுகெட்ட செல்வாக்கிழந்த அரசியல்வாதியை கொன்றொழிப்பதில் இருக்கவில்லை பதிலாக ஏகாதிபத்தியத்தின் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக புதிய சேவகர்களை நியமிப்பதற்கான அரசியல் தேவையை அடித்தளமாகக் கொண்டிருக்கின்றது.

## தேசிய அரசாங்கம்.

இந்தியாவில் ராஜீவ்காந்தியின் கொலையைப்போல், பிரேமதாசாவின் கொலையும், இலங்கையின் முதலாளித்துவ ஆட்சிக்கு "ஜனநாயக" புத்துயிர்ப்பு கொடுக்கும் முயற்சியுடன் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல. மாறாக ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் தொழிலாளர், விவசாயிகள், ஒடுக்கப்பட்ட மக்கள் மேலான புதிய தாக்குதலை நடாத்துவதற்கான அடுத்த அரசாங்கத்தை அமைக்கும் சிக்கலான போக்குகளின் ஓர் பகுதியாகும். தற்போது கொலையின் ஐந்து மாதங்களின் பின் தொழிலாளர், விவசாயிகளின் தலைகளை வெட்டிப்போட ஜனாதிபதி விஜயதுங்க எழுப்பியுள்ள "தேசியஅரசாங்கத்திற்கான" போர்க்குரலில் கொலைக்கான அரசியல் பின்னணி மேலும் தெளிவுபட்டுள்ளது.

ஓர் தேசிய அரசாங்கத்தை நிறுவுவதற்கான கோரிக்கை விஜயதுங்காவின் கண்டுபிடிப்போ அல்லது இலங்கை முதலாளித்துவத்தில் சில பிரிவுகள் விரும்பி தேர்ந்தெடுத்த கொள்கையுமோ அல்ல. ஆனால் இவை சர்வதேசரீதியாக முதலாளித்துவ அமைப்புமுறையின் வரலாற்று வீழ்ச்சியின் நேரடியான வெளிப்பாடாகும்.

யுத்தத்தின் பின்னைய கால அரசியல் ஒழுங்குகளின் உடைவு தனியே ஸ்டலினிச ஆட்சிகளை மட்டுமல்ல கடந்த நாற்பது வருடங்களாய் ஓர் குறிப்பிட்ட சமநிலையின் அடித்தளத்தில் இயங்கிவந்த முதலாளித்துவ ஆட்சியின் அரசியல் கட்டமைப்புகள் அனைத்தையும் உடைத்துள்ளது. இத்திருப்பத்தின் மூலம் பாரியளவில் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடி ஒவ்வொரு நாடுகளிலும் உக்கிரமாக்கப்பட்டுள்ளதுடன் தொழிலாளவர்க்கத்தையும் போராட்டங்களில் தள்ளியுள்ளது. இப்போராட்டங்களை நசுக்குவதற்கு ஐரோப்பாவில் அதன் முதலாளித்துவ அரசாங்கங்கள் இந் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் நீடித்த பிற்போக்கு ஆட்சி முறைக்கு வேகமாய் திரும்புகின்றன. ஜேர்மனியில் வளர்ச்சியடையும் தொழிலாளர்களின் போராட்டங்கள் பொலீஸ் தலையீட்டினால் ஒடுக்கப்பட ஆரம்பித்துள்ளதுடன் ஜேர்மன் முதலாளித்துவம் ஓர் "அவசரகால அரசாங்கத்தை" நிறுவுவதற்கான திட்டங்களிலும் குதித்துள்ளது. அவுஸ்திரேலியா முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் நிறுவும் "தேசிய அரசாங்கத்தை" இச் சர்வதேச மாற்றங்களின் ஓர் பகுதியாகும்.

LSSP, NSSP, CP

படிப்பகம்

www.padippakam.com

அதிகாரத்துவங்கள் இலங்கை முதலாளித்துவ ஆட்சிக்கெதிரான தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான தலையீட்டை தடைசெய்வதனூடாக இலங்கை முதலாளித்துவத்திற்கும், அதனது இராணுவ, சர்வாதிகார வேலைத்திட்டங்களிற்கும் தமது முழு ஆதரவையும் வழங்கியுள்ளனர். தொழிலாளவர்க்கத்தை பொறுத்தமட்டில் இலங்கையின் தற்போதைய மாற்றங்கள் அதன் தலைமை நெருக்கடியையும் சர்வதேச சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரள வேண்டிய உடனடி அவசியத்தையும் மிக கூர்மையான முறையில் வெளிப்படுத்தியுள்ளது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகம் மட்டுமே தமிழ், சிங்கள தொழிலாளவர்க்கத்துடன் ஐக்கியப்படுத்தி இந்திய உபகண்டத்தில் சோசலிச குடியரசுகளை நிர்மாணிப்பதன் ஓர் பகுதியாக தமிழ்ஈழ, சிறீலங்கா ஐக்கியசோசலிச குடியரசுகளை அமைக்கும் சர்வதேசமுன்னோக்கிற்காக போராடுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளவர்க்கமும் பால்கன் பற்றிய பிரச்சனைகளும்



குரோசிய இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சித்திரைவதை முகாம்களில் பொஸ்னிய முஸ்லீம்கள்.

சுவிற்சிலாந்தின் ஐக்கியநாடுகள்சபை மண்டபத்தில் வரைபடங்களுடன் எப்படி பொஸ்னியாவை துண்டுபோடுவது என்ற தேசியவாதிகளின் குத்துவெட்டுக்களை ஒத்திவைத்துவிட்ட ஏகாதிபத்தியவாதிகள் செப்டம்பர் மாதத்தின் மூன்றாவது கிழமையில் நடந்த நேட்டோ (NATO) கூட்டத்தில் எப்படி பொஸ்னியாவில் இராணுவத்தலையீடு செய்வது என்பதைப்பற்றி விவாதித்தார்கள். இதனது பின்னணி என்ன என்பதை பின்வரும் அபிவிருத்திகளினூடாகவே விளங்கிக் கொள்ளமுடியும்.

1990-91 வளைகுடா யுத்தம்அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ மேலாதிக்கத்தை பாரசீகவளைகுடாவில் நிறுவியது. சோமாலியாவின் மீதான ஆக்கிரமிப்பு ஆபிரிக்க கண்டத்தை இராணுவ ரீதியாய் மேலான்மை செய்யும் நிலையை அதற்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இம்மாற்றங்களின் மிக அண்மைய அபிவிருத்தி பொஸ்னிய உள்நாட்டு யுத்தத்தின் நேரடி இராணுவ தலையீட்டிற்கான தயாரிப்புகளாகும். இவை அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் இழந்துபோன பொருளாதார, அரசியல் இராணுவ செல்வாக்கை பால்கனிலும், ஐரோப்பிய கண்டத்திலும் நிறுவும் போட்டியில் இறங்கியுள்ளதையும், புதியதும் மேலும் குரூரமானதுமான மோதல்களின் தொடக்கத்தையும் குறிக்கின்றது.

முதலாம் உலகப்போரின் முன்னோடியாய் இருந்த 1912-13 பால்கன் யுத்தங்களின் எண்பது வருடங்களின் பின் அப்பிராந்தியம் ஏகாதிபத்தியங்களின் புதிப்பிக்கப்பட்ட பகைமைகளிற்கும்,

படிப்பகம்

www.padippakam.com

சந்தைகள், மூலப்பொருட்களிற்கான போட்டியினதும் மையப்புள்ளியாய் மீண்டும் ஒருமுறை வந்துள்ளது. அங்கு தேசிய,இன வெறுப்புக்கள் ஏகாதிபத்தியங்களாலும், முதலாளித்துவ தேசியவாதிகளாலும் மிக நனவுபூர்வமாய் மீண்டும் ஊக்குவிக்கப்படுகின்றது.எல்லாவற்றிற்கும் முன்பு கடந்த இருவருடங்களின் முன் சுலோவேனியா, குரோசியா தமது சுதந்திரத்தை பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து யூகோசிலாவியாவில் உருவான உள்நாட்டு யுத்தம் பால்கன் தொடர்பாய் ஏகாதிபத்தியம் கடைப்பிடிக்கும் கொள்கையின் நேரடியான பெறுபேறாகும். அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் உட்பட அனைத்து ஏகாதிபத்திய சக்திகளும் யூகோசிலாவியாவினுள் முதலாளித்துவ மறு அறிமுகத்திற்கும், அந்நாட்டை இன அடிப்படையில் பிளவுபடுத்தும் கொள்கையையும் மிக ஆரம்பத்திலிருந்தே ஊக்குவித்து வந்தனர். பால்கனில் ஓர் நீண்ட சங்கிலித்தொடர் போன்ற சிறிய சக்தியற்ற அரசுகளை உருவாக்குவது,ஏகாதிபத்தியம் அப்பிராந்தியம் தொடர்பாய் கடைப்பிடிக்கும் வரலாற்றுரீதியான கொள்கையாகும்.

ஆகையினால்தான் சோவியத்யூனியனிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் உள்ள ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சியை தொடர்ந்து ஐரோப்பிய, அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் பழைய "பால்கன் மயமாக்கல்" கொள்கைக்குத் திரும்பியுள்ளனர். ஆனால், பால்கனை சிறிய அரசுகளாய் கூறுபோடுவது தொடர்பாயோ அல்லது அங்கு நேரடியான இராணுவத் தலையீடு செய்வது மேற்கொள்வது பற்றியோ ஏகாதிபத்திய சக்திகளிற்கிடையே பொதுவான ஐக்கியம் எதுவும் இல்லை. ஒவ்வொரு ஏகாதிபத்திய நாடுகளும் பால்கன் பிரச்சனையில் தமது சொந்த நலன்களையே கொண்டுள்ளன. இது 1991 ஜீன் 26ல் சுலோவேனியா, குரோசியா சுதந்திர அரசுகளாய் பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்து பொஸ்னியாவை சேர்பிய, குரோசிய முஸ்லீம்களிற்கிடையே மூன்று குடியரசுகளாய் பிரிக்கும் சமீபத்திய திட்டம்வரை வெளிப்பட்டது.

அண்மைய நாட்களில் பொஸ்னிய முஸ்லீம்களை ஆயுதபாணியாக்குவது பற்றியும், சேர்பியாவின் மேல் உடனடி வான் தாக்குதலை நடாத்துவது தொடர்பான கிளிங்ரன் அரசாங்கத்தின் திட்டம் மே கொப்பன்காகனில் நடந்த "ஐரோப்பிய சமூகத்தின்" (EG) மகாநாட்டில் பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மன் அரசாங்கங்களால் மீண்டும் நிராகரிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பிரான்ஸ், பிரித்தானிய துருப்புக்கள் பொஸ்னியாவின் தரையில் உள்ள போது அமெரிக்க போர் விமானங்கள் தலையிட்டு மிக இலகுவாய் குண்டுகளை போடுவதை ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக பொஸ்னிய முஸ்லீம்களை ஆயுதபாணியாக்குவது தொடர்பான பிரச்சனையில் அமெரிக்க, ஜேர்மன் ஏகாதிபத்தியங்களிற்கிடையே உருவான முரண்பாடுகள் மிக பகிரங்கமாகவே உள்ளன. ஜேர்மன் ஏகாதிபத்தியம் குரோசியாவின் டுஜ்மன் ஆட்சிக்கு இன்றுவரையும் தொடர்ந்து ஆயுத விநியோகம் செய்து வரும் வேளையில் இதற்கு நேர் எதிரான முறையிலேயே கிளிங்ரன் அரசாங்கம் தனது பிரதிநிதியான பொஸ்னியாவின் இசெற்பெக்கோவிச் அரசாங்கத்தை ஆயுதபாணியாக்க முன்னிற்கின்றது.

பொஸ்னிய அரசாங்கத்திற்கு வழங்கப்படும் ஆயுதங்கள் மிக சாதாரணமாய் குரோசிய மக்களிற்கெதிரான முறையில் மட்டுமல்ல மாறாக இறுதி ஆய்வுகளில்- அப்பிராந்தியத்தில் ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் அரசியல் செல்வாக்கிற்கும் அதனது இராணுவ தலையீட்டிற்கு எதிரான திசையிலுமே திருப்பப்படும். தற்போது மொஸ்ரார், பிகாச் போன்ற பிரதேசங்களில் குரோசிய முஸ்லீம் துருப்புக்களிடையே உக்கிரமடைந்து செல்லும் யுத்தம் ஜேர்மன், அமெரிக்க ஏகாதிபத்தியங்களிற்கிடையே அதிகரித்துச் செல்லும் பகைமைகளின் கூர்மையான பிரதிபலிப்பென்பதை தவிர வேறொன்றுமாயுமில்லை.

கிளிங்ரன் அரசாங்கத்தின் திட்டம் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களால் தொடர்ச்சியாய் நிராகரிக்கப்பட்டதன் பின் அது சில முடிவுகளிற்கு வரவேண்டியிருந்தது. யூன் ஆரம்பத்தில் 300 துருப்புக்களை மசடோனியாவிற்கு அனுப்புவதென்ற தீர்மானம் கிளிங்ரன் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டதுடன் உடனடியாகவே அமெரிக்க இராணுவத்தின் உயர்மட்ட தளபதிகள் மசடோனியாவின் தலைநகரம் ஸ்கோப்யேவிற்கு அனுப்பப்பட்டனர். ஐரோப்பாவிற்கு பால்கன் எப்படியோ


படிப்பகம்

www.padippakam.com

அதேபோல்தான் பால்கனிற்கான "வெடிமருந்தாய்" மசடோனியா வர்ணிக்கப்பட்டு வருகின்றது. தற்போது பால்கனில் உள்ள யுத்த நிலைமையின் கீழ் அப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் இராணுவத் தலையீடு பாரிய பிரதிவிளைவுகளை கொடுக்கக்கூடியதொன்றாகும்.

பால்கனில் நடைபெறும் தற்போதைய யுத்தம் முதலாளித்துவ சாதனங்கள் குறிப்பிடுவது போல் தீர்வு காணப்படமுடியாத இனப்பகைமைகளாலேயோ அல்லது அமைதியான வழியில் சேர்ந்து வாழ்ந்து பழக்கமற்ற மக்களாலேயோ உருவானதொன்றல்ல. இந்த நெருக்கடியை அகநிலை ரீதியாக அல்ல, மாறாக வரலாற்று ரீதியாய் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

பொஸ்னியாவில் உள்ள குரோசிய, சேர்பிய முஸ்லீம் மக்கள் கடந்த ஐநூறு வருடங்களிற்கு மேலாக பக்கம் பக்கமாய் வாழ்ந்து வருபவர்கள். அவர்கள் ஒரே மொழியை பேசுவதுடன் பொதுவான கலாச்சாரத்தையும் தம்மிடையே பகிர்ந்து கொள்பவர்கள். அங்கு கலப்புத்திருமணங்கள் நாற்பது வீதத்திற்கும் அதிகமானவை. இன்று இம்மக்களிடையே இரத்தம் தோய்ந்த பகைமைகளை உருவாக்கியதற்கான அடித்தளம் பால்கன் பிரதேசத்தின் கடந்தகால வரலாற்றில் வேர்விட்டிருக்கின்றது.

இதற்கு பிரதானமான பொறுப்பு கடந்த நாற்பது வருடகால ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் தேசியவாத வேலைத்திட்டமாகும். இவ் வேலைத்திட்டத்தின் தவிர்க்க முடியாத பெறுபேறுகள் யூகோசிலாவியாவில் முதலாளித்துவ அறிமுகத்திற்கும், ஸ்டலினிச அதிகாரத்துவத்தின் உடைவிற்கும் வழிவகுத்தது.

முதலாலாளித்துவ மறுசீரமைப்பின் கொடூரமான விளைவுகளிற்கெதிராய் தொழிலாளவர்க்கத்திடமிருந்து அபிவிருத்தியடையும் ஓர் ஐக்கியப்பட்ட போராட்டத்தை பிளவுபடுத்த, பலவீனமாக்க ஏகாதிபத்தியங்களால் ஆதரவழிக்கப்படும் தரகு முதலாளிகள் பிற்போக்குத்தனம் நிறைந்த தேசியவெறி நஞ்சை வெளியே தள்ளுகின்றனர். இப்பிராந்தியங்களில் ஆட்சியிலுள்ள தேசியவாத காடையர்களின் அரசாங்க வேலைத்திட்டம் "ஒருவரிற்கெதிராய் ஒருவர்" வேறு வார்த்தைகளில் சொல்வதானால் சேர்பிய தொழிலாளியின் பணி முதலாளித்துவ அறிமுகத்தின் சீரழிவிற்கெதிரான போராட்டத்தில் குரோசிய தொழிலாளியுடன் ஐக்கியப்படுவதல்ல, மாறாக அதே பிரச்சனைக்கு முகம் கொடுக்கும் அத் தொழிலாளியை கொல்வது, இதே அடித்தளத்தில்தான் அப்பிராந்தியம் முழுவதும் நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தத்தின் சக்கரங்கள் இயக்கப்படுகின்றன.

இக் கசப்பான உள்நாட்டு யுத்தங்களில் "சுயநிர்ணயஉரிமை", ஜனநாயகம்" போன்ற கருத்துக்கள் எதுவும் ஈடுபடுத்தப்படவில்லை. ஒருவர் நிலைமைகளை தெளிவாய் தொடர்ந்தால் போதும், ஜனநாயகம் தொடர்பாய் கூச்சல் இடும் இப்புதிய ஆட்சிகள் மிக பகிரங்கமான முறையில் இராணுவ, பாசிச சர்வாதிகாரங்களை நோக்கி அபிவிருத்தியடைவதை காணமுடியும்.

சர்வதேசதொழிலாள வர்க்கத்தை பொறுத்த அளவில் பொஸ்னிய உள்நாட்டு யுத்தம் தேசியவாத அரசியலின் மிகக் கொடூரமான விளைவுகளை எடுத்துக்காட்டியுள்ளது. தொழிலாளவர்க்கம் ஓர் சர்வதேச வர்க்கமெனும் அடிப்படையில் தேசியவாதத்தின் அனைத்து வடிவங்களையும் நிராகரிக்க வேண்டும். முன்னைய யூகோசிலாவியாவின் நெருக்கடியையும், அதனுடன் இணைந்து அதிகரித்துவரும் ஏகாதிபத்திய யுத்த அச்சுறுத்தலையும் தெளிவாய் புரிந்து கொள்ள கீழ்காணும் கேள்விகள் கட்டாயம் எழுப்பப்படவேண்டும்.

200,000 பொதுமக்களை இதுவரை படுகொலை செய்ததும் மேலும் பல லட்சக்கணக்கான மக்களை அகதிகளாக்கியும், பட்டினிச்சாவிற்கும் தள்ளிய இவ்யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அரசியல் விடயங்கள் என்ன?

பிற்போக்குத்தனம் நிறைந்த தேசிய வெறுப்புக்களிற்கெதிராய் எந்தமுன்னோக்கின் அடிப்படையில் வேறுபட்ட தேசியஇனங்களை சார்ந்த தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தமுடியும். இவற்றிற்கான விடைகளை ஓர் வரலாற்று கட்டமைப்பின் உள்ளடக்கத்திற்கு வெளியே கண்டுகொள்வது சாத்தியமற்றதொன்றாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# பால்கனும், பால்கன் யுத்தங்களும்.

ஐரோப்பிய நிதி மூலதனங்களின் பாரிய அழுத்தங்களின் கீழ் பால்கன் நாடுகள் முதலாளித்துவ அபிவருத்தியின் பாதையில் நுழைய ஆரம்பித்ததும் இவிரு முடியாட்சிகளும் உடைந்து கொட்டத் தொடங்கின. இவ் அபிவருத்தி தவிர்க்க முடியாத வகையில் ஓர் தேசிய அரசினுள் பால்கன் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான கோரிக்கையை எழுப்பியது. இவை அந் நாட்களில் ஓர் முக்கியமான கோரிக்கைகளாய் இருந்தது. ஆனால் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாய் இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வளர்ச்சியடைந்ததும் அது ஐரோப்பாவின் மீதும் பால்கனின் மேலும் கொண்டிருந்த நேரடியான ஆளுமையானது இக்கோரிக்கையின் அபிவிருத்திக்கு தடையாய் இருந்ததுடன் யுத்தமெனும் ஓர் கொடூர பேரழிவினுள் அப்பிராந்தியம் முழுவதையும் அமிழ்த்தியது.

1912இன் நடுப்பகுதியில் சேர்பியா, கிறீஸ், பல்கேரியா, மொன்ரேநிக்ரோ போன்ற "பால்கன் கழக" நாடுகள் துருக்கி சாம்ராஜ்யத்தை ஐரோப்பாவிலிருந்து வெளியேற்றுவதற்கான ஓர் இணைந்த யுத்தத்தை நடாத்த ஓர் தொடர் இராணுவ இணக்கங்களையும், உடன்படிக்கைகளையும் தமக்கிடையே செய்து கொண்டன.

யுத்தம் உத்தியோகபூர்வமாய் 1912 ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகியது. இரு மாதங்களில் துருக்கி இராணுவரீதியாக திவால் அடைந்ததுடன் தற்போதைய எல்லைப் பிராந்தியத்தினுள் விரட்டியடிக்கப்பட்டது. துருக்கியின் ஆட்சியின் கீழ் இருந்த அல்பானியாவையும், மசடோனியாவையும் "பால்கன் கழகம்" கைப்பற்றுவதில் வெற்றி பெற்றது.

இறுதியாக "அமைதிக்கான" காலம் வந்தது. ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகளின் தலைமையின் கீழ் பால்கன் பிராந்தியத்தின் எல்லைகளை வரைவதற்கான "அமைதி" மகாநாடு ஒன்று லண்டனில் 1913ன் ஜனவரியில் கூட்டப்பட்டது. அம்மகாநாட்டின் தீர்மானங்களுடன் துருக்கி உடன்படாததால் அது ஓர் முட்டைக்கோதைப் போல் நொருங்க நேர்ந்தது. இதனால் ஜனவரி முடிவில் கடும்போர் பால்கனில் மீண்டும் ஆரம்பமாகியது. ஆனால் துருக்கி இராணுவத்தின் தொடர்ந்த தோல்வி "அமைதி உடன்படிக்கைகளில்" கையொப்பமிடுவதைத் தவிர்ந்த வேறெந்தவொரு பிரதியீட்டையும் அதன் முன் விட்டு வைக்கவில்லை. 1913 மேயில் ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகளின் "முயற்சியால்" மீண்டும் ஓர் உடன்படிக்கை லண்டனில் உருவாக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் அடிப்படையில் அல்பானியா பால்கன் கழகத்தின் பிடியிலிருந்து "விடுதலை" செய்யப்பட்டது.

ஏகாதிபத்திய சக்திகளின் அழுத்தங்களின் கீழ் அனைத்து பால்கன் நாடுகளும் இப்புதிய உடன்படிக்கைமேல் தமது பேனாவை வைத்தன. ஆனால் எந்தவொரு பால்கன்நாடும் இப்புதிய உடன்படிக்கையை எண்ணி திருப்திப்படவில்லை. இதனால் கையெழுத்திட்ட மை காயுமுன்பே இப் புதிய ஒப்பந்தமும் உடைந்து போனது. இவ் ஒப்பந்தம் தொடர்பாய் "பால்கன் கழக நாடுகளிற்கிடையே ஏற்பட்ட அதிதிருப்தி இரண்டாவது பால்கன் யுத்தத்திற்கான பச்சைக் கொடியைக் காட்டியது.

அல்பானியா பால்கன் கழகத்திடமிருந்து "விடுதலை செய்யப்பட்டது" பால்கன் புதிய முதலாளித்துவ ஆட்சிகளின் பிரதேச கைப்பற்றல் இலக்கிற்கு உடனடி தடையாகியது. இதனால் சேர்பியாவும், கிறீசும் தமது பீரங்கிகளையும், சுழல் துப்பாக்கிகளையும் மிகுதியாய் இருந்த மசடோனியாவின் இலக்கை நோக்கித் திரும்பின. முதல் பால்கன் யுத்தத்தின் முன்னைய ஒப்பந்தங்களின் படி மசடோனியா ஏற்கனவே பல்கேரியாவிற்கு வழங்கப்பட்டிருந்தது. 1913 யூன் மாத இறுதியில் எதுவித முன்னறிவிப்புமில்லாமல் மசடோனியாவில் இருந்த சேர்பிய, கிறீஸ் படைகளின் மேல் பல்கேரிய இராணுவம் நடாத்திய நள்ளிரவு தாக்குதலுடன் இரண்டாவது பால்கன் யுத்தம் ஆரம்பமாகியது.

பல்கேரிய இராணுவத்தின் தாக்குதலிற்கு "வெற்றிகரமான" எதிர்தாக்குதலால் பதிலளிக்கப்பட்டது. தொடர்ந்த இராணுவத் தோல்விகளால் நசுக்கப்பட்ட பல்கேரியா துப்பாக்கிக்கு பதிலாய் இம்முறை வெள்ளைத் துணியை

படிப்பகம்

www.padippakam.com

தெரிவு செய்ய வேண்டியிருந்தது. இறுதியாக பால்கனின் புதிய எல்லைகள் தொடர்பான விவாதத்தில் 1913 ஒகஸ்ட்10ல் ருமேனியாவின் தலைநகரம் புகாரெஸ்ரில் ஒழுங்கு செய்யப்பட்ட "அமைதி மகாநாடு" ஒன்றில் யுத்தத்தில் ஈடுபட்ட இம்மூன்று அரசுகளும் ருமேனியாவின் தலைமையின் கீழ் இணைந்து பங்கு பற்றின. இம்மகாநாட்டின் உண்மையான தன்மையை மிக சுருக்கமான முறையில் பின்வருமாறு வெளிப்படுத்தலாம். சேர்பியாவும், கிரீசும் மசடோனிய பிராந்தியத்தை மிண்டி விழுங்க இவ் அமைதி மகாநாடு தண்ணீர் வழங்கியது.

துருக்கியின் இராணுவ ரீதியான திவாலும் அதன் செலவில் பால்கன் அரசுகள் தம்மை பலப்படுத்தி கொண்டதும் ஒஸ்ரிய-கங்கேரி முடியாட்சியின் வீழ்ச்சி சக்கரத்திற்கு நீர் வார்த்தன. உலகில் உள்ள ஏனைய அனைத்து முதலாளித்துவ ஆட்சிகளையும் போலவே ஒஸ்ரியா முடியாட்சியும் வீழ்ச்சியடையும் தனது ஆட்சியை பாதுகாக்க இராணுவவாதத்தையே தேர்ந்தெடுத்தது. இறுதியாய் 1914 யூன்28ல் சறயேவோ நகரில் ஒஸ்ரியா பிரபு Ferdinand சேர்பிய தீவிரவாதியால் கொலை செய்யப்பட்டார். இதனால் ஒஸ்ரியா, சேர்பியாவின் மேல் தொடர்ந்த ஆத்திரமூட்டல்களை மேற்கொண்டது. ஆறு கிழமைகளின் பின் இந்நிகழ்வுகள் முதலாம் உலகப்போரிற்கு இட்டு சென்றன.

சேர்பிய, ஒஸ்ரியாவிற்கிடையேயான சச்சரவின் பின் ஐரோப்பாவின் "பெரும்" முதலாளித்துவ தேசங்கள் இரு முகாம்களாய் பிளவுபட்டு நின்றன. சேர்பியாவிற்கு பிரான்ஸ், பிரித்தானியா ஆதரவழித்தன. சேர்பிய முதலாளித்துவம் தனியே "ஜனநாயக" ஏகாதிபத்திய சக்திகளின் ஆதரவை மட்டுமல்ல உலகிலேயே மிகவும் வெறுக்கத்தக்க காட்டுமிராண்டி ஆட்சியான ரஷ்யா சாரின் ஆட்சியின் உதவியையும் வேண்டி கீழ்கண்ட தந்தியை அதற்கு அனுப்பி வைத்தது. "எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலையில் உள்ளோம். இதனால் நமக்கு விரைவான முறையில் உதவியழிக்க உங்களது மாட்சிமை தாங்கிய ஆட்சியை கோருகின்றோம். இக் கோரிக்கை உங்களது பரந்த ஸ்லாவிய இதயத்தில் பிரதிபலிக்குமென நம்புகின்றோம்." (D.R.Razumovsky, Chaos Jugoslawien பக்கம் 46) சேர்பிய முதலாளித்துவத்தின் கோரிக்கை சாரின் "பரந்த ஸ்லாவிய இதயத்தில் பிரதிபலித்ததால்" ரஷ்யாவும் அதனுடன் இணைந்து கொண்டது. அதே வேளை ஒஸ்ரியா வரிசையின் பின்னால் ஜேர்மனி, இத்தாலி, கங்கேரி நின்றன. இவ் வெறுப்படைந்த இரு முதலாளித்துவ குழுக்களிடையே நடாந்த நான்கு வருட யுத்தத்தில் எட்டு மில்லியனிற்கதிகமானோர் போர்க் களங்களில் பிரேதமாக்கப்பட்டனர்.

முதலாம் உலகயுத்தம் இந்த, அந்த சர்வாதிகாரிகளால் உருவாக்கப்பட்டதொன்றல்ல. மாறாக அது உலக முதலாளித்துவ அமைப்பு முறையின் அடிப்படை முரண்பாடாகிய உலகப்பொருளாதாரத்திற்கும், தேசிய அரசிற்குமிடையேயான இணக்கம்காணமுடியாத முரண்பாட்டின் வெளிப்பாடாகும். இந் நூற்றாண்டின் மனித வரலாற்றில் பாரிய மக்கள் படுகொலையொன்றை முதலாளித்துவம் நடாத்தி முடித்தபின் பால்கன் பிராந்தியத்தின் புதிய எல்லைகள் அதன் நலன்களிற்கேற்ப மீண்டும் வரையப்பட்டது. 1919ல் சேர்பிய முதலாளித்துவத்தின் ஆளுமையின் கீழ் ஸ்லாவிய மக்கள் யூகோசிலாவியா எனும் தேசிய அரசினுள் கொண்டுவரப்பட்டனர். ஆனால் பால்கன் முதலாளித்துவம் ட்ரொஸ்கி குறிப்பிட்டதுபோல் பின்வருமாறு இருந்தது. "மிகுதி எல்லா நாடுகளிலும் போலவே முதலாளித்துவ அபிவிருத்தியின் பாதையில் மிக தாமதமாய் நுழைந்ததால் அது அரசியல் மலடானது., கோழைத்தனமானது பயந்ததுடன் தேசிய வெறியினுள் மேலும், மேலும் வேர்விட்டுள்ளது." இச் சிறப்பான காரணத்தினால்தான் ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்படும் தேசிய பிளவுகளையும், சதித் திட்டங்களையும் உடைத்து ஓர் ஐக்கியப்பட்ட பால்கன் குடியரசின் பாதையின் கீழ் அப்பிராந்திய மக்களை இட்டுச் செல்ல முடியாது.

இதனால்தான் பால்கன் மக்கள் ஐக்கியத்திற்கான கோரிக்கை எழுப்பிய போதெல்லாம் அப்பிராந்திய முதலாளித்துவ ஆட்சிகள் அதன் விளைவுகளை கண்டு அஞ்சி "தம்மை தாமே பாதுகாத்துக்கொள்ள" மிக கொடூரமான அனைத்து ஆட்சிகளுடனும் கூட்டுச் சேருகின்றனர்.( L. Trotsky The Balkon Wars Page 40)

படிப்பகம்

www.padippakam.com

பால்கன் முதலாளித்துவத்தினதும், விசேடமாய் சேர்பிய, குரோசிய முதலாளித்துவத்தின் முழுமையான அரசியல் வங்குரோத்து இரண்டாம் உலகயுத்த காலப்பகுதியில் மிக தெளிவாய் மேல்மட்டத்தை வந்து அடைந்தன. குரோசியா முதலாளித்துவத்தால் நாசி ஜேர்மனியின் ஆதரவுடன் Ustacha இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு அதனிடம் ஆட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. சேர்பிய முதலாளிகள் பழைய முடியாட்சி இயக்கமான Tschetniks ஐ மறுசீரமைத்தனர். இவ்விரு இயக்கங்களும் பாரிய இனப்படுகொலையை அப்பிராந்தியத்தில் ஒழுங்கு செய்தன.

இறுதியாக ரீற்ரோவின் தலைமையிலிருந்த யூகோசிலாவிய கம்யூனிசக் கட்சியின் கீழ் அணிதிரண்ட அனைத்துத் தேசியஇனங்களையும் சார்ந்த தொழிலாளர், விவசாயிகளின் புரட்சிகர இயக்கம் சேர்பிய, கரோசியாவிலிருந்து பாசிச சர்வாதிகார ஆட்சிகளை தூக்கியெறிந்ததின் மூலம்து ஆட்சியை கைப்பற்றுவதில் வெற்றியடைந்தது. ஆட்சியை கைப்பற்றிய யூகோசிலாவியாவின் கம்யூனிஸ்ட் கட்சி அந்நாட்டின் பொருளாதார, சமூக கட்டுமானங்களில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியது. முதலாளிகளிடமிருந்து சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு தேசியமயமாக்கப்பட்டதுடன், மத்திய திட்டமிடலின் அடிப்படையில் பொருளாதாரம் ஒழுங்கு செய்யப்பட்டது. ஆனால் ரீற்ரோ குரோசிய, சேர்பிய தேசியவாதத்திற்கு முடிவு கட்டவில்லை., மாறாக "தனிநாட்டு சோசலிசம்" எனும் தேசியவாத வேலைத்திட்டத்திற்கு பிரதியீடு செய்தார். வேறு வார்த்தைகளில் ஏகாதிபத்திய சக்திகளாலும், ஸ்டாலினாலும் யால்டா, போஸ்டாம் உடன்படிக்கைகளில் உருவாக்கப்பட்ட பால்கனின் தேசியஅரசுகளும், புதிய எல்லைகளும் ரீற்ரோவினால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1940களின் இறுதியில் ரீற்ரோவிற்கும் ஸ்டாலினிற்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டபோது நான்காம்அகிலத்தின் அமெரிக்கப்பிரிவு மூன்று பிரதியீடுகளை யூகோசிலாவிய கம்யூனிஸ்ட்கட்சியின் முன் வைத்தது. ஒன்று ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்து போவது, மற்றையது கிரம்ளின் ஸ்டலினிச அதிகாரத்துவத்துடன் இணைவது அல்லது சர்வதேசமுன்னோக்கின் அடிப்படையில் பாலகன் சோசலிச குடியரசினுள் அனைத்து தேசியஇனங்களையும் ஐக்கியப்படுத்துவது

ஆனால், ரீற்ரோ ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியும் பாதையையே தெரிவு செய்தார். இது 1956 கங்கேரியப் புரட்சி மூலம் மேலும் தெளிவாய் அம்பலமாக்கியது. 1956ல் கங்கேரிய தொழிலாளர்கள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கெதிராய் எழுச்சியை மேற்கொண்டபோது அதை "எதிர்புரட்சி பிற்போக்குகாரர்களின் கிளர்ச்சி" என வர்ணிக்கும் கட்டுரைகளை மேற்கத்தைய முதலாளித்துவப் பத்திரிகைகளில் ரீற்ரோ எழுதி குவித்தார். இறுதியில் கங்கேரியினுள் சோவியத் இராணுவம் தலையிட்டு தொழிலாளர்களின் மேல் பீரங்கிகளை ஏற்றி நசிப்பதற்கான முழு ஆதரவும் ரீற்ரோவினால் வழங்கப்பட்டது. ஐக்கியநாடுகளின் பாதுகாப்புசபையில் கங்கேரியினுள் சோவியத் இராணுவம் தலையிடுவது தொடர்பான வாக்கெடுப்பில் யூகோசிலாவிய கம்யூனிஸ்ட்கட்சியின் பிரதிநிதிகள் சார்பாக வாக்களித்தனர். வேறுவார்த்தைகளில் கூறினால்- ரீற்ரோ, ஸ்டாலினிற்கிடையே ஏற்பட்ட தனிப்பட்ட உறவுகளின் உடைவும் அரசியல் வேலைத்திட்டத்தில் பொதுவான உடன்பாடும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களை போன்றது.

1980களின் ஆரம்பத்தில் ரீற்ரோவின் ஸ்டாலினிச அதிகாரத்துவம் மிக பகிரங்கமாய் ஏகாதிபத்திய வங்கிகளினதும் சர்வதேசநாணயசபையின் பக்கமும் திரும்பியதுடன், முதலாளித்துவ மறுசீரமைப்பு கொள்கையை முன்னெடுத்தது. இதற்கு, தொழிலாளவர்க்கத்திடமிருந்து பாரிய எழுச்சி வளர்ச்சியடையும்போது அதை பிளவுபடுத்த ஸ்டாலினிச அதிகாரத்துவம் தேசியவாதத்தின் மூலமாய் "பிரித்து ஆளும்" கொள்கைக்கு திரும்பியது. இதன்போது ரீற்ரோவின் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் ஒவ்வொரு பிரிவும் தம்மை புதிய முதலாளித்துவ வர்க்கமாய் மாற்றிக்கொள்ளவும், தமது "சொந்த தேசியஇனத்தை" நேரடியாய்ச் சுரண்டும் நிலையை,அடையவும் ஏகாதிபத்திய சக்திகளுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொண்டனர்.

இதற்கு சிறப்பான உதாரணம்

படிப்பகம்

குரோசியாவில் தற்போதைய ருஜ்மன் ஆட்சியாகும் ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக இயங்கும் ருஜ்மன் முன்னைய யூகோசிலாவியமக்கள் இராணுவத்தின் தலைமைத் தளபதியும் உம் ரீற்ரோவின் நெருங்கிய ஒத்துழைப்பாளரும் ஆவார். இதே தன்மையைதான் அங்குள்ள ஒவ்வொரு குடியரசின் ஆட்சியாளர்களும் கொண்டுள்ளனர். ஸ்டாலினிசம் சர்வதேச தொழிலாளவர்க்கத்தின் அரசியல் நனவின்மேல் ஏற்படுத்திய பாரிய பாதிப்பினால் மட்டுமே, ருஜ்மன் மிலோசேவிச் போன்ற தேசியவெறிக்காடையர்கள் ஆட்சி அதிகாரத்தை எடுக்கவும், முழுச் சனத்தொகையையும் வேட்டையாட கூடியதாய் இருந்தது. இவர்களின் தலைமையிற் கீழுள்ள சிறிய, சிறிய குடியரசுகள் பொருளாதார ரீதியாய் மிக பலவீனமானவை., அரசியல் ரீதியாய் முழுமையான வங்குரோத்தானவை.., வரலாற்றுரீதியாய் காலாவதியானவை. தீவிரமடைந்து செல்லும் உலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியின் மத்தியில் பால்கனில் நிறுவப்பட்ட புதிய குடியரசுகள் ஏகாதிபத்தியத்தின் காலனிகளாகவும், புதிய யுத்தங்களிற்கான போர்களங்களாகவுமே மாற்றமடைந்து வருகின்றது.

பொஸ்னியா உள்நாட்டு யுத்தம் தொழிலாளவர்க்கத்தை தேசியவாதமுன்னோக்கிற்கு அடிபணிய வைப்பதால் ஏற்படும் மிகக் கசப்பான விளைவுகளை எடுத்துக்காட்டியுள்ளது. தொழிலாள வர்க்கம் தனது சொந்த சர்வதேசிய முன்னோக்கின் அடிப்படையில் ஏகாதிபத்தியத்தினதும், தேசியவாதிகளினதும் காட்டுமிராண்டித் திட்டங்களிற்கு எதிராய் தலையிட வேண்டும். அது தனது போராட்டங்களை சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சர்வதேசரீதியாய் ஐக்கியப்படுத்தி முதலாளித்துவத்தையும், காலாவதியாய்ப்போன தேசியஅரச அமைப்பையும் தூக்கி எறிவதனூடாய் இருபதாம் நூற்றாண்டின் அனைத்து பாரிய வரலாற்று பிரச்சனைகளிற்கும் தீர்வை காணவேண்டும்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com




## Subscribe Today!

**THE INTERNATIONAL WORKERS BULLETIN**

- ❑ $5 for 5 issues
- ❑ $10 for 2 months
- ❑ $25 for 6 months
- ❑ $48 for 1 year

Enclosed is my contribution of $ ________ to the $100,000 IWB Fund

Name ______________________________

Address ______________________________

City ____________________ State ______ Zip ________

Phone ______________ Union or School ______________

Mail to: Workers League, PO Box 5174, Southfield, MI 48086

The International Workers Bulletin
நான்காவதுஅகிலத்துடன் ஐக்கியம் கொண்ட அமெரிக்க தொழிலாளர் கழகத்தினால் (Workers League) வெளியிடப்படுகின்றது.

www.padippakam.com


neue ARBEITER PRESSE

In dieser Ausgabe

Freispruch im Sachsenhausen-Prozeß:

Justiz deckt Neonazis

Gab es eine Alternative zum Stalinismus?

70 Jahre seit Gründung der Linken Opposition

Berlin-Wedding

Gewinnt 1000 neue Leser für die neue Arbeiterpresse! – Informationen auf Seite 12

# Abonniert die neue ARBEITER PRESSE

## Wochenzeitung des Bunds Sozialistischer Arbeiter

- ○ **Ich möchte die *neue Arbeiterpresse* ab Nr. ...... kennenlernen.** Für 4 Ausgaben zahle ich DM 5,-
- ○ **Ich möchte die *neue Arbeiterpresse* ab Nr. ...... abonnieren** Für ein Jahr (52 Ausgaben) zahle ich
  ○ DM 65,- (BRD) ○ DM 85,- (Europa)
  Für ein halbes Jahr (26 Ausgaben) zahle ich
  ○ DM 35,- (BRD) ○ DM 45,- (Europa)

---

Name, Vorname

---

Straße, Hausnummer

---

Postleitzahl, Ort

---

Unterschrift

Ich weiß, daß ich die Abonnement-Bestellung innerhalb von 7 Tagen gegenüber der *neuen Arbeiterpresse* widerrufen kann, und bestätige dies durch meine 2. Unterschrift. Zur Wahrung der Frist genügt die rechtzeitige Absendung des Widerrufs (Datum des Poststempels).

---

Datum, Unterschrift

○ **Ich habe DM ............ auf Konto 21 185 – 431 bei der Postbank Essen überwiesen, Bankleitzahl 360 100 43**

**Bestellungen an *neue Arbeiterpresse*, Postfach 10 01 05, D-45001 Essen**

# Arbeiter Presse

நான்காவது அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் ஜேர்மன் பிரிவின் வாரப்பத்திரிகை.

படிப்பகம்

www.padippakam.com




**கம்கறுமாவத்த**

தொழிலாளர்பாதையின் சகோதர வெளியீடு.

படிப்பகம்

www.padippakam.com




**சந்தா விபரங்களுக்கு:**

**Thollilalar Pathai**
**Postfach 1609**
**74306 Bietigheim-Bissingen.**

படிப்பகம்

www.padippakam.com

# மார்க்சிச முன்னோக்கு

சர்வதேச தொழிலாளவர்க்கத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரொக்சிய சஞ்சிகை

## சோவியத்யூனியனின் முடிவும் சோசலிசத்தின் எதிர்காலமும்

## "சிந்தனை" பத்திரிகையின் பப்லோவாத முகமூடி கிழிகின்றது

## யூகோசிலாவியாவின் உள்நாட்டுப் போரின் பின்னணியில்

நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினது வெளிநாட்டுக் கிளையின் வெளியீடு

இதழ் 1 இலக்கம் 1 ஆனி 1992

**மார்க்சிச முன்னோக்கு**

புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்தின் வெளிநாட்டுக்கிளையினால் வெளியிடப்படுகின்றது.

மூன்றுமாதங்களுக்கு ஒரு பிரதி.

தனிப்பிரதி விலை- DM6.-

தபாற்செலவு உட்பட

நான்கு பிரதிகளுக்கான வருடச்சந்தா. DM32.-

படிப்பகம்

www.padippakam.com

# தோட்டத் தொழிலாளரைக் காப்பாற்று!

சோஷலிச வேலைத்திட்டத்திற்காக போராடு!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக
அரசியல் குழுவின் அறிக்கை
1988 ஜூலை 22

தொழிலாளர் பாதை வெளியீடு


விலை DM 3.-

**தோட்டத்தொழிலாளரைக் காப்பாற்று!**
**சோசலிச வேலைத்திட்டத்திற்காகப் போராடு!**
புரட்சிக்கம்யூனிஸ்ட்கழக அரசியல் குழுவின் அறிக்கை.

தொழிலாளர்பாதை வெளியீடு.
பக்கங்கள் 15.
விலை 3.00 DM

படிப்பகம்

www.padippakam.com




**ஏகாதிபத்திய யுத்தத்தையும், காலனித்துவத்தையும் எதிர்!**

**நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்.**

தொழிலாளர் பாதை வெளியீடு.

விலை DM2-

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

***Contact and Correspondence:***


| | |
|---|---|
| **GERMANY** | Marxist Perspective, Postfach 1609, D-74306 Bietigheim-Bissing<br>Bund Sozialistischer Arbeiter, Postfach 10 01 05, D-45001 Essen<br>Telefon (0201) 75 54 75, Fax (0201) 77 02 85 |
| **SRI LANKA** | Revolutionary Communist League, 90, 1st Maligakanda Lane, Colombo 10 |
| **INDIA** | Socialist Labour League, PO Box 968, Madras - 600 012 |
| **BRITAIN** | International Communist Party, PO Box 71, Rotherham, South Yorkshire S60 1SU |
| **CANADA** | International Workers Party, PO Box 5534, Station „B" Montreal, PQ, H3B 4P1 |
| **USA** | Workers League, PO Box 5174, Southfield, MI 48086 |
| **AUSTRALIA** | Socialist Labour League, PO Box 7, Marrickville, NSW 2204 |


**ISSN 0942-525X / DM 6,-** படிப்பகம்